உ

கடவுள் துணை

புகழேந்திப்புலவர் இயற்றிய

மின்னொளியாள் குறம்

அமரப்பேடு. இராஜரத்தின முதலியார்
மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1952 [ரூ 1-4-0

நெ-23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

கிடைக்குமிடம்:- சரஸ்வதிபுக்டிபோ 175-செட்டியார்தெரு, கொழும்பு

0-727GPU,M
N52
102162

சரஸ்வதி புத்தகசாலை

நெ. 175, செட்டியார்தெரு, கொழும்பு

சொற்ப விலை! பிரமாத விஷயம்!

இவ்வுலகில்
சகல மதத்தவரும் தத்தம் பாஷையில் மொழி பெயர்த்துப் போற்றும் அரிய நூல்.

பாரதப் போரில் சோர்வுற்ற பார்த்தனுக்குப் புத்துயிரளிக்கப் பகவானல் உபதேசிக்கப் பெற்ற தெய்வீக நூல்

அஞ்ஞானத்தைப் போக்கி
மெய்ஞ்ஞானம் புகட்டவல்ல நூல்

தத்வ நாமங்களும் ஆங்கில விளக்கமும் சேர்ந்துள்ள

280-பக்கங்கள் கொண்ட

ஸ்ரீ பகவத்கீதை
வசனம்

கீதா உபதேசப் படத்துடனும்
விஸ்வரூப தரிசனப் படத்துடனும்
அழகிய கலிகோ பைண்ட் செய்தது.

ஸ்ரீ சங்கரபாஷியத்தைத் தழுவி இலக்கணப் பொருத்தத்துடன் வினுவுத்தரமாகப் பல குறிப்புகளைக் காட்டி, தெள்ளிய வசன நடையில் எழுதப்பெற்றது.

இதன் விலை ரூபா 4 0 0
தபாற் சிலவு வேறு

உங்கள் ஓய்வு நேரங்களில் வீண் பொழுதைப் போக்காமல் அறிவு தரக்கூடிய அரிய தமிழ் நூல்களை வாசித்து மகிழுங்கள்.

அறிவு தரக்கூடிய அநேக அரிய தமிழ் நூல்கள் எங்களிடத்தில் எப்பொழுதும் விற்பனைக்கு தயாராகவே இருக்கிறது.

எமது புத்தகசாலையின்
அரிய தமிழ் நூல்களின் விலைப்பட்டி
வேண்டுவோருக்கு இனமாக அனுப்பப்படும்.

உ

கடவுள் துணை

மின்னொளியாள் குறம்

விநாயகர் தோத்திரம்

ஐந்துகரத்தோனே அருள்சடையாள்புத்திரனே
கந்தருக்குமுன்பிறந்த கருணைப்பெருங்கடலே
வேறுவினைவாராமல் விநாயகரேமுன்னடவீர்
ஆதிசிவன்தன்மகனே ஆயன்மருகோனே
பேழைவயிற்றோனே பெருமாள்மருகோனே
முன்னடக்கும்பிள்ளையர்க்கு கண்ணடக்கப்பொன்னாலே
முத்தானதண்டைகொஞ்ச முன்னடவும்பிள்ளையாரே
பாட்டுக்குகந்தருளும் பார்வதியாள்புத்திரனே
ஆலடியிற்பிள்ளையாரே ஐந்துகரத்தோனே
மூலமுதலேநீர் முன்னடக்கவேண்டுமையா

சரஸ்வதி தோத்திரம்

தாயேசரஸ்வதியே சதுர்முகனார்தேவியரே
சரஸ்வதியேவாணியரே தாயேவரங்கொடுப்பாய்
என்நாவிலேநீயிருந்து நல்லோசையருள்புரிவாய்
ஏடுதவறாமல் எழுத்துப்பிழைவாராமல்
தப்பிதங்கள்வாராமல் சரஸ்வதியேமுன்னடவாய்

கதையின் வரலாறு

பட்டணமாம்பட்டணமாம் இந்திராபுரிபட்டணமாம்
பட்டணத்தையாளுகிற பஞ்சவர்களைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளும்நாளையிலே
வில்வாங்கும்அர்ச்சுனனார் விசயனிடதேவியர்கள்
அர்ச்சுனனார்தேவியர்கள் ஐந்திரண்டுயேழுபேராம்
பாஞ்சாலன்பெற்றபெண்ணும் பைங்கிளியாள் துரோப
நாகராசன்பெற்றபெண்ணும் நாககன்னிமாது [தையும்
சித்தாயன்தங்கையவள் சுபத்திரைநாயகியும்
பாண்டியர்கள்பெற்றபெண்ணும் பைங்கிளியாளல்லி

மேகராசன்பெற்றபெண்ணும் மெல்லியந்தமின்னொளி
அகஸ்தியனார்பெற்றபெண்ணும் அன்பானபோகவதி
சேராம்பூராசன்பெற்ற செல்வதியாள்பவளக்கொடி
எழுலட்சம்பெண்டுகளாம் இவர்களுக்குத்தாதியர்கள்
ஆண்டிருக்கும்நாளையிலே அர்ச்சுனராசதுரை
உற்றவொருநாளில் உத்தமனும் அர்ச்சுனனார்
தருமர்தம்பியருச்சுனன் தனஞ்செயனுந்தானெழுந்து
முழுகிக்குளித்து முன்மயிரைபபின்போட்டு
பூசைமுடித்தானே பொற்பூசைதான்முடித்து
ஆடையுமாபரணம் அலங்கிர்தஞ்செய்துக்கொண்டு
மல்லிகைப்பூமாலையது மார்பில்புரண்டாட
கொற்றம்பூமன்னனுக்குக் கொண்டையிலேபூவுதிர
பொன்னிழைத்ததுப்பட்டா பூமியில்புரண்டாட
சாந்தால்மிதியடியாம் சந்தனத்தால்மேற்குமிழாம்
முத்தால்மிதியடியாம் மேற்குமிழ்கள்ரத்தினமாம்
பூவால்மிதியடியைப் போட்டுநடந்தாரே
கோட்டைகடந்தாரே கொத்தளமுந்தான்கடந்தார்
தெத்துத்தெருகடந்தார் தேரோடும்வீதிவிட்டார்
மாளிகைகடந்தாரே மன்னரிடவீதிவிட்டார்
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிவிட்டு
தெத்தடிப்பெண்களெல்லாம் தோரடிப்பெண்களெல்லாம்
ஆலஞ்சுழற்றுவார்கள் அப்புறத்தேவிட்டெறிவார்
திருஷ்டிகழித்திடுவார் திசைநான்கும்விட்டெறிவார்
கன்னிமார்பெண்களெல்லாம் கண்டாசைபெற்றார்கள்
பட்டணத்துபெண்களெல்லாம் பார்த்தாசைபட்டார்கள்
ஆகாயகன்னியர்கள் ஆசைகொண்டுநின்றார்கள்
ஏனென்றுங்கேளாமல் ஏறமுகம்பாராமல்
மின்னொளியாள்கோவிலுக்கு விருப்பமுடன்வாரானே
மின்னொளியாள்செய்கிறநன்னடையைசொல்லுகிறேன்
அன்னநடைமின்னொளியாள் அரிவையருந்தானெழுந்
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து [து
முழுகிக்குளித்தலவோ முன்மயிரைப்பின்போட்டு
கோதிமயிராற்றிக் குங்குமப்பூபுகைகொடுத்து
ஈரத்துயிலுடனே யெழுந்தாளேமின்னொளியாள்
ஆசாரவாசலிலே அன்னநடைதாதியர்கள்
பூசைக்கிடம்வைத்தாள் பொற்கொடியாள்வந்துநின்று
வட்டமணைமேலே வந்தமர்ந்துமின்னொளியும்

அரகராவென்றல்லோ அணிந்தாளேவெண்ணீறு
சிவசிவாவென்றல்லோ திருநீறுதானணிந்து
பண்ணைப்பூபோட்டுப் பகவானைப்பூசைசெய்து
புன்னைமலரெடுத்துப் பெருமாளைப்பூசைசெய்து
கண்ணிரண்டுமூடியல்லோ கர்த்தன்மேல் நினைவானாள்
ஆதிசிவனைநோக்கி அரன்பூசைசெய்திருந்தாள்
அந்தச்சமயத்தில் அர்ச்சுனரும்வாராரே
மின்னொளிகோட்டைதேடி விசயரும்வாராரே
பத்துகட்டுஅரண்மனையும் பார்த்திபன்தான்கடந்து
ஆசாரவாசல்தேடி அருச்சுனரும்வாராரே
மின்னற்கொடியாள் மெல்லிநல்லாள்பூசையிலே
சித்திரப்பதுமையைப்போல் செல்வதியாள் நிற்கிறதை
காண்டீபனருச்சுனரும் கண்டாரேகன்னியரை
சூரியனைப்போலேயல்லோ துலங்குகிறாள்கன்னியரும்
உற்றுற்றுப்பார்த்தானே ஒளிபிறந்தகண்ணாலே
கண்ணாலேபார்க்கையிலே காமரூபனருச்சுனற்கு
மன்மதனெய்தகணை மார்புருகிப்போகிறதாம்
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகிறதாம்
ஆருருகுபாணமது மார்புருகிப்போகிறதாம்
ஆணழகுமன்னன் அர்ச்சுனவீரியரும்
அவள்-பக்கத்தில்வந்துநின்று பார்த்திபனருச்சுனரும்
நின்றானரைநாழி நினைத்தானேகோடியுத்தி
பொறுத்துமுடிவதில்லை பொங்குதுதேகமெல்லாம்
ஏண்டிபெண்ணேமின்னொளியே யிந்நேரம்நிற்பேனோ
ஆசையெல்லாமுன்மேல் அலையுதேயென்னசெய்வேன்
என்னிலும்பூசையென்ன யேந்திழையேயுந்தனுக்கு
பத்தாநானிருக்கையிலே பரமன்பூசையுனக்கேண்டி
என்று-தாவியணைத்து சரசங்கள்செய்யலுற்றான்
அப்போகோபம்பெருகிக் கொம்பனையுந்தான்சீறி
மதிப்பற்றுபோச்சுதோதான் வாள்விசயாவுந்தனுக்கு
நான்-அர்ச்சனைசெய்து அரனைநினைந்துருகி
பூசையில்நானிருக்கப் போர்விசயாவுந்தனுக்கு
புத்தியில்லாமற்போச்சோ போர்விசயாவுந்தனுக்கு
அப்படிக்கொற்ற அர்ச்சுனனே நீயெனக்கு
ஏதுக்குதவியென்று யினிவேண்டாமுன்னுசை
வேண்டாமென்றுசொல்லி விருதெடுத்துதிவைத்தாள்
ஆகாதவனென்று அருச்சுனனைஉவதிவைததாள்

அன்றுமுதலின்றளவும் அருச்சுனரும்வாரதில்லை
அன்றுமுதலாக அருஞ்சிறையில்தானிருந்தாள்
துரோபதை தன் தாதியிடத்தில் அர்ச்சுனன்
தேவிகளை விருந்துக்கு அழைத்துவரச் சொன்னது
அப்படியாக அனேகநாட்சென்றபின்பு
மாதொத்தமங்கையர்கள் மயலணையாள் துரோபதையும்
தோராவடிவழகி துரோபதையுங்கூறிடுவாள்
வாள்விசயனருச்சுனற்கு மங்கையர்களாயிரமாம்
சொல்லிமுடியாது சுந்தரிமாராயிரம்பேர்
கூறவுங்கூறி முடியாதுகொம்பனைமார்
பாலானமேனிப் பனிப்பூங்குழலாளும்
பொன்னானமேனிப் புதுப்பொன் மடந்தையரும்
சொர்னவடி வழகியரும் சோழன்மடந்தையரும்
ஆறெங்குமோதும் அகஸ்தியனார்பாவையரும்
அங்கமலர்பூவில் அவதரித்த அல்லியரும்
சங்குடையான் தங்கை சுபத்திரைநாயகமும்
பரிவானமங்கையரைப் பார்த்தந்தபாஞ்சாலி
சிறுசோறமுதுண்ணுந் தேன்மொழிமாரெல்லவரும்
தோராவடிவழகி துரோபதைநாயகியும்
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக்கி
முத்தின்கவரியிடும் மூப்பின்முகம்நோக்கி
அந்த-ஆனைலழகுமன்னன் அர்ச்சுனர்தேவிகளை
அத்தனைபேரையும் அழைத்தோடிவாருமென்றாள்
அப்படியேயென்னாச்சி அழைத்தோடிவருவேனென்று
ஆரிழையாந்தாதி அதிவேகமாய்நடந்து
சித்திரவீதி தெருவும்பலகடந்து
தேரோடும்வீதி தெருவும்பலகடந்து
மூததணிந்தவாசல் முகப்பிலேபோய்நின்று
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகத்தை
தாமக்குயிலாளுந் தாதிபோய்தெண்டனிட்டாள்
வைகைவளநாடி மாதவம்போல்போய்நடந்து
நீ-ஆருடையதாதி அறியவுரையுமென்றாள்
நான்-ஆருடையதாதியல்ல அடியேன் திருப்பணிதான்
தென்மதுரையாளுகிற தேன்மொழியேவிண்ணப்பம்
அன்னமேகேளீர் அடியேன்வாய்விண்ணப்பம்
எங்கள்-தேன்மொழியாள்கோவிலிலே விருந்தமுதுண்ப
அஞ்சலருமும்மை அழைத்துவரச்சொன்னார்கள் [தற்கு

அர்ச்சுனன்தேவிகள் துரௌபதையிடம் வந்தது

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் தான்கேட்டு
விருந்தமுதென்றுசொல்ல மெல்லியருஞ்சம்மதித்து
அவள்-பச்சைக்கடகம் பவழத்தாலாபாரணம்
தங்கத்தினுலே சரப்பளிகோர்வையுடன்
தாளிப்பதக்கமும் சன்னற்பின்னற்ருழ்வடமும்
இசைந்தநல்லபாவாடை இளமாதுளம்பட்டுடுத்தி
மாணிக்கத்தண்டிகை வருகவருகயென்ருள்
வாவென்றுசொல்லவே தண்டிகைகொண்டுவந்தார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கோவிலிலே
மாணிக்கத்தண்டிகைமேல் ஏறியந்தமெல்லியரும்
வந்துபுகுந்தார்கள் மெல்லியர்களெல்லோரும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் நாயகியும்
நீராடுமண்டபத்தை சென்ருர்கள்நேரிழைமார்
முல்லையரும்பெடுத்து மெல்லியர்கள்பல்விளக்கி
வாயோடுபல்லும் மதிமுகமுந்தான்கழுவி
ஆடைகளைந்து ஆபரணந்தான்களைந்து
சிவசங்கராவென்று ஸ்நானமதுசெய்தார்கள்
ஆசாரமண்டபத்தே வந்தாரணியிழைமார்
மாதின்குழல் நீண்ட வல்லமடமாதர்
சீவியமயிராற்றி சந்தனப்டகைகொடுத்து
ஒவ்வொருமயிருக்கும் ஒவ்வொருபொன்னிதழும்
மாணிக்கச்சீப்பாலே வாரிமயிர்முடித்து
ஆயிரம்பொன்பெற்ற அணிவயிரந்தான்முடித்து
மருக்கொழுந்துவைத்து முடித்தார்வலமாக
ஆபரணப்பெட்டி அணியிழைமார்தான் திறந்தார்
விலைமதிக்கப்போகாது மெல்லியர்கள்தன்பதக்கம்
பூட்டியலங்கரித்துப் பொற்கைவளநாட்டியர்கள்
மாணிக்கத்தண்டிகையின்மேல் யேறியந்தமெல்லியரும்
மங்கலவீதியிலே வந்தாரேமாதரெல்லாம்
இதில்-விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்மெல்லி [யரும்
கலங்குமனதுடனே காரிழையாள் நாயகியும்
திலதமணியாமல் செஞ்சாந்துபொட்டுமிட்டாள்
கூந்தல்முடியாமல் கொம்பனைமின்னொளியாள்
பலவிதமாக முடிந்தந்தமெல்லியரும்
பைங்கிளியாளும் பல்லக்கின்மீதேறி

அந்த-வேல்பொருதுங்கண்ணாளும் வீதிபுறப்பட்டாள்
மின்னொளியாள் தாதியரும் மெத்தமனஸ்தாபமாய்
ஆச்சிமாரெல்லாம் அனுபோகியாயிருக்க
நம்மிட-ஆச்சிசிறையிருக்க யார்செய்தபாவமென்றாள்
என்று-எல்லோருங்கூடி யேகமாய்த்தாடைந்தார்
கவியர்கவிபாட கட்டியங்களார்பரிக்க
கீதமெடுத்துரைக்க கின்னரிகள் மீட்டிவர
மேளம்புடைசூழ வீராணந்தான்முழங்க
பட்டுக்குடைகள் பவழநெடுங்குடைகள்
முத்துக்குடைகள் முழுமாணிக்கப்பொற்குடைகள்
சங்கீதவெண்பரிசை யெங்கும்முழங்கிவர
மாறிப்பிரம்படிக்க மண்டபஞ்சென்றேறினார்
அன்னமுந்தாராவும் தன்னிற்பசுங்கிளியும்
கொம்பிற்பழுத்திருக்குங் கோதுபடாமாங்கனிபோல்
வில்விசயன்தேவியர்கள் மெல்லிமார்வந்தார்கள்
ஒன்றோடேயொன்று உறவணைந்துமெல்லியர்கள்
தோராவடிவழகி துரோபதையாள் தன்னடிக்கே
தேவிதிருவடிக்கே தெண்டடிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை மாமயிலாள்தாளெடுத்து
வாழ்வீர்வளர்ந்திருப்பீர் மங்கிலியமீடேற
வாள்விசயன்தன்னோடே மாறுமல்வாழ்ந்திருப்பீர்
என்றுதான்வாழ்த்தியே யேலங்கருங்குழலும்
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக்கி
மாணிக்கச்சிம்மாதனம் மங்கையற்குச்சோடியென்றாள்
மற்றுமொருபெண்களுக்கு வட்டமணைபோடுமென்றாள்
அந்த-வட்டமணைமேலே மங்கையர்கள்வீற்றிருந்தார்
சிங்காதனமேறித் தேன்மொழிமார்வீற்றிருந்தார்
அப்போ-தோராவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
அழகியபூங்கொம்பனையாள் அல்லியரைத்தான்பார்த்து
வெல்லவல்லாள்வெட்டவல்லாள் வீரவாளெடுக்கவல்லா
ள், செருக்களங்கள்தான்புகுந்து சேவகமும்பண்ணவல்
லாள், மாணிக்கவாளெடுத்துமான்வேட்டையாடவல்லா
ஆரவிளமுலையாள் அம்மானையாடவல்லாள் [ள்
நாயகியேயுன்னாட்டம் நான்பார்க்கவேணுமென்றாள்
அப்போ-தனக்குக்கவரியிடுந் தாதிமுகம்நோக்கி
அம்மானைப்பந்துகொண்டு ஆரணங்கேவாருமென்றாள்
தங்கப்பொன்னம்மானை தாதியர்கள்கொண்டுவந்தார்

ஆணிமுத்தம்மானார் அடைவுடனே கொண்டுவந்தார்
பாரித்த அம்மானார் பாஞ்சாலிகைக்கொடுத்தார்

அருச்சுனன் தேவிகள் அம்மானாடினது

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்பார்த்து
ஆரமுலையாளும் அம்மானார்தான்வாங்கி
அவள்-மார்பில்சரப்பளி மங்கையற்குத்தானசைய
குங்குமங்கள் காணொழுக கொம்பனையாளல்லியரும்
அங்கயற்கண்ணம்மை அவள்பாடியாடியே
பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிபட்டதுவும்
தக்கன் தலையறுத்து தான் நஞ்சையுண்டதுவும்
விறகுசுமந்ததுவும் வேடனெச்சில் தின்றதுவும்
நரியைப்பரியாக்கி நல்லபதமீந்ததுவும்
அந்தப்புகழ்பாடி அம்மானாடினாள்
அப்போ-தோராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
ஆரமுலையாளும் அம்மானார்தான்வாங்கி
முத்துமுகம்வியர்க்க விழிகள்சிவப்பேற
சாய்ந்தமணித்தாழ்வடங்கள் சன்னல்பின்னலற்றுவிழ
கன்னிதுயிலெடுத்துக் கானகத்தில்சென்றதுவும்
ஆழிகடலிலே அமர்ந்துபள்ளிகொண்டதுவும்
அந்தவளம்பாடி ஆடினாளம்மானார்
நற்சாந்திளமுலையாள் நாககன்னிதான்வாங்கி
சுற்றெங்கும்மாணிக்கம் சூழ்மதிலுமாணிக்கம்
கும்பத்தரையைக் குவிப்பதுமாணிக்கம்
அந்தப்புகழ்பாடி ஆடினாளம்மானார் [டுத்தாள்
அந்த-விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்கைகொ
அம்மானாடாள் பள்ளாங்குழியாடாள்
பந்துபலவாடாள் பைங்கொடியும்மின்னொளியாள்
சிந்தைகலக்கமாய்த் தானிருந்தாள்மின்னொளியாள்
ஆரணங்குமாது அகஸ்தியனார்பாவையரும்
ஆரமுலையாளும் அம்மானார்தான்வாங்கி
சந்திரனுஞ்சூரியனும் தானுதித்தபாவனைபோல்
பாந்தமுகங்களும் பார்வேந்தர்தீர்த்தங்களும்
அந்தப்புகழ்பாடி ஆடினாளம்மானார்
சோரவளநங்கை சுபத்திரையாள்தான்வாங்கி
உமையாள்தனக்கு ஒருபாகமீய்ந்ததுவும்

திங்களிளம்பிறையைச் சிரசில்தரித்ததுவும்
பொங்கவரம்பூண்டு புலித்தோலுடுத்தினதும்
சிவசங்கராவென்று தையலருமாடினள்
மற்றுமுள்ளமங்கையர்கள் வாங்கியப்போ அம்மானர்
ஆடினர்தங்களிட ஆபரணஞ்சோதிமின்ன
பாடினர்தங்களிட பஞ்சவர்ணக்கிளிபோலே
கோலங்களாடக் குழைகளசைந்தாட
கொத்துஸ்தனங்கள்ரெண்டும் குலுங்கக்குருவியர்க்க
கன்னியர்ஸ்தனங்கள்ரெண்டும் கனக்கவேவிம்மிடவே
அன்னநடைமாதரெல்லாம் ஆடினாம்மானர்
அம்மானராடி அணியிழைமார்வீற்றிருந்தார்
அந்த-தோராவடிவழகி துரோபதைநாயகியும்
தனக்குக்கவரியிடும் தாதிமுகம்நோக்கி
அடிசில்சமையுமென்றுள் ஆனந்தவாழ்மாரி

தாதிகள் சமையல் செய்தது

அந்தமொழிகேட்டு ஆரணங்குதாதியர்கள்
அடிசில்சமைக்கவென்று அல்லவருந்தாமெழுந்து
அடுப்புமெழுகுவார்கள் அட்சதைக்காப்பிடுவார்
எங்குமலங்கரித்து எத்திசையும்நீர்தெளித்து
பானைகழுவிப் பனிநீருலைவார்த்து
பாலுலைவார்த்துப் பண்பானமேல்மூடியிட்டு
வடகடலில்முத்தை வாரியெடுத்தாற்போல்
தென்கடலில்முத்தைத் திரட்டியெடுத்தாற்போல்
சின்னசம்பாதன்னரிசி தீட்டியுலையிலிட்டார்
அரிசியலம்பி அமுதுசமைத்தார்கள்
செம்பொன் அறுவாமணை தீட்டிப்பதப்படுத்தி
வாழைக்காய்கொய்வார்கள் வழுதலங்காய்காய்பரிவார்
ஈழப்பலாக்காயை இளமுள்ளுநபோக்கடிப்பார்
கனிக்கிறமாங்காயும் கருணைக்கிழங்கெடுத்து
பொற்பதமாகவே பொரிக்கறிக்குத்தானரிவார்
நந்தியென்னும்பூசனிக்காய் நான்காய்ப்பகுந்திடுவார்
கோதையர்கள் பூசனிக்காய் கொய்வார்குழம்பிடுவார்
பாவற்காய்கொய்வாரும் பயிற்றங்காய்நாருரிப்பார்
பொரிக்கறிக்காகவே புடலங்காய்கொய்திடுவார்
வாழைக்காய்வாழைத்தண்டு வாழைப்பூவாழைக்கட்டை

அவரைக்காய்பீர்க்கங்காய் ஆய்வார் அரிந்திடுவார் [ப்பி
செம்பொன்னின் அம்மியை தென்கிழக்காய்த்தான் திரு
சம்பாரங்கூட்டுவர்க்கம் தானரைத்துவைப்பார்கள்
பத்துவகைக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
நல்லபொரிக்கறியும் இராசாக்கள்போஜனமும்
வடகப்பொடிபோட்டு மணிச்சீரகம்போட்டு
காராவிநெய்வார்த்துக் கறிவேப்பிலைபோட்டு
தாளித்துஇறக்கினர் சகலபதார்த்தங்களை
மணங்கள்குமுகுமென்ன மாதர்கள்புரைக்கேற
செம்பொன்பிரியணைமேல் சேரஇறக்கிடுவார்
காச்சியபாலும் கச்சாயமுப்பழமும்
அடிசில்சமைத்துவைத்து அன்னநடைமாதரெல்லாம்
அடிசில்சமைத்ததென்று அருஞ்சின்னமூதிவைத்தாள்
ஊதினசின்னத் தொனிகேட்டுஉத்தமியாள்
சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங்கி
முத்துமிதியடியைத் தொட்டுநடந்தசைந்து
அருச்சுனனார்தேவியர்கள் அவர்களிடத்தில்வந்து
தோராவடிவழகி துரோபதையாள்கூறுவாள்
மெத்தப்பசியோடே மெல்லியரேயிருந்தீர்கள்
போஜனமுண்ணுதற்குப் போதவெழுந்தருள்வீர்

அர்ச்சுனன் தேவிகள் போசனமுண்டது

என்றதுகேட்டு எழுந்தார்களெல்லவரும்
அர்ச்சுனனார்தேவியர்கள் அனைவோருந்தானெழுந்தார்
கொம்பனைகளெல்லாங் கூடியொன்றாய்கைகொடுத்து
தேன்மொழிமாதரெல்லாம் சிரித்துவிளையாடி
ஆரணங்குமாதரெல்லாம் அரண்மனையிற்போய்புகுந்து
சுட்டியசையத் துலங்கும்வளைகுலுங்க
வாசங்கள்மிஞ்சும் மலர்க்குழலில்பூவுதிர
காலோடுகையும் கனிவாயுங்கொப்பளித்து
வாயோடுபல்லும் மதிமுகமுஞ்சுத்திசெய்து
ஆரவிளமுலையாள் அரண்மனையிற்போய்புகுந்தார்
தாமக்கருங்குழலார் தாதியர்களோடிவந்து
மங்கையர்கள்தானிருக்க வட்டமணைபோட்டார்கள்
பாவையர்கள்தான்வரவே பஞ்சவர்ணப்பாய்போட்டார்
இருவர்க்கொருகெண்டிகையும் வைத்தாரிளங்கொடியும்

தலைவாழையிலைபோட்டுத் தண்ணீர்தெளித்தார்கள்
மல்லிகைமொக்குபோல் மாற்றுவெள்ளிநிறம்போலே
தும்பைமலர்போலே சொரிந்தார்கள்போஜனத்தை
பொன்போல்பருப்பைவைத்து புத்துருக்குநெய்சொரிந் [தார்
ஆனபடைச்சலுடன் அன்பானபோஜனமும்
எடுத்துப்படைத்தார்கள் இளங்கொடிமாதருக்கு
போஜனங்களுண்டார்கள் பொற்கொடிமாதரெல்லாம்
காய்ச்சியபாலும் கனிவர்க்கமுப்பழமும்
வடைதோசைபாயாசம் வகையறவேயுண்டார்கள்
போசனங்களுண்டவர்கள் பொடியிட்டுக்கைதிமிறி
கனிவாயுங்கொப்பளித்துக் கைகாலுஞ்சுத்திசெய்து
அலங்காரமண்டபத்தில் அனைவரும்வந்தார்கள்
அப்போதுமின்னொளியாள் ஆனருசியுண்டறியாள்
எல்லோரும்போலே எழுந்துவந்துதானமர்ந்தாள்
தங்கத்தாம்பாளத்தில் தாம்பூலந்தானெடுத்து
காச்சாக்களிப்பாக்கு கம்மாறுவெற்றிலையும்
மோரங்கிப்பாக்கும் முத்துசுட்டசுண்ணும்பும்
பன்னீருஞ்சந்தனமும் பரிமளமும்பூமலரும்
தாதிமார்கொண்டுவந்து தையலார்முன்னேவைத்தார்
அன்னநடை துரோபதையாள் அள்ளிக்கொடுத்தாளே
தாம்பூலந்தான்வாங்கிச் சந்தோஷமானார்கள்

அர்ச்சுனன் தேவிகள் அவரவர்கள்
அரண்மனை சென்றது

அத்தண்டபெண்களும் அனைவோருந்தானெழுந்தார்
அவரவர்கள்தோழிகளும் அவரவர்கள்பாங்கிகளும்
அனலிற்பிறந்தாட்கும் அல்லிப்பெருமாட்கும்
போய்வாரோமென்றுபொன்னடிக்குத்தெண்டனிட்டார்
இருவருக்குந்தெண்டனிட்டு யேறினார்தண்டிகைமேல்
விடைபெற்றுப்பெண்கள் வெளிப்பட்டார்மாதரெல்லாம்
மின்னேரிடையாளும் முகங்கருகித்துள்படிந்து
கோதிமுடியாத கூந்தல்சடைபற்றினதால்
ஏங்கிமனந்தளர்ந்து யேறினாள் தண்டிகைமேல்
அவரவர்மாளிகைக்கு அனைவோரும்போய்ச்சேர்ந்தார்

அல்லியும் துரௌபதையும் ஆலோசனை செய்தது

அனைவோரும்போனபின்பு அல்லிமலர்நாயகியும்
தோராவடிவழகி துரோபதையாள்தன்னுடனே

இருவருமாக யேகாந்தமாயிருக்க
திரௌபதையைத்தான்பார்த்து சொல்லுகிறாளல்லியம்
அனலிற்பிறந்தவளே ஆச்சியரே நீர்கேளும் [மாள்
என் மனதிற்கவலையொன்று மிருக்கிறதுவடிவுடையே
பொறுக்கமுடியவில்லை பொற்றணலிற்பிறந்தவளே
சொல்லவிடைகொடுத்தால் சொல்லுகிறேனாச்சியரே
திருவாய்மலர்ந்தருளி திருவுளம்பற்றினால்
மனதில் நினைத்தவரம் மயிலனையேசொல்லுகிறேன்
உத்தரவோவென்றாள் உலகத்தையாண்டகன்னி
என்றதுகேட்டு ஏதுசொல்வாள் திரௌபதையும்
ஆருயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
மாள்கிறேமென்றுசொல்லி மலைமேல்தவ மிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாய்
வீரானசெங்கோலும் மெல்லியரே நீசெலுத்த
மன்னன்விசயனவர் மருவுகின்றமாதேவி
பொன்னணிந்தமார்பன் புலந்திரனைப்பெற்றவளே
வம்பளர்ந்தகோவே வடிவுசூடாமணியே
அம்பலர்ந்தபெண்ணே அருக்காணிபெண்மயிலே
மனம்பொருந்தும்சீருலகில் மற்றொருவரில்லாதே
வந்திருந்துவாளெடுத்து வையகத்தையாண்டவளே
தன்பெயருஞ்செல்வம் தையலுடையவளே
உன்பெயருக்கொப்பானார் வுலகத்தில்யாருமில்லை
கமலமுகமும் கனிமுறுவல்செவ்வாயும்
திலர்தமிடுநுதலும் செங்கரும்புபோல்விழியும்
உன்னழகுக்கொப்பானார் வுலகதனில்யாருமில்லை
ஒத்தணைந்துபுல்கி ஒளிமுகத்தைமுத்தமிட்டு
கட்டழகிநீ நினைத்த காரியத்தைச்சொல்லுமென்றாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுவாள்
அருச்சுனனார்தேவிமார் ஆரணங்குயாவர்களில்
வாள்விசயன்தேவிமார் மங்கையர்கள்பெண்களிலே
நம்முடனேயொத்ததொரு நாயகியார்சக்களத்தி
அனைவரும்வாழ்ந்து அதிகசுகமாயிருக்க
அதிலேயொருத்தி அதிகதுக்கமாவதென்ன
வாழாதபெண்ணாகி மடந்தைசிறைகாப்பதென்ன
புருஷனைப்பறிகொடுத்தார் பெருஞ்சிறைகாப்பார்கள்
புருஷனிருக்கையிலே பெருஞ்சிறைகாப்பதென்ன

கணவனைப்பறிகொடுத்தார் கைம்பெண்டாயிருப்பார்கள்
கணவனிருக்கையிலே கைம்பெண்டாயிருப்பதென்ன
மஞ்சளிழந்து மணமிழந்துபோவானேன்
இப்படிக்குமுண்டோ யிரக்கமுள்ள ஆச்சியரே
காவேரிநாடன் கட்டழகன்பயின்றெடுத்த
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்மெல்லிநல்லா
மாதரிளங்கொடியாள் வாழாதிருப்பதென்ன [ள்
குடியில்பெண்வாழாமல் கொம்பனையேயிருந்தாலும்
மாலையிட்டகன்னியவள் மனஞ்சலித்தாளாமாகில்
பழுதல்லோதன்குடிக்குப் பாஞ்சாலன்சீர்மகளே
முந்தானை தான்போட்டு முடங்கினால்தோஷமல்லோ
நாயகிசுபத்திரைக்கு நாலுமுறையாவானேன்
சுவாமியுடதங்கை சுபத்திரையாள்தன்முறையை
அதை-பாதிபகுந்தளிப்போம் பைங்கிளியாள்மின்னொளி
உந்தன் திருவுளத்துக் கொக்குமோ ஆச்சிஎன்றாள் [க்கு
தோராவடிவழகி துரோபதையாள்தான்கேட்டு
என்மனதிலெண்ணினதுபோல்யிருந்ததேயுன்மனதில்
ஆனபடியால்சீமை ஆள்வதும்வெல்வதும்
உந்தனிடபுத்திக்கு வொப்பானொருவரில்லை
மற்றொருவர்தந்தமக்கு மதிவருமோதங்கையரே
ஆச்சியரேபெண்பெருமா ளருச்சுனனார்செய்தபிழை
என்னென்றுசொல்லுவே னெழில்விஜயன்செய்தபிழை
அவள்-சிவபூசைவேளையிலே சென்றானாம்தேர்விஜயன்
சரசங்கள்செய்து தையல்கொங்கைதான்பிடித்து
அவள்கையைத்தான்பிடித்து அழும்புபண்ணும்வேளை
அவளறிவழிந்துமெய்சோர்ந்து அவர்முகத்தைதான்பார்த்து [யிலே
சிவபூசைதான்குலைந்து சிந்தைமுகம்வேறுபட்டு
கோபித்துக்கண்சிவந்து கொம்பனையுங்கூறிவிட்டாள்
மின்னொளிக்குவேண்டாதவேம்பென்றுஊதிவைத்தாள்
காரிழைக்குவேண்டாத கணவனென்றுஊதிவைத்தாள்
ஆகையினாலே அசைந்தார்காணர்ச்சுனரும்
என்றுமிவளுரைக்க ஏந்திழையாளல்லியரும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லிகூறுவாள்
துருப்பசையத்தேன்சொரியும் சோழன்திருமடந்தை
தாழம்பூவாலே மடைதிறந்துநீர்குடித்து
தாமரைப்பூவாலே மடைதிறந்துபாய்கிறதும்

சேற்றுல்மடை திறந்தாற் செல்வங்குறையுமென்று
பணத்தால்மடை திறந்தால் பாசிபிடிக்குமென்று
சோற்றுல்மடை திறக்கும் சோழன் திருமடந்தை
அப்படிக்கொத்த அழகுள்ள நாயகியும்
வாழாதிருக்கவந்த காரியமேனே ந்திழையே
ஆரணங்குசிறையிருக்க காரியமேன்வாழ்வரசி
தேனின்குழலாளும் சிறையிருக்கலாகாது
என்றுஉரைத்தாள் யேந்திழையாளல்லியரும்
அவ்வார்த்தைதான்கேட்டு அனலிற்பிறந்தவளும்
தோகையந்தஅல்லியற்கு திரோபதையுமேதுசொல்வாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகமே
மயிலணையாள்மின்னொளியை வாழவைக்கநிசமானல்
அரண்மனைக்குப்போகாமல் ஆச்சியரேயிங்கிருந்து
பொற்கொடிமாதே பூங்காவனமிருந்து
அர்ச்சுனரையிங்கே யழைத்துவரச்சொல்லி
அர்ச்சுனரைக்குறவேடம் ஆகவேதான்போட்டு
குறக்குலத்தில்வாழுகிற குறமாதரைப்போலே
வையகத்துகுறத்தியைப்போல் மன்னவரைவடிவாக்கி
மின்னிடையாள்வாசலுக்கு விஜயரைப்போகவிட்டால்
வலிய அழைப்பாள் மாதுகருங்குழலும்
மின்னொளியாள்வாசலிலே வேண்டுங்குறிசொன்னல்
இதங்கியந்தமின்னொளியாள் யிளவிசையன்தாள்சார்வாள்
கூடிச்சுகப்படுவாள் குறைதீர்ந்துவாழ்ந்திருப்பாள்
இந்தட்சணத்தி லிப்பொழுதேசெய்வோமென்றுள்
அப்படியேசெய்யுமென்று ளாரணங்கு அல்லியரும்

அல்லியரும் திரௌபதையும் அர்ச்சுனரை அழைத்துவரச் சொன்னது

அல்லிப்பெருமாளும் அலங்காரநாயகியாள்
தன்னருகேநின்ற தாதியைத்தானழைத்து
நான்குபேர்தாதிகளை நாயகியாள் தானழைத்து
கூறுவாள்கொம்பனையாள் கொஞ்சுங்கிளிபோலே
ஆணழகு மன்ன னருச்சுனராஜாவை
பரமசிவனிடத்தில் பாசுபதம்பெற்றவரை
பாசுபதம்பெற்ற பார்த்தருச்சுனரை
எங்கேயிருந்தாலும் யெவ்விடத்திற்சென்றாலும்

சந்தனவடிவழகர் தருமரண்டையிருந்தாலும்
சிங்கக்கொடிபடைத்த ஜெயமுடையவீமரவர்
வெற்றிமதயானை வீமரண்டையிருந்தாலும்
நாமக்கொடியுடைய நகுலரண்டையிருந்தாலும்
சாஸ்திரத்தில்வல்லதொரு சகாதேவராசரண்டை
அங்கேயிருப்பாரே அருச்சுனவீரியரும்
மந்தாரக்குந்தியம்மாள மாதாவிடமிருந்தாலும்
ஸ்ரீராமர்தங்கையிடம் சேர்ந்துயிருந்தாலும்
விலைமாதர்வீதியிலே வேந்தரிருந்தாலும்
தேவடியாள்வீதியிலே தெருக்களெல்லாமாராய்ந்து
ஆலயங்கடோறும் ஆராய்ந்துபாருமென்றாள்
கண்டதேயுண்டானால் கைப்பிடியாய்த்தான்பிடித்து
ஏதொன்றுஞ்சொல்லாம லழைத்துவாதாதியென்றாள்
நானழைத்தேனென்று நீயழைத்துவாருமென்றாள்
என்றசொற்கேட்டு யெழுந்தார்கள் தாதியர்கள்
வீசுங்கவரியை மிகவொருத்திகைபிடித்து
நான்குபேர்தாதிமார்கள் நடந்தார்விசையுடனே
அர்ச்சுனரைத்தேடி வரிவையர்கள்போமூர்கள்
வீதிதெருவெங்கும் மெல்லியர்கள்தேடுகிறூர்
தருமர்கொலுவிலும் தம்பிமார்வீதியிலும்
வீமர்கொலுவிலும் விலைமாதர்வீதியிலும்
குந்திகொலுவிலும் கொம்பனைமார்வீதியிலும்
ஆலயம்வீதியிலும் ஆரிழைமார்வீதியிலும்
எங்கெங்குந்தேடி இனியவிடமாராய்ந்து
ஸ்ரீராமன்தங்கை சிற்றிடையாள்வீதியிலே
தேடிவருகிறூர்கள் தேர்விஜயனருச்சுனரை
சுபத்திரையாள்வீதியிலே சுந்தரவாழ்மார்பன்
முத்தான்வாழ்மார்பன் முறைவிட்டுத்தானெழுந்து
வாசமுமிழந்து மலர்க்குழலில்பூவுதிர
கைகாலுஞ்சுத்திபண்ணி கனிவாயுங்கொப்பளித்து
வாயோடுபல்லும் மதிமுகமுஞ்சுத்திபண்ணி
ஆணழகன்வாழ்மார்பில் ஆடைவிரித்துடுத்தி
ஆலகாலவிஷமுண்டா ரருளியவெண்ணீறு
சிவனுடையவெண்ணீறு திருநீற்றுக்காப்பணிந்து
தருமரடிவணங்க தனஞ்சயன்வேண்டுமென்று
அம்புவில்லுங்கைபிடித்து ஆனந்தவாழ்மார்பன்

தங்கமிதியடிமேல் தானசைந்துமன்னவனும்
வேந்தர்பெருமாளும் வீதிபுறப்பட்டார்
தோளிலிடுமபச்சைவடம் துப்பட்டாதொங்கிவர
காயாரக்காய்ந்ததொரு கமுகினிளம்பாக்கும்
வாயாரத்தின்று வலதுகையில்சுருள்பிடித்து
தென்னர்பெருமாளும் தெருவேபுறப்பட்டார்

தாதியர்கள் அர்ச்சுனரை யழைத்துவருதல்

கட்டழகிதோழிமார் கண்டார்களர்ச்சுனரை
விஜயர்க்கெதிராக மெல்லியர்கள் தானடந்து
பார்த்தன் திருவடிக்குப் பாவையர்கள்தெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாழ்மார்பன் கண்ணிற்கண்டு
யார்பணிதாதி நீ அறியவுரையுமென்றார்
பேர்பணியுமல்ல பெருமாள் திருப்பணிகாண்
நான்யார்பணியுமல்ல அடியேன் திருப்பணிதான்
தீயிற்பிறந்தவளும் தென்னுடன்பாவையரும்
மலரிற்பிறந்தவளும் வைகைவாழ்நாட்டாளும்
இருவருங்கூடி இணைக்காவல்வந்திருந்து
மலர்க்காவில்வந்திருந்து வண்டார்கருங்குழல்மார்
உம்மை-ஏதோதெரியாது இட்டுவரச்சொன்னார்கள்
பிடித்தபிடியுடனே அழைத்துவாருமென்றார்கள் [ர்
இருவர்பணிநாங்களென்று இறங்கியேதெண்டனிட்டா

அர்ச்சுனன் பூங்காவனம் வந்தது

இருவர்பணியென்றலுமே எழில்விஜயனுளமகிழ்ந்து
சந்தோஷப்பட்டாரே தாமந்தவாழ்மார்பன்
உள்ளங்குளிர்ந்தாரே உடம்பெங்கும்பூரித்து
சரீரங்குளிர்ந்தாரே சருவாங்கம்பூரித்து
தருமர்கொலுவை தனஞ்செயனுந்தான்மறந்து
வீமர்கொலுவை விசையனுர்தான்மறந்து
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
பூங்காவனந்தாண்டி போரானேவாள்விசையன்
தூரவருகையிலே தேன்மொழிமார்கண்டார்கள்
சுந்தரப்பூமுடியை தூரமேகண்டார்கள்
துலங்குமதிமுகமும் சுந்தரப்பேரழகும்
வடிவழகுமொப்பனையும் வாழ்மயிலாள்கண்டாளே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
தோராவடிவழகி துரோபதைக்குயேதுசொல்வாள்

பார்த்தீரோவாச்சியரே பார்த்திபன்வடிவழகை
அழித்தழியாச்சந்தனமு மஸ்தகிரிபொட்டழகும்
பிரிந்தபுரி நூலழகும் பொருந்துப விழியழகும்
தோளில் துளசிமாலை தொங்கிவருகிறதும்
பச்சை நிறமும் பவழம்போல்பல்லொளியும்
மொச்சைகருங்குழலு முறுவல்கனிவாயும்
மனையவளோடொட்டிய மஞ்சள துவணியும்
மஞ்சள துவணியும் மையற்றவாசங்களும்
காவியங்களோதும் கனிவாயுங்கண்மலரும்
இணையொத்தமங்கையரை இணைகின்றவாழ்மார்பும்
தேவேந்திரன் மகன் செம்பட்டுடையழகும்
கண்டீரோவாச்சியரே கட்டழகன் தன்வடிவை
வாழஅதிர்ஷ்டமில்லாள் மின்னேரிடையாளும்
ஏழையென்றமின்னிடையாலிளங்கொடியாள் வேண்டே
ஸ்ரீராமன்றங்கையவள் செய்தவதிஷ்டமிது[னென்றாள்
மாயவனார்தங்கையவள் வல்லாண்மைகண்டீரோ
மண்ணளந்தான் தங்கையிட மாயமிதுகண்டீரோ
இவர்தோளில்சார்வதற்கு என்னதவஞ்செய்தாளோ
மன்னர்விசையபாது மதிமுகத்தைப்பார்த்திருந்தாள்
அவ்வளவில்பார்த்திபன் ஆரணங்குமுன்னேவந்தார்
இருளடைந்தசாலையிலே எழுந்துவந்தசூரியன்போல்
நடந்துவந்தாருச்சுனரும் நான்குதிசைநடுங்க
தீயிற்பிறந்ததொரு தேன்மொழியாளருகில்வந்தார்
அல்லிப்பெருமாளி னருகாகவந்து நின்றார்
பாண்டிப்பெருமாளும் பராமுகமாய்த்தானிருந்தாள்
நாமிவரைப்பார்த்து நகைத்தோமேயாமானால்
மிகவுமிலேசாக வீரியத்தைப்பேசிடுவார்
காரியமல்லவென்று கண்சாயலாயிருந்தாள்
பாதச்சிலம்பழகைப் பார்த்துநகைத்திருந்தாள்
காண்டாவனமெரித்த காளையவர்கண்சிவந்து
கோபித்துக்கண்சிவந்து கோபாலன்மைத்துனரும்
கச்சுப்பிறைதனிலே கைபோட்டான்காவலனும்
பரிசைமேல்கைபோட்டுப் பாங்குஉருவினனே
காணங்கள்போடுகிறான் கைலாகுபண்ணுகிறான்
முன்கந்துபின்கந்தாய் முனைவீரன்பாய்கிறான்
கண்டந்ததாதிமார் கடுகியேயோடலுற்றார்

சூரியனைக்கண்ட பனிபோலேவிளங்கினர்
கண்டாளேயல்லியரும் காற்றசைந்தாபபோல்குதித்து
மச்சத்தைவிச்சுளி வந்தொருக்கால்பாய்ந்தாப்போல்
வாளுனக்கேனென்றுசொல்லிவாழ்பாண்டி நாட்டாளும்
கைவாளைப்பிடுங்கிக்கொண்டுகலுக்கென்று நகைத்தாளே
கண்டீரோ ஆச்சியரே கட்டழகன சேவகத்தை
பார்த்தீரோ ஆச்சியரே பார்த்திபன்சவுரியத்தை
இன்றேயறிந்தேனே எழில்விஜயன்சவுரியத்தை
அன்றேயறிந்தேனே ஆச்சுனனாண்மைகளை
பாஞ்சாலன்பந்தலிலே பிராமணனைப்போலேவந்து
வில்லைவளைத்ததுவு முடுக்குந்தளுக்குகளும்
முன்னேவரவொட்டாமல் வெட்கியிருந்ததுவும்
எனக்காகவில்வளைத்து எந்தனைமாலையிட்டு
தாளுளமாட்டாமல் சவுரியராசதுரை
ஐவருக்கும்பெண்ணாகி அமர்த்திவைத்தவண்மைகளை
அன்றேயறிந்தேனே ஆணழகன்சவுரியத்தை
என்றுநகைத்தாளே இளங்கொடியாள் துரோபதையும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமானே துசொல்வாள்
அதுவேயல்லாமல் ஆயிரம்பாண்டியர்முன்
அன்றுமொருஆண்டியைப்போ லாணழகன்வடிவெடுத்
கையில்மடல்பிடித்து கண்கெட்டான்போலிருந்தார் [து
அன்றேயறிந்தேனே அர்ச்சுனர்வீரியத்தை
என்றுநகைத்தாளே ஏலப்பசுங்கிளியும்
அப்போது அர்ச்சுனரும் ஆணழகரே துசொல்வார்
அன்னமேதேனே அமுதேபசுங்கிளியே
இருவருமாய் நீங்க ளிந்தவனத்தில்வந்து
என்னையழைத்தது ஏதுகருமமடி
ஏதுக்குமாதே நீங்கள் இட்டுவரச்சொன்னீர்கள்
வரவழைத்தகாரியத்தை வாய்திறந்துசொல்லுமென்றார்
அப்போது அல்லியவள் ஆரணங்குமேதுசொல்வாள்
உன்மச்சினியாள் வாழ்வை பறிக்கவென்று நினைக்கவில்
சுபத்திரையாள்வாழ்வைப் பறிக்கவந்தார்யாருமில்லை [லை
கோபங்களேன்காணுங் கொத்துப்போர்வீரியரே
தோராவடிவழகி துரௌபதையாளே துசொல்வாள்
மச்சினியாள்வாழ்வைப் பறிக்கவந்தோம்வாள்விஜயா
சுபத்திரையாள்வாழ்வைச் சுகம்பறிக்கவந்தோமோ

அத்தைமகளென்றுசொல்லி ஆதரித்தகன்னியரை [யா
மையல்கொண்டகன்னியரை வாழவிட்டோம்வாள்விஜ
செப்பிடுங்காரியத்தைச் செய்கிறேமென்றுசொன்னாள்
கொற்றவனே நீரும் குருவாணையிட்டாக்கால்
அப்போதுநாங்க ளூரைப்போங்காணருச்சுனரே
இல்லாமல்நாங்க ளூரையோங்காணழகா
என்றதுகேட்டுமவர் ஏதுரைப்பாருச்சுனரும்
தீயிற்பிறந்தவளே தென்னாடன்பாவையரே
அனலிற்பிறந்தவளே ஆரணங்குதுரோபதையே
அல்லியிற்பிறந்தவளே அல்லிமலர்நாயகியே
வையைவளநாட்டாளே வாழ்வரசியல்லியரே
அரிவையரே நீங்க ளருளியகாரியத்தை
மீறிநடந்ததுண்டோ வேல்பொருதுங்கண்ணாளே
தருமர்திருவாணை தம்பிமார்தன்னாணை
வீமர்திருவாணை விமலனார்தன்னாணை
குந்தியம்மாள்தன்னாணை குருக்கள்திருவாணை
சங்கவதிதன்னாணை சுவாமியார்தன்னாணை
தென்னாட்டிதன்னாணை தீயில்வந்தாள்தன்னாணை
பெருமாள்திருவாணை பின்னையுமறிவேனோ
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
ஆணைபெரிதுகண்டீர் அமையுமமையுமென்றாள்
ஆணைவிட்டோந்தோஷமில்லை அருச்சுனரேகேளுமெ
கொம்பிலிருந்து குதித்தகிளிபோலே [ன்றாள்
அன்னையபோல்வாய்திறந்து ஆரணங்குமேதுசொல்வா
எங்களோடொத்த ஏந்திழையாள்பொற்பாவை [ள்
காவேரிநாடன் பயின்றெடுத்தகட்டழகி
விளங்கியசீர்மாதவத்து மின்னிடைமெல்லிநல்லாள்
அணியிழையாள்வாழா திருப்பதென்ன ஆணழகா
குடியில்பெண்வாழாதே கொற்றவரேயிருந்தாலும்
மூந்தாணிபோட்டு முடங்கினாளானாலே
பழிப்பல்லோதன்குடிக்குப் பார்த்தர்பெருமாளே [ழகா
அதையெண்ணிநாங்களும்மை அழைத்தோங்காணண
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார்
என்னாலேவாழா திருந்தாளேஏந்திழையாள்
தன்னாலேவந்த வசமல்லோதையலற்கு
வாயாலேயல்லோ வாழ்விழந்தாள்மின்னிடையாள்

தோராவடிவழகி துரோபதையாளே துசொல்வாள்
குடியாள்சிறையிருந்தால் குற்றங்கள்வந்துவிடும்
மாதுசிறையிருக்க மன்னவனேயாகாது
காண்டாவனமெரித்த காளையவர்கூறுவார்
பொற்கொடியாள்கோயிலுக்குப் போகாதநேரமுண்டோ
மின்னொளிக்குவேண்டாதவேம்பனென்றூதிவைத்தாள்
காரிழைக்குவேண்டாத கணவனென்றூதிவைத்தாள்
ஊதிவைத்தாள்கோயிலுக்கு உத்தமியேநான்போகேன்
மணமாலைசூட்டலையோ மண்டலங்கள்தானறிய
மதியாமல் ஊதிவைத்தாள் வையகங்கள்தானறிய
இதுவொருகாரியம்போல் என்னையிங்கேவரவழைத்து
ஆணையிடவைத்தது எரிவையரேகாரியமேன்
என்றுமிகச்சீறி எழுந்திருந்தாரருச்சுனரும்
சீறியெரிபறந்து சிங்கக்குட்டிபோலெழுந்தான்
தோராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
விஜயரைக்கையமர்த்தி மெல்லியவளே துரைப்பாள்
ஆதிசிவன்பூசையிலே அருச்சுனரேசென்றீரோ
சங்கரனார்பூசையிலே போய்சென்றுதார்வேந்தர்
பூசைசெய்யும்வேளையிலே போயவளையகந்தைசெய்து
வாடியென்றுப்போடியென்றும் வம்புசொலநியாயமுண்
அதனாலேமின்னிடையும் ஆகாதவம்பனென்றாள் [டோ
மங்கைமாரெல்லவரு மாளிகைக்குவந்தார்கள்
தட்டிலேபாக்கும் தனிக்கையிலேவெற்றிலையும்
அள்ளியளித்தேன்யான் ஆரணங்குபாவையற்கு
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியுந்தீண்டேனென்
வடிவழகுபேணியிலே மஞ்சளும்பூசாமல் [றாள்
அஞ்சனமுந்தீண்டாதே அலர்தாமரைக்கண்ணாள்
பவளச்செவ்வாயில் பாக்குதரிக்காமல்
சலவையுடுக்காமல் சந்தனங்கள்பூசாமல்
மனதுகலங்கியே வந்திருந்தாள்சபைநடுவே
இது-ஆகாதுகாணும் அரசர்பெருமானே
பழுதுகள்வந்திடுமே பார்த்திபாராசாவே
எண்ணறக்கற்றும் எழுத்தறப்படித்தாலும்
பெண்மதியாலல்லோ பிழைமோசமாகிறது
பெண்ணின்பிழையைப் பொறுத்தவர்புண்ணியர்காண்
பெண்சாதிசெய்தகுற்றம் பெரியதென்றுபார்ப்பாரோ

எங்களைப்பற்றி இளவிசையாபோய்வாரும்
கூடியணைந்து குறைதீர்த்துவாருமையா
அவள்சிறையைத்தீர்த்து ஆணழகாவாருமென்றார்
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார்
உங்களிடசொற்படிக்கு உத்தமியேநாடிசென்றாள்
மாதரிடகோட்டையிலே வலியநான்போனக்கால்
இன்னமொருதரம் வம்பனென்றாலென்னசெய்வேன்
ஆகாதவம்பனென்றால் ஆரணங்கேயேதுசெய்வேன்
நான்போவதில்லையென்று நகைத்தவருங்கூறினார்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குமேதுசொல்வாள்
கண்டீரோ ஆச்சியரே கட்டழகன் தருக்கத்தை
பார்த்தீரோ ஆச்சியரே பார்த்திபன் தருக்கத்தை
இன்றேயறிந்தேனே எழில்விசயன் தருக்கத்தை
ஆறுயிரவர் அடிவணங்கும்வாசலிலே
வையகத்துமன்னவர்கள் வந்தேறும்வாசலிலே
தேசத்துமன்னவர்கள் சென்றேறும்வாசலிலே
அரசிலைத்தோரணமும் ஆர்க்குந்தலைவாசலிலே
சீதேவிநின்று திறைகொள்ளும் வாசலிலே
செம்பொன்னும்முத்தும் திருவுமரசிலையும்
அம்பொன்னும்முத்தும் ஆர்க்குந்தலைவாசலிலே
காற்றடித்தால்மின்னும் காந்தாரிவாசலிலே
தந்தையுந்தாராவும் தன்னிற்பசுங்கிளியும்
ஒக்கவிளையாடும் உத்தமியாள்வாசலிலே
ஆறுயிரக்காதம் அகலமுள்ளவாசலிலே
அலைகடல்சூழ்வையகத்து அரையர்கள்வந்திருக்க
எல்லையுள்ளராஜாக்கள் இளவரையர்வந்திருக்க
முத்தின்முடிதரித்த முடிமன்னர்வந்திருக்க
வச்சிரமுடிதரித்த மகாமன்னர்வந்திருக்க
மாணிக்கமுடிதரித்த மகாராசர்வந்திருக்க
ஐந்நூறுகோடி அரசமன்னர்வந்திருக்க
எழுநூறுகோடி இளவரையர்வந்திருக்க
எள்ளுபோட்டால்எள்ளுவிழா இளவரையர்வந்திருக்க
அப்பெரியமண்டபத்தில் ஆராயிரவர்முன்னே
வெட்கங்களில்லாமல் வேந்தர்பெருமாளும்
அன்றுமொருஆண்டியைப்போல் அதிதிபரதேசியைப்
பரமசிவன்போலே பார்த்தன்வடிவெடுத்து [போல்

கையில்மடல்பிடித்து கண்கெட்டார்போலிருந்தார்
எனக்குமையல்கொடுத்து என்னுட்டங்கண்டிருந்தார்
அன்றேயறிந்தேனே அருச்சுனராண்மைகளை
என்றுபரியாசம் இயலுடனே தானுரைத்து
வாருங்காணருச்சுனரே வாள்விசயராசாவே
வையகத்தில்வாழுகிற மாதர்குறத்திபோலே
குறவேஷம்போடுகிறோம் கொம்பனையாள் வீடுசென்று
வலிய அழைப்பாள் மாதர்கருங்குயிலும்
கட்டழகிமின்னிடைக்கு கைபார்த்துகுறியுரைத்து
கூட்டிக்கலந்துவாரும் கொம்பனையாள்மின்னொளியை
வணங்கியந்தமின்னொளியும் மாதுகலந்திருப்பாள்
கட்டழகிமின்னொளியின் காதலைத்தீர்த்தருள்வீர்
என்னுணைவாள்விசயா எனக்காகநடந்திடுவீர்
போய்வாருமென்றாளே பொற்கொடியாள்மங்கையரும்
காண்டாவனமெரித்த காளையருந்தான்கேட்டு
அவளாணைபெரிதென்று ஆனந்தவாழ்மார்பன்
நீ சொன்னபடியேயான் நேரிழையேபோகிறேனுன்
ஆணைவிடுமென்றார் அரையர்பெருமாளும்
விட்டேன் காணுணையென்றாள் மெல்லியருமப்போது
என்றதுகேட்டு இசைந்தாரேவாள்விசயன்
சந்தோஷப்பட்டாரே தாமந்தவாழ்மார்பன்
அல்லியற்கும்துரோபதைக்கும் ஆரணங்குஇருவரிலே
நடுவாகவந்தமர்ந்தார் ஞாயிறுதித்தாற்போல்
குன்றின்மேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
இருளடைந்தசாலையிலே எரிக்குங்கதிரவன்போல்
இருவர்நடுவாக இளவிசயன்வந்தமர்ந்தார்
அப்போதுதாதிமார் ஆரணங்குமோடிவந்தார்
நாற்காலிபோட்டார்கள் நல்லமணையுமிட்டார்கள்
மூக்காலிபோட்டார்கள் முன்னேமணையுமிட்டார்
வட்டமணைமேலே வந்தமர்ந்தாரருச்சுனரும்
அர்ச்சுனருக்குப்பின்னாலே அல்லியரும்வந்தமர்ந்தார்
அர்ச்சுனனார்பின்னழகும் ஆபரணந்தன்னழகும்
முதுகழகும்தோளழகும் முதுகில்மச்சரேகைகளும்
மீசைமுறுக்கழகும் விழிநல்லபார்வைகளும்
கச்சுகட்டுமுன்னழகும் கத்திசுருக்கழகும்
இடையழகும்நடையழகும் இசைந்தவடிவழகும்

கூந்தலழுகுகளும் கொண்டசெகத்தாடுகளும்
கண்டுமயங்கினாள் கட்டழகிமூர்ச்சையானாள்
கண்டார்கள்தோழிமார் கடுகிப்பயந்தெழுந்து
வெண்சாமரைகொண்டு வீசினாரல்லியர்க்கு
வீசக்களைதெளிந்தாள் மெல்லியிளங்கொடியாள்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
இராசாத்தியாயிருந்து நாயகியேபெண்மயிலே
வையகத்தையாண்டிருந்த வாழ்வரசிராசாத்தி
கண்டுமயங்குவரோ கட்டழகன்ராசாவை
பார்த்துமயங்குவரோ பார்த்திபராசாவை
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனமகிழ்ந்து
அர்ச்சுனனார்கூந்தலை அவிழ்த்தாள்செகத்தாடை
ஆணலழகுமன்னன் அருச்சுனருமேதுசொல்வார்
காண்டாவனமெரித்த காளையவர்கூறுவார்
சோர்ந்துவிழுந்தீரோ சுந்திரப்பூமுடியே
மதுரைவளநாட்டாள் மச்சினியேசோர்ந்தீரோ
இராச்சியத்தையாளுகிற ராசாக்கள்சோர்வாரோ
நல்மகுடம்பூண்ட ராசாத்திசோர்வாரோ
திக்கரசையாண்டவர்கள் சீர்மையிலேசோர்வாரோ
ஆருயிரவர்கள் அணிதிரளாம்பாண்டியர்கள்
பொன்னின்மலைநாடாளும் பேரழுதியண்ணருக்கு
தலையிரக்கங்கொண்டுவந்து தார்குழலேவந்தீரோ
வடிவில்லாவம்சத்தில் வடிவுவைத்தீர்நாயகரே
இப்படிபரியாசமியலுடனேதானுரைத்தார்
குங்குமத்திண்டோளன் குலுங்கநலகைத்தார்காண்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
ஆர்காணுமருச்சுனரே அதிசயமாபெண்ணாதே
தானேயழகென்று நலமுடனேபார்த்தீரோ
சோர்ந்துவிழுந்தாளென்று சொல்லுகிறீரருச்சுனரே
கொத்தார்குழலியவள் கொலுவிருக்குங்கண்களுக்கு
தூக்கங்களில்லாதே துன்னுங்கருங்குழலும்
துய்யக்கருங்குழலாள் தூங்கிவிழுந்தாள்காண்
ஆகடியம்பேசுகின்றீர் ஆணழகருச்சுனரே
ஆஆஆவென்று அலைந்துயலைத்துகிறீர்
உம்முடையதோல்வாயை யுள்ளடக்குமர்ச்சுனரே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்பார்த்து

காளை தன்னை குறத்தியாக காகைச்சமைக்கவேண்டும்
ஏழல்லோ தாரனே இந்திரனார்புத்திரனே
கொற்றவரைமாதுகன்னி குறக்கோலமர்த்தவென்று
மயிரவிழ்த்துபின்போட்டு வாரிமுடிக்கலுற்றார்
ஏத்தமஞ்சள் நின்று உறுமெத்தபூங்குழலே
வண்டுமுதுகோடுபோலே மயிரை நிறமாக்கி
விட்டுவிரித்தார்போல் விடுதும்பைபூத்தாற்போல்
வந்துவிழுந்தது மன்னவனார்சேஷயங்கள்
எல்லாத்தலைமயிரும் ஒருசாணிருசாணு
எல்லாத்தலைமயிரும் ஒருமுழமிருமுழம்
அர்ச்சுனனார்கூந்தலது அறுபத்துமூன்றுமுழம்
வந்துவிழுந்தது மன்னனுடசேஷயங்கள்
காவேரிவந்துக் கரைகோர்த்துநின்றாப்போல்
தழுவுக்கடங்காத தணிகொண்டசேஷயங்கள்
கீறிவகுத்தாளே கிளிபவளச்செவ்வாயாள்
முடியைவகுத்தாளே முதுகெங்குந்தோன்றாதே
கைகளசைந்தாளே காண்டீபன்தோள்சேர்ந்தாள்
சிற்றிடையாள்மாது சிறுவிரல்நோகுதென்று
மற்றுமசைந்தாளே மயிராற்றவொண்ணாதே
மாதந்தஅல்லியர்க்கு மதிமுகத்தில் வேர்வையிட
கண்டார்கள் தாதிமார் கடுகியேயோடிவந்து
வெண்சாமரையெடுத்து வீசுகிறாளல்லியாக்கு
தாமக்கருங்குழல்மார் தாதிகளேதுசொல்வார்
அர்ச்சுனனார்கூந்தலை யலங்காரஞ்செய்வதற்கு
அகத்தினதுள்ளாக அடியார்களாகாதோ
எங்களாலாகாதோ என்றுசிலரோடிவந்தார்
யானடியேனடியேன் என்றுபலரோடிவந்தார்
காண்டாவனமெரித்த காளையவர்கூறுவார்
வண்டார்குழலாள் மலர்க்கரங்கள்நோகுதென்று
உண்டானதாதியார் ஓடியிங்கேவரலாமோ
இவள்-ஏழுபிராயத்தில் எதிர்த்துவந்தநீண்முகனை
வாளெடுத்துவேலெடுத்து வளைச்சக்கரந்தானெடுத்து
கத்தியெடுத்து கனத்தவில்லுங்கைபிடித்து
ஈட்டியெடுத்து எரிபாணந்தானெடுத்து
அப்பெரியசேனைகளும் ஆனைகுதிரைகளும்
வந்தெதிர்த்தராசாக்கள் மந்திரிகளுள்ளவரை

கண்ட துண்டமாகக் கண்டித்தாள் பாணத்தினால்
நீண்முகனை மயிர்பிடித்து நேரிழையாளப்போது
தன்னுடைய தேரின்கீழே தள்ளினாள் வேகத்துடன்
இத்தனை சேனைகளை எதாய்ஜெயித்தாள் காண்
மயிர்முடிக்கநோகுதோ மாதரிடைகைத்தலங்கள்
பச்சைபசப்போ பசப்புகிறீர் பைங்கொடியே
மற்றொருவர்வந்து மயிர்வகுக்கலாகாது
சிற்றிடையாள் வீட்டுக்கு தேன்மொழியேயான்போகேன்
அல்லியேயுன்னுணை அனலில்வந்தாள் தன்னுணை
என்றதுகேட்டு எதுசொல்வாள் துரோபதையும்
வீணவார்த்தைகள் வேண்டாங்காண்வாள்விசயா
எங்களுக்காகவே இத்தலையுஞ்செய்கிறது
எங்களிடகாரியத்தை நிறைவேற்றப்போகிறீரோ
நீரேசுகப்படுவீர் நேரிழையாள்வீடுசென்றால்
பாராளமைந்தன் பாக்கியந்தான்பெறுவீர்
தருமத்தைத்தானினைந்தோம் தாமந்தவாழ்மார்பா
மற்றொருவர்வந்து வயிராற்றக்கூடாதோ
பின்னொருவாசலுக்குப் போகிறவரல்லவே
மற்றொருமங்கையர்கள் வந்தணுகக்கூடாதோ
நானேநானென்று நடந்தீர்குறியாக
ஆணழகாஉந்தனுக்கு ஆகாதமற்றொருவர்
நானேவருகிறேன் நல்விசயாஉந்தனுக்கு

அருச்சுனரைக் குறவேஷந்தரித்து அலங்கரித்தது

என்றந்தமாதரும் இளவிசயன்மயிராற்றி
ஒவ்வொருமயிருக்கு ஒவ்வொருபொன்னிதழும்
ஒவ்வொருமயிருக்கு ஒவ்வொருபூவிதழும்
பொன்னிதழும்பூவிதழும் பூட்டியலங்கரித்து
வாரிமுடித்தாளே வாள்சவுரியுள்ளேவைத்தாள்
மல்லிகைதாழை மணமுள்ளசெண்பகமும்
குரும்பையும்பூமணமும் கோங்குசிறுசெண்பகமும்
இருவாட்சிமல்லிகையும் உவர்க்குமதிசெண்பகமும்
கொன்றைகுடமல்லிகையும் கொத்தலரிமந்தாரை
வைத்துமுடித்தாளே மயிருக்கழகாக
குச்சுகளுங்கட்டியே குப்பியலங்கரித்தாள்
செம்பொன்சரட்டாலே சேர்த்ததிருமணியும்

கொங்குமதயானை நெருங்கக்குழல்முடித்து
மங்கையரைப்போலாகச் சொருகினாள்மன்னனுக்கு
மாதரைப்போலாக மங்கைநல்லாள் தான்முடித்தாள்
வயிரக்கடுக்கனை வாங்கியவர்காதிலிட்டு
காதுக்குப்பொன்னோலை கட்டழகிசாத்தினாள்
கொந்தளவோலையிட்டாள் கொப்பிட்டாள்வாளியிட்டாள்
பக்கம்படிகளும் பச்சைக்கல்முருகுமிட்டாள்
முத்தணிந்தமார்பில் முத்துரவிக்கைபோட்டாள்
நாடுமதிக்கின்ற நற்காரைகழுத்திலிட்டாள்
ஒற்றைச்சரடுகளாம் ஒருபுறமாம்பொற்சரிகை
இரட்டைச்சரடுகளாம் இரத்தினப்பொன்தாலி
முத்துமணித்தாழ்வடமும் மோகனமாலைகளும்
வட்டப்பதக்கமும் மார்நிறைந்ததாழ்வடமும்
மூன்றாம்பிறைபோலே முத்துகண்டிதாழ்வடமும்
ஐந்தாம்பிறைபோலே அழகானதாழ்வடமும்
சந்திராரஞ்சரப்பளியும் தரித்தாளேவிசயருக்கு
மூக்குத்திசிந்தாக்கு முன்கையில்சூதாரிகளும்
எட்டுவிரலுக்கும் இசைந்தகணையாழிகளாம்
பத்துவிரலுக்குப் பதிந்தகணையாழிகளாம்
காலாழிகல்லணையும் பீலாழிபில்லணையும்
பாவாடையுள்ளுடுத்தி பட்டாடைமேல்சாத்தி
முத்துச்சுருக்கிவிட்டு முந்தானிதொங்கவிட்டு
அக்குமணிகொக்குமணி அழகானபவளமணி
பச்சைமணிபாலமணி பாங்காய்கழுத்திலிட்டு
வையகத்தில்வாழுகிற மாதுகுறத்தியைப்போல்
சிங்காரக்குறத்தியைப்போல் சீராகச்சோடித்தாள்
நாமந்தரித்து நற்சாந்துபொட்டுமிட்டாள்
தாதியையழைத்து தையலருமேதுசொல்வாள்
குறக்கூடைகொண்டுவா கொம்பனையேயென்தோழி
அப்போதுதாதியரும் ஆரணங்குதானெழுந்து
முத்துபச்சையாலே முழுவயிரந்தன்னாலே
மாணிக்கக்குறக்கூடை மாதர்கள்சொப்பனிட்டு
குற்றங்களில்லாதே குறக்கூடைசொப்பனிட்டு
குறக்கூடைதன்னிலே குள்ளநரிக்கொம்புவைத்தார்
எண்ணெய்குடுக்கையொன்று இயலுடனேவைத்தார்கள்
ஏச்சங்கோல்தாழைநாறும் இன்பமுடன்வைத்தார்கள்

குழந்தைகள் விளையாட கிலிகிலிப்பைவைத்தார்கள்
கூத்திகளுக்காகவே கூடையில்மருந்துவைத்தார்
நரைபோயிளமைவர நல்லமருந்துவைத்தார்
வேசிக்குமருந்துகள் விதமுடனே வைத்தார்கள்
குமாரருக்கேற்ற மருந்துவைத்தார் கூடையிலே
உரிக்கயிறு தாம்புக்கயிறு உஞ்சல்கயிறுவைத்தார்
வக்காமணியும் மலைவேப்பங்கொட்டைகளும் [ள்
சித்துருண்டைவைத்தாள் சிறுநரியின் கொம்புவைத்தா
இந்திரரும்வானவரும் இசைந்ததொருகூடையிலே
சந்திரரும்சூரியரும் சந்தித்தகூடைபோலே
மூவுலகந்தான் மதிக்கும் முத்துரத்தினக்கூடைபோலே
செம்பொன் குறக்கூடை தேன்மொழியாள் முன்னே வைத்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குமேது சொல்வாள் [தாள்
வாடி மலைக்குறத்தி மலையாளர்கட்டுவச்சி
விண்ணின் குறத்தி வீரான கட்டுவச்சி
என்ன குறக்கூடை யென்றாளே யல்லியரும்
வாள்விசயனருச்சுனரும் வாங்கிக்குறக்கூடை தன்னை
குறமாதுபோலக் கூடையிடுக்கினாள்
தாங்கிக்குறக்கூடை தன் மருங்கிலேயிடுக்கி
ஒற்றையிட்டகைத்தலத்தில் பொற்பிரம்புகோல்பிடித்து
வஞ்சியிடைதுவள மாதுஸ்தனங்குலுங்க
கடுகிநடந்தாளே கட்டழகிகட்டுவச்சி
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் கூறுவாள்
ஆச்சி துரோபதையே அருச்சுனரைப்பாருமென்றாள்
ஒக்குமோகோலமிது உத்தமியேசீரழகும்
கட்டழகிமாதரைக் கண்ணிட்டுப்பாருமென்றாள்
விசயனார் தன்னழகை மெல்லியருந்தான்பார்த்து
தேர்விஜயன் தன்னழகைத் துரோபதையுந்தான்பார்த்து
சரியவிளமுலைமேல் சன்னல்பின்னல் தாழ்வடமும்
கட்டழகன் கைத்தலத்தில் கரிவளையல் தன்னழகும்
கடைக்கண்ணிலஞ்சனமும் கட்டழகன் கருங்குழலும்
அஞ்சனப்பொட்டுகளும் அழகான நாமங்களும்
வாள்விஜயன்பெண்கோல மானதொருவண்மைகளும்
தென்னாடிவாவென்று திருமுகத்தைத்தான்பார்த்து
வளநாடிவாவென்று மதிமுகத்தைத்தான்பார்த்து
கன்றிற்றோகன்றிற்றோ காண்டீபனர்ச்சுனர்க்கு

அல்லியற்குமர்ச்சுனர்க்கும் ஆலாத்திசுற்றுமென்றாள்
தாமக்கருங்குழல்மார் தாதியர்கள் தாம்கேட்டு
ஆயிரம்பெண்களவர் ஆலாத்திகாப்பெடுத்தார்
சீரானபொற்கலத்தில் செஞ்சோறும்வெண்சோறும்
காட்டிச்சுழற்றியே கதிரோன்முன்விட்டெறிந்தார்
திக்குச்சுழற்றியே திசைநான்கும்விட்டெறிந்தார்
கற்பூரமுந்துதிர்த்து காராவினெய்சோர்ந்து
குத்துவிளக்குதனைக் கொழுந்துபடவேற்றினார்கள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
இந்திரக்கட்டுவச்சி ஏற்றமுள்ளபூங்குறத்தி
மந்திரக்கட்டுவச்சி மலையாளப்பூங்குறத்தி
விண்ணுனைகட்டுவச்சி வீறுடையபூங்குறத்தி
எங்கள்குறக்கூடை தருவீரிளங்கொடியே
சிங்காதனத்தைவிட்டுத் கிகழக்குதித்திறங்கி
அம்பொன்சிங்காதனத்தை ஆர்க்கக்குதித்திறங்கி
குறக்கூடைதான்பறித்துக் குலுங்கநகைநகைத்தார் [ர்
குறக்கூடைதான்பறித்துக் கொம்பனைமாரேதுசொல்வா
வாருங்காணர்ச்சுனரே வார்த்தையொன்றுநீர்கேளும்
பரமசிவன்தன்கையிலே பாசுபதம்பெற்றேனென்றீர்
ஆதிசிவனிடத்தில் அதிகவரம்பெற்றேனென்றீர்
நாங்களறிந்ததில்லை இராஜாவேஅந்நடக்கை
இப்போ-ஆதிசிவனைநோக்கி அடிபணிந்துவாள்விஜயா
சிவனையடிபணிந்து குறக்கூடைவாங்குமென்றார்
அப்போதுவாள்விஜயன் அருச்சுனரேதுசொல்வார்
அல்லியிற்பிறந்தவளே அரசாளும்நாயகியே
தீயிற்பிறந்தவளே தென்னுடன்பாவையரே
நீங்களிருவரு மருளியகாரியத்தை
நான்-மீறிநடந்ததுண்டோ வேல்புருவங்கண்ணாளே
அப்படியேயாகுதென்று அருச்சுனரும்போய்நடந்தார்
கோவில்புறமாகக் கொற்றவனும்வந்துநின்று
ஈஸ்வரனார்கோவிலண்டை எழில்விஜயன்வந்துநின்று
ஆண்டவரைத்தானினைந்து யர்ச்சுனனேதுசொல்வான்
சிவனுரைத்தானினைந்து தேர்விஜயனேதுரைப்பான்
அத்திமுகத்தோனே ஐங்கரனேவிக்கினரே
சத்தியருள்புத்திரனே சரிந்தவயிற்றோனே
ஆறணியும்வேணி அரனார்திருமகனே

நீறணியுங்கங்கை நீள்சடையோன்புத்திரனே
வேழமுகமுடைய விநாயகரே நான் சரணம்
கந்தா கடம்பா கதிர்வேலா நான் சரணம்
வள்ளிதெய்வானைபங்கா வடிவேலா நான் சரணம்
அற்புதனே சோதி அகிலாண்ட நாயகரே
சாம்பசிவனாரே சங்கரனே நான் சரணம்
உம்பர்கள்போற்றும் உமையவளே நான் சரணம்
இலட்சுமிமனோகரனே நாயகனே நான் சரணம்
கொம்பனைமாதர்கள் குறக்கூடை தந்தார்கள்
கொடுத்தாற்போல்தான் கொடுத்து கூடைபறித்தார்கள்
அற்புதமானதொரு அம்மன்குறக்கூடை
உற்பனமாயெனக்கு உகந்துடனே தாருமென்றான்

அர்ச்சுனன் குறக்கூடை வாங்கின குறம்

தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா
தென்னாதினா தெந்தினா தினதெந்தினனா தினனா

மகாதேவராயனே மதிசூடுஞ்சிவனே
மலைமகளையொருபுறத்தில் வைத்தமகதேவா
திசையெட்டுமாண்டவரே திக்கெங்கும் நீரே
தீராதவினைதீர்க்கும் சிவனாரும் நீரே
ஆராலுமளவிடுமோ அரனாரேயும்மை
ஐயனேயுன்பாதம் போற்றியென்றுதொழுதேன்
பூராயமாகவே குறக்கோலந்தனக்கு
புகழானகுறக்கூடை தரவேணுமையா
இந்திரனார்லோகத்து ஊர்வசியாள்கூடை
இமையவருமமுனிவர்களும் நிறைந்திருக்குங்கூடை
ஈஸ்வரரும்ஈஸ்வரியும் நிறைந்திருக்குங்கூடை
இயலான நான்முகனும் இசைந்திருக்குங்கூடை
இந்திரரும்வானவரும் நிறைந்திருக்குங்கூடை
இடைதனக்கும்நடைதனக்கும் இசைந்திருக்குங்கூடை
நினைத்தாற்போற்குறியுரைக்க நிச்சயமானகூடை
நீலமயில்வாகனரே வள்ளியருள்வேணும்
குறித்தாற்போல்குறியுரைக்க கூடவருளவேணும்
குமாரருளாலெனக்குக் கூடைதரவேணும்
அப்பர்மலை ஆதிமலை பொன்மலையிற்குறத்தி
அரனேயுன்பொன்மலையில் அடியிணைநான்சரணம்

அன்றுமக்குக்குறிகள்சொன்னேன் ஐயமில்லைகுறத்தி
ஆரனேயுன் திருவடிக்கீழ் அருச்சுன நான்சரணம்
திருவேங்கடமாயனுக்குச் சிந்தையுள்ளகுறத்தி
செங்கழுநீர்மாலைபூணும் தெய்வநல்லகுறத்தி
சீரானவிஜயனுக்கு கூடைதரவேணும்
சிவசங்கராவென்றுசொல்லித் தேர்விஜயன்தொழுதான்
பார்த்தனுக்குப்பாசுபதம் தொடுத்தாற்போலெனக்கு
பரிவானகுறக்கூடை தரவேணுமையா
விஜயனார்முறையிடவே விமலனார்நாமும்
வீறானகுறக்கூடை அருளினார்மிகவே

வேறு

பார்த்தனதுகைக்கொடென்று பரமசிவன்தானனுப்ப
கொண்டுவந்துகைகொடுத்தார் கொப்பெனவேதூதர்கள்
சந்தோஷப்பட்டானே தாமந்தவாழ்மார்பன்
ஆணலழகுமன்னன் அருச்சுனனாரேதுசொல்வார்

குறம்

அரகராசிவமகாதேவா ஆண்டவனேசரணம்
அற்புதனேயுன் திருவடிக்கீழ் அருச்சுன நான்சரணம்
திரிபுரத்தைநகைத்தெரித்த சிவனேயுந்தன்சரணம்
திங்கள்பிறைதரித்ததொரு தேவாவுந்தன்சரணம்
மங்கையுடன் தங்கையுமாய் மதிசூடுஞ்சிவனே
மான்மழுவுதரித்ததொரு மகாதேவாசரணம்
காமனைக்கண்ணாலெரித்த கைலையங்கிரிவாசர்
கண்மூன்றுடையவரே கர்த்தனே நான்சரணம்
அருச்சுனர்க்குப்பாசுபதம் தந்தாற்போலெனக்கு
அன்புவைத்துக்குறக்கூடை இன்பமுடன் தந்தீர்
கூடைதனை நானிடுக்கிக் குறிகள்மிகவுரைக்க
குறித்தாற்போல்குறியோட குமாரருள்வேணும்
என்றவனுங்கூடைதனை இடுக்கினான்விஜயன்
இயலானதுரோபதையாள் அருகேவந்துநின்றாள்

வேறு

தீயிற்பிறந்தவளே தென்னுடன்பாவையரே
அல்லியிற்பிறந்தவளே அல்லிமலர்நாயகியே
கொடுத்தாற்போல்கூடைவந்து கூடைபறித்தீர்கள்
கூடையிதோவாங்கிவந்தேன் என்றானேகொற்றவனும்

அப்போ துரோபதையாள் அல்லியருமே துசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
இந்திரக்கட்டுவச்சி இயலானபூங்குறத்தி
மந்திரக்கட்டுவச்சி மலையாளப்பூங்குறத்தி
எங்கிருந்துவந்தாய் இளங்குறத்திகூறுமென்றூர்
மின்னிடைக்குச்சொலலி உரைக்குங்குறிகளென்று
எங்களுக்குச்சொல்லி உரைப்பாயிளங்குறத்தி
காண்டாவனமெரித்த காளைமனமகிழ்ந்து
உங்களுக்குக்குறியுரைத்தால் ஏதுதாப்போகிறீர்கள்
மார்பில்தரித்ததொரு மணிப்பதக்கந்தருவீரோ
முத்துமணித்தாழ்வடத்தைத் தருவீரோமொய்குழலே
அப்படியேசெய்கின்ரூேம் ஆனந்தவாழ்மார்பா
என்றதுகேட்டு ஏதுசொல்வானருச்சுனனும்
அங்கவள்காலை மடித்துப்புறத்தணிந்து
வண்ணக்குறக்கூடை வைத்துவொருபுறமாய்
பொற்பிரப்பங்கோல்பிடித்துப்பூங்குறத்திவந்தமர்ந்தாள்
பெண்ணணங்குசேரவே பொற்கொடியாள்வீற்றிருந்து
வாடைக்கிளிபோலே வண்ணமயில்போலே
தென்றற்கிளிபோலே தீவில்மயில்போலே
சற்றேநகைத்தவனும் கனிவாயைத்தான்திறந்து
கூறுவான்பார்த்தனவன் குறமாதரைப்போலே
ஏற்றகுறிதானுரைப்பான் இயலான அருச்சுனனூர்

பெண்களுக்குக் குறி சொல்லுகிற குறம்

தின-எந்தனதுதிருநாடு கேட்கிறையோபெண்ணே
ஏற்றமுள்ள இந்திர ராஜுமெங்கள்நாடு
நாகத்திலே அரியுறையும் எந்தனதுநாடு
நான்மறைகளோதுவதும் எந்தனதுநாடு
பொற்கைவளநாடு எந்தனதுநாடு
பொங்குகடல்திரைசூழும் எந்தனதுநாடு
இந்திரனூர்லோகமும் எந்தனதுநாடு
ஏற்றமுள்ளபாஞ்சாலனுமெந்தநாடு
பச்சைமலைபவழமலை எந்தனதுநாடு
பாண்டியர்களாள்கிறதும் எந்தனதுநாடு
கொச்சிமலைகுடகுமலை எங்களதுநாடு
கொற்றவர்கள் ஆள்கிறது மெந்தனதுநாடு

வெள்ளிமலைபொன்மலைகள் எந்தனது நாடு
விண்ணவர்களாள்கிறதும் எந்தனது நாடு
பாய்போட்டுமுத்தளக்கும் எந்தனது நாடு
பாண்டவர்களாள்கிறதும் எந்தனது நாடு
தோல்போட்டுமுத்தளக்கும் எந்தனது நாடு
துரியோதனனாள்கிறதும் எந்தனது நாடு
அலையடித்தால்முத்தொதுங்கும் எந்தனது நாடு
அல்லியிட திருநாடும் எந்தனது நாடு
எட்டெழுத்தையுட்பொருளா யோதுமந்தநாடு
ஏற்றமுள்ள தீவுகளும் எந்தனது நாடு
ஐந்தெழுத்தையுட்பொருளா யோதுமந்தநாடு
அரியுடனே அயனுறையும் எந்தனது நாடு
திக்குசெயங்கொண்டுவரும் எந்தனது நாடு
சிலைவிஜயன்பெயர்கொண்ட குறத்திநான்பெண்ணே
பஞ்சவர்களைவருட நாடுமெந்தநாடு
பார்த்தனதுபெயர்கொண்ட குறத்திநான்பெண்ணே

வேறு

தோராவடிவழகி துரோபதையாளே துசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
விண்ணின்குறத்தியரே வீறுடையகட்டுவச்சி
நாட்டுவளப்பமெல்லாம் நன்றாயுரைத்தாயே
சீமைவளப்பமெல்லாம் சீராயுரைத்தாயே
உன்பெயரும்ஊர்பெயரும் உச்சிதமாய்த்தோன்றுதடி
தெய்வக்குறத்திநீ தெளிவானகட்டுவச்சி
எந்தனுக்குகைபார்த்து இன்பக்குறியுரையும்
கண்டதுகண்டாற்போல் கட்டுவச்சிகூறுமென்றாள்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்

துரோபதைக்குக் குறிசொல்லுகிறது

தின-வட்டமதிமுகத்தாளே தீயில்வந்தபெண்ணே
வலக்கரத்தைநீகாட்டாய் நான்குறிகள்சொல்வேன்
எழில்விஜயன்தேவியரே பாஞ்சாலன்பெண்ணே
இடக்கரத்தைநீகாட்டாய் இசைந்தகுறிசொல்ல
செங்கமலக்கைத்தலத்தைத் தீண்டியேநான்பிடித்தால்
திருவினையேஅதனாலே குடிப்பழுதுமுண்டோ



மங்கையர்க்கும்மங்கையர்கள் கைகள்தனைப்பிடித்தால்
வாழ்பாஞ்சாலன்மகளாரே குடிக்குப்பழுதுமுண்டோ
பங்கயஞ்சேர்கைத்தலத்தைப் பார்த்தனுமேபிடித்து
பாவையுடமுகம்நோக்கிப் பலகாலுஞ்சிரித்தான்
கட்டழகிகைத்தலத்தைக் கண்ணிலொத்திக்கொண்டான்
கண்மலரோபொன்மலரோ கைத்தலங்களென்பான்
ஸ்தனத்தில்மறுமிகுநலது உன்குலமுநலது
அருச்சுனரைமாலையிட அருந்தணவிலுதித்தாய்
அன்புடையபாஞ்சாலன் உனைவளர்த்தான்பெண்ணே
பார்த்தனைத்தான்மாலையிடப் பத்தரையில்வளர்ந்தாய்
பருவமுடன் நீவளர்ந்த நாளையிலேபெண்ணே
அருச்சுனனேடைந்துபோராம் அரசாண்டதுரைகள்
அரக்குமாமாளிகையில் அவரிறந்தாரென்று
வில்வளைத்தபேர்களுக்கு மெல்லியரைக்கொடுக்க
வீரமுரசுதிவந்து விருதுபறையறைந்தார்
அவ்வார்த்தைமிகவறிந்து அருச்சுனனார்தாமும்
அன்றுமொருபார்ப்பான்போல் அச்சபையில்வந்தான்
இராசாதிராசாக்கள் நாணித்தலைசாய்க்க
நலமுடனேவில்வளைத்து உனைமணந்தான்பெண்ணே
எட்டாதவில்வளைத்து எழில்விஜயன்தனக்கு
இணைபிரியாதேவியராய் நீயிருந்தாய்பெண்ணே
மங்கிலியம்விஜயனார் தரித்தநாள்முதலாய்
மன்னவர்களைவருக்கும் தேவியருமானாய்
தருமர்பெருந்தேவியென்று தனிமாலைசூட்டி
தன்சொல்லேமேலாக இனித்திருந்தாய்பெண்ணே
ஒருவருடம்ஓராண்டு உனைப்பிரியான்விசயன்
உண்மையடியென்குறிகள் தண்மையடிபெண்ணே
தயவுள்ளபெண்ணரசே சகலகுணாதியே
சம்பத்துமென்னாளும் தவறாமல்வாழ்வாய்
என்றவளைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநகைத்தாள்

வேறு

வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
தெய்வக்குறத்திகண்டாய் தெளிவானகட்டுவச்சி
பார்த்ததுபார்த்தாற்போல் பட்சமாய்நீயுரைத்தாய்

கண்டதுகண்டாற்போல் கட்டுவச்சிகூறிவிட்டாய்
உன்னைப்போல்கட்டுவச்சி உலகத்தில்நானறியேன்
என் தங்கையல்லியற்கு ஏற்றகுறிசொல்லுமென்றாள்
பரிகலத்திற்சோறிடுவாள் பாலுமிகப்பூரிப்பாள்
மதுரைவளநாட்டியற்கு வகைபுரிவாய்மலைக்குறத்தி
அழகியபூமாது அல்லியரைத்தான்பார்த்து
காண்டாவனமெரித்த காளையவர்கூறலுற்றார்

அல்லிக்குக் குறிசொல்லுகிற குறம்

தின-ஆறுயிரம்பாண்டியர்கள் அரியதவஞ்செய்ய
அன்றலர்ந்ததாமரையில் வந்துதித்ததிருவே
ஆண்மலடாய்பெண்மலடாய் அரியதவஞ்செய்ய
ஆணழியப்பெண்பிறந்து அவர்களைதீர்த்தாய்
சிறந்தகுலபாண்டியர்க்குச் செங்கோலுஞ்செலுத்தி
தென்னாட்டைத்திறமையுடன் ஆளவந்தாய்பெண்ணே
ஏழாம்பிராயத்தில் இளவயதில்நீயும்
எதிர்த்துவந்தநீன்முகனை தலையறுத்துப்போட்டாய்
தேர்வண்டிக்காலிலே நீன்முகனைஇரடி
செங்கோலரசாண்டாய்நீ திறமையுள்ளபெண்ணே
மதிப்புடனேதென்மதுரை வளநாட்டையாள
வாள்விஜயனுன்னழகைக் கண்டுமடலூர்ந்தான்
மங்கையரேயுன்னழகைக் கண்டுமடலூர்ந்தான்
மற்றொருவன்தன்திறமோ எழுதிமடலூர
அச்சுதனார்கிருபையினால் விசயனார்தாமும்
அல்லியரைஎழுதிமடலூர்ந்துமணஞ்செய்தான்
சொக்கரிடகிருபையினால் செங்கோலுஞ்செலுத்தி
திறமையுடனிராச்சியத்தை யாளுகிறாய்பெண்ணே
பரிவுடனேபாண்டியர்கள் பயின்றெடுத்ததிருவே
பார்த்தனுக்குமயிலணையே பண்புள்ளரதியே
உன்னழகையொருவரா லெழுதவல்லாருண்டோ
ஒருவருடம்உன்மனையில் உனைப்பிரியான்விசயன்
அடியளந்தமைத்துனனு ரானபடியாலே
அதிசயமாயுன்வடிவை எழுதிக்களைதீர்ந்தான்
கும்பமுலைஸ்தனத்தாளே கோதைநகையாளே
குவலயத்தோர்கொண்டாடும் குஞ்சரமேபெண்ணே
அமிர்தமென்னுங்குணத்தாளே அன்னநடையாளே
அரசமுடிதானணிந்த அமிர்தப்பசுங்கிளியே

கொங்கைரெண்டுந்தான் தளும்ப செங்கரத்தால்பிடித்து
கூர்நகங்களழுந்தியுந்தன் மார்பிலணைந்திடவே
செங்கனிவாய்த்தான்பிடித்துத் தானாரலுண்டும்
சேர்ந்தணையவிசயனிப்போ வருவானடிபெண்ணே
என்குறிகளொருநாளும் பொய்யாதுபெண்ணே
எழில்விசயனொருநாளு மணைப்பிரியான் மயிலே
கொம்பனையேயென்குறிகள் பொய்யாதடியென்று
கொச்சியம்மையாணையென்று கூடையின்மேலடித்தாள்
இக்குறிகள்பொய்யாமோ அல்லியரேயென்று
என்னாணை உன்னாணை என்றவளுஞ்சிரித்தாள்

வேறு

நீலக்கருங்குழலி நிகரில்லாப்பெண்பெருமாள்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
வாடிமலைக்குறத்தி மலையாளக்கட்டுவச்சி
தெய்வக்குறத்தி நீ தெளிவானகட்டுவச்சி
நீசொன்னகுறியிலே ஒன்றும்பழுதுமில்லை
கண்டதுகண்டாற்போல் கட்டுவச்சிசொல்லிவிட்டாய்
பார்த்ததுபார்த்தாற்போல் பட்சமாய் நீயுரைத்தாய்
உன்னைப்போல்கட்டுவச்சி உலகத்தில்நானறியேன்
எங்களுக்குச்சொன்ன இசைந்தகுறிகளைப்போல்
எங்களதுபுத்திரர்க் கிசைந்தகுறிசொல்லுமென்றாள்
மைந்தன்மேல்பாடுமென்றாள் மாலைக்குறத்தியரை
பிள்ளைகள்மேல்பாடுமென்றாள் பூங்குறத்திநாயகமே

மைந்தர்மேல் பாடுகிற குறம்

தின-வையைபெரும்பாண்டியர்கள் செய்தபெருந்தவத் [தால்
வாடாததாமரையில் வந்துதித்தநற்றிருவே
பொய்யாதவில்மாரி சொரியவல்லான்புதல்வன்
போர்விசயன்பயின்றெடுத்த புதல்வனுந்தன்பிள்ளை
துதிமுகனையாள்வாண்டி உந்தனிடபுதல்வன்
திக்குசெயங்கொள்வாண்டி தேர்விசயன்புதல்வன்
புகழ்வீரபாண்டியர்கள் தம்முடையபேரன்
பொன்னின்மலைநாடாளும் போரெழுதிதன் மருகன்
பெருமையுள்ளபஞ்சவர்க்குப் புத்திரனுமவனே
பேர்பெரியபுகழான புனந்திரனார்பெண்ணே

என்றவளைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
அல்லியரைக்கொண்டாடியாடியேதான்பார்த்து
அக்கினியில் வந்தவளை மற்றுமவனுரைப்பான்
சிற்றிடையேசெந்தணலில் வந்துதித்தநற்றிருவே
ஜெகமேழுமாள்வாண்டி உந்தனதுபுதல்வன்
அழகுடையபாஞ்சாலன் அவர்களதுபேரன்
அன்னமேவுன்கலியைத் தீர்க்கவந்தபுதல்வன்
பாடிவந்தேனுங்களைநான் பாஞ்சாலன்மகளே
பட்டாடைநீதருவாய் பலபணியுந்தருவாய்
பாஞ்சாலன்மகளேநீ பைங்கொடியேகேளாய்
பந்துஸ்தனமேலிருக்கும் பதக்கமுநீதருவாய்
சிறருடைநீதருவாய் சிறுமணிகள்தருவாய்
செந்தணலில்வந்துதித்த சேயிழைநல்லாளே
என்றவளைத்தான்பார்த்து யிணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போல யிடைதுவளநகைத்தாள்

வேறு

தோராவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
அமையுமமையும் ஆணழகிசொன்னகுறி
போதும்குறத்தியரே பொற்கொடியேசொன்னகுறி
விண்ணனகட்டுவச்சி வீறுடையபூங்குறத்தி
உன்பொருட்டினாலே பிழைப்பாண்டியுன்கணவன்
குங்குமத்திண்டோளன் குலுங்கநகைநகைத்து
போதனையும்போதாச்சு பொழுதென்றால்போகுதுகாண்
மின்னிடையாள்வாசலுக்கு விசயரேபோங்காணும்
அடியார்கள்சாயநல்ல வருச்சுனரேதுசொல்வார்
நீங்கள்-அன்னமுந்தாராவும் அழகுமயில்போலிருக்க
உங்கள்-இருவரையும்விட்டுப் பிரியமனம்வருமோ
உங்களைப்பார்க்கிலு மதிகமோமின்னிடையாள்
எப்படிபோவேன்கா ணிளங்கொடியேஉன்னைவிட்டு
போமென்றுசொல்லிப் பொற்கைப்பிரம்பெடுத்து
பொற்கைப்பிரம்பெடுத்துப்போர்விசயன்றனையடித்தாள்
அடிபட்டுஅருச்சுனனும் ஆலித்தெழுந்திருந்து
சிறுமுறுவலுற்றான்தன் தேவிமுகம்நோக்கி
சீறியடித்தீரே தீயில்வந்ததெள்ளமுதே
சீறியடித்தீரே தெய்வகுலநாயகமே

சீறியடித்தீரே சிங்கவரிப்புலியே
ஆறிற்ருேகோபம் ஆரணங்கேயின்னமுண்டோ
தேறிற்ருேகோபம் என்ருன்சிலைவிசயன்
தோராவடிவழகி துரோபதையுங்கூறுவாள்
எய்யுமதனம்பாலே யெய்யாதேவாள்விசயா
மைகலந்தகண்ணாலே மயக்காதேவாள்விசயா
எங்கள்கவலையைநீர் உத்தரிக்கப்போகிறீரோ
ஆர்க்காகப்போகிறீர் ஆரணங்குவாசலுக்கு
எனக்காகப்போகிறீரோ இந்திரனூர்புத்திரனே
நீரேசுகப்படுவீர் நேரிழையாள்வாழ்ந்திடுவாள்
நீர்-மதப்பட்டயானையைப்போல் நின்றுமயங்காதே
அக்கமாரேகேட்டீரோ ஆரணங்குகுறத்தியவள்
முத்தைநிகர்பல்லும் முருக்கணிந்தசெவ்வாயும்
ஒற்றையிடைமருங்கும் ஒவ்வியஞ்சீர்பட்டுடையும்
பொற்கொடியாள்பேரழகும் பொற்பிரப்பங்கோலழகும்
பார்த்தார்குறத்தியரைப் பங்கயஞ்சீர்கண்ணாளே
மன்னவனூர்சிந்தையது மயங்கிறதைக்கண்டீரோ
வாள்விசயன்சிந்தையது மயங்கிறதைக்கண்டீரோ
வாள்விசயராசாவை வாருமென்றுதானழைத்து
மற்ருெருவர்வாசலுக்குப் போகாதேமன்னவனே
பின்னொருவர்வாசலுக்குப் போகாதேசுந்தரனே
சித்தசன்றங்கையந்த சிறுக்கிமனேபோகாதே
மின்னிடையாள்வாசலுக்கு விசயரேபோயிருந்து
ஓராசனத்திற்கு உடனாகநீயிருந்து
முத்தானமின்னிடைக்கு மூன்றுதிங்களானபின்பு
ஸ்ரீமந்தமென்றுசொல்லி வாருங்காண்தேர்விசயா
கலியாணமென்றுசொல்லி காவலனேநீர்வாரும்
என்றதுகேட்டுமவ ரேதுசொல்வாருச்சுனரும்
தீயிற்பிறந்தவளே தென்னூடன்பாவையரே
அனலிற்பிறந்தவளே அரசாளும்நாயகியே
நீங்களிருவரும் அணிந்திருந்தபொற்பதக்கம்
கூடப்பிறந்ததொரு பதக்கம்கொடுத்தீரானல்
குத்துயிரானாலுங் கொம்பனையேபோய்வாரேன்
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வாள் துரோபதையும்
கொடுத்தாலேயல்லாது கொற்றவனேபோகிறீரோ
என்று-கழற்றிக்கொடுத்தாளே கட்டழகிபொற்பதக்கம்

அவள்பிறந்தபோதே யழுத்தியசீர்பதக்கம்
கூடப்பிறந்ததே கொம்பனையாள்பொற்பதக்கம்
கழற்றிக்கொடுத்தாளே கட்டழகிபொற்பதக்கம்
மின்னொளியாள்வாசலுக்கு விசயரேபோங்காணும்
மற்றொருவர்வாசலிலே மன்னவரேசென்றீரானால்
பின்னொருவர்வாசலிலே போனீரேயாமானால்
வேட்டையிலேகண்டாலே வெட்டியே துணித்திடுவேன்
காட்டிலேகண்டாலே கண்டித்துப்போட்டிடுவேன்
என்சமர்த்துஞ்சேவகமும் எல்லாந்தெரியுமே
போய்வாவிசயாவென்று பொற்கொடியுங்கூறிவிட்டாள்

குறத்தி தனித்துப்போகிறது

மாணிக்கப்பொற்பதக்கம் வாங்கிக்கழுத்திலிட்டு
மாதர்குறத்தியைப்போல் வாள்விசயன் தானடந்தான்
தாங்கிக்குறக்கூடை தன்னிடுப்பில்வைத்ததுவும்
முழங்கையால்தானிடுக்கி மூக்குமேல்கையைவைத்து
அசைந்துநடந்தாள்காண் ஆரணங்குகுறத்தியரும்
பொற்பிரப்பங்கோல்பிடித்துப்போய்நடந்தாள்கட்டுவச்சி
கண்டவர்கள்சோர்ந்துவிழக் கட்டுவச்சிதானடந்தாள்
வாசலுக்குவாசலது படியேழுந்தான்கடந்து
தெத்துகடந்தாளே தெருவீதிபோகலுற்றாள்
அன்னநடை துரோபதையும் அரசாளும்நாயகியும்
அருச்சுனன்போனபின்பு அலங்காரநாயகிமார்
தாதியிருவர்களைத் தையல்மார்தாமழைத்து
அர்ச்சுனனார்பின்னாலே ஆரணங்கேபோங்களடி
அவர்-எங்கெங்கேபோனாலும் எத்திசையிற்சென்றாலும்
எவ்வாசல்போய்நுழைவார் என்றறிந்துவாங்களடி
மின்னிடையாள்வாசலுக்கு விசயனார்போனபின்பு
அருச்சுனரையறியாமல் அறிந்துவாதாதியென்றாள்
அவ்வார்த்தைகேட்டுமே ஆரணங்குபோகலுற்றாள்
அருச்சுனனார்பின்னாலே யாரணங்குபோகலுற்றாள்
அறியாதுபோலாக ஆணழகன்பின்றொடர்ந்தார்

குறத்தி பெண்கள்வீதி வருகிறது

அப்போமலைக்குறத்தி அத்தெருவுந்தான்கடந்து
வீதியும்வீதி தெருவும்பலகடந்து

பவளக்கொடிமாது பத்தினியாள்வீதிவாராள்
அந்தத்தெருகடந்து அப்பாலேபோகலுற்ருள்
போகவதிமாது பொற்கொடியாளேதுசொல்வாள்
நாகமடந்தையந்த நறுநுதலாள்வீதிவாராள்
அந்தத்தெருகடந்து அப்புறம்போகலுற்ருள்
அத்தெருவுந்தான்கடந்து மற்ருெருவீதிவாராள்
சோராவளைமாது சுபத்திரையாள்வீதிவாராள்
அன்னம்போல்நடந்து அவ்வீதிவருகிருளாம்
வாடைக்கிளிபோலே வாராளே அக்குறத்தி
வஞ்சியிடை துவள மாதுஸ்தனங்குலுங்க
இஞ்சியிடை துவள எலுமிச்சந்தனங்குலுங்க
மின்னற்கொடிபோலே மெல்லிவருகிருளே
அழகுதுலங்குது ஆனந்தங்கொஞ்சுகுது
வடிவுகுலுங்குது மாணிக்கங்கொஞ்சுது
மயில்போல்தலைவளைத்து மாதுவருகிருளே
சுபத்திரைவாசலிலே தோழிமார்பார்த்திருந்தார்
இந்தக்குறத்தியரை யெங்கிலுங்கண்டதில்லை
தெய்வக்குறத்தியோ திக்கெட்டில்கண்டதில்லை
மின்னிற்பிறந்தவளோ மேகவர்ணன்மச்சினியோ
கன்னிதிருப்பாற்கடலில் வந்தகருவிளமோ
மாதுகுறத்தியரைக் கண்டதில்லைவையகத்தில்
அடி-வாடிமலைக்குறத்தி மாதருக்குக்கைபார்க்க
சுவாமியுடதங்கையவள் சுபத்திரைக்குக்கைபார்க்க
உண்மைக்குறியுரைத்தால் உச்சிதங்கள்தான்கொடுப்பாள்
ஆடைகள்முத்துரத்னம் ஆபரணந்தான்கொடுப்பாள்
வாடிகுறத்தியென்று வருந்திஞர்தாதியர்கள்
போகமனமுண்டு பொற்கொடியாள்வாசலுக்கு
அல்லிப்பெருமாளும் அறிந்தாளேயாமாகுல்
மின்னிடையாளானபடி வம்பனென்றுமூதிவைப்பாள்
அப்படிக்கேளாளே அல்லிமலர்நாயகியாள்
நீண்முகனைக்கொன்று நிலையிட்டபெண்பெருமாள்
வெட்டத்துணிவாளே வீரியத்தைச்செய்வாளே
கணவனென்றும்பாராளே கண்டித்துப்போட்டிடுவாள்
யாரென்றும்பாராளே அல்லிப்பெருமாளும்
சேர்த்துவுடல்பிளப்பாள் சேவகத்தைக்காட்டுவாளே
வரிந்துவுடல்பிளப்பாள் வல்லமையைக்காட்டுவாளே

உயிரிருந்ததானுக்கால் உப்புவிற்றுவுண்ணலாம்
பொற்கொடியாள்வாசலுக்குப் போவதுநல்லதல்ல
நாளைவருவோமென்று நாயகியும்போய்நடந்தாள்

சகாதேவன்வீதி வருதல்

அத்தெருவுவிட்டு மற்றொருவீதிவாராள்
தாமமுடியானுஞ் சகாதேவன்வீதிவாராள்
அந்தத்தெருவிலே அனந்தம்பேர்பார்த்தார்கள்
மின்னிற்பிறந்தவளோ மேகவர்ணமச்சினியோ
கன்னிதிருப்பாற்கடலில் வந்தகருவிளமே
எழுதவொண்ணுவடிவழகி இவ்வீதிவந்தாள்காண்
இவளைப்போல்கட்டுவச்சி இவ்வுலகில்கண்டதில்லை
காய்க்கும்பிராயமவள் கன்னிகட்டுங்காலமவள்
பூர்க்கும்பிராயமவள் பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சும்பிராயங்கண்டீர் கொழுந்தெல்லாப் பிஞ்சுகண்
பாதிவயதுகண்டீர் பக்கமெல்லாம்பிஞ்சுகண்டீர் [டீர்
மையல்பெருகியே மயங்கியேயோடிவந்தார்
சுற்றிவளைத்தார்கள் சூழ்ந்தார்கள்குறத்தியரை
வாடிமலைக்குறத்தி மாளிகைக்குக்கொண்டுபோறோம்
சிங்காதனத்தில்வைத்துச் சேவித்துப்பார்க்கிறோம்
மெத்தைமேல்வைக்கிறோம் வேணபணிபூட்டுகிறோம்
வருவீரோகட்டுவச்சி என்றுவளைத்தார்கள்
மாதுகுறத்தியவள் மலைக்குறத்தியேதுசொல்வாள்
மயில்போல்தலைவளைத்து மங்கையருமேதுசொல்வாள்
வண்ணக்கிளிபோலே வாய்திறந்தேதுசொல்வாள்

சகாதேவன்வீதியில் குறம்

தின-தருமர்பெரும்நாட்டுக்குள் தழைத்தோங்கிவாழ்ந்
தனிவழியேபோறயென்னை வழிமறிக்கலாமோ [தோம்
இச்சையுடனிவ்வுலகில் பிச்சைக்குப்போறேன்
இஷ்டமுடனோடிவந்து இச்சைசெய்யலாமோ
ஐவருடசீமையிலே அதர்மங்களுண்டாச்சோ
அதிதிபரதேசிகளை அகடுசெய்யலாமோ
கந்தருக்குக்கைபார்க்குங் கானகக்குறத்தி
கண்டவர்க்குப்பெண்டாகப் பெண்டுகளாசொன்னீர்
வண்டாடுகொண்டையின்மேல் கண்டாசைப்பட்டு

மயங்கியேவிழுந்தாளே மனப்பழுதுவருமே
மீண்டுகளைப்பேசாமல் விரைந்தோடிப்போங்கள்
கொண்டவனறிந்தாலே குடிகேடுவருமே
வம்பருமாய்தும்பருமாய் வழிமறித்துஎன்னை
யனையாட்டியாகவே வழிமறிக்கலாமோ.
சாத்திரத்தில்மிகுந்ததொரு சகாதேவராருகில்
சூத்திரமாய்ப்போயுரைத்து தெண்டனைகள்செய்வேன்
என்றவரைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இசைந்தவளும்நடந்தாள்

வேறு

வந்தவந்தமன்னரெல்லாம் மையல்பெரிதாகி
காமவிகாரமது களைகள்பெரிதாகி
சகாதேவராசாவும் சற்றேயறிந்தாலே
பழுதல்லோநந்தமக்கு பார்வேந்தமன்னவரே
ஆக்கினைசெய்வார்காண் அழுப்புவருமன்னவரே [ர்கள்
என்று-அவரவர்மாளிகையில் அசைந்தாற்போல்போனு

நகுலன்வீதி வருவது

அந்தத்தெருக்கடந்து ஆரணங்குகட்டுவச்சி
மற்றொருவீதியிலே வாராளேகட்டுவச்சி
நகுலராதுவீதியிலே நடந்தாளேகட்டுவச்சி
அந்தத்தெருவிலே அனந்தயபேர்மன்னவர்கள்
கண்டார்குறத்தியரைக் கட்டுவச்சிதன்னழகை
பார்த்தார்குறத்தியரைப் பங்கயஞ்சீர்கண்ணுளை
இதுபுதுமைஇதுபுதுமை இதுநெடுநாள்கண்டதில்லை
கண்டுமறியோமே கதையிலுங்கேட்டறியோம்
பார்த்துமறியோமே படத்திலுங்கண்டறியோம்
இவள்போல்வடிவழகி எங்கிலும்நாமறியோம்
இந்தக்குறத்தியரை எங்கிலுங்கண்டதில்லை
என்று-வம்பருந்தும்பருமாய் வந்துவளைத்தார்கள்
மையல்பெருகியே மயங்கியேவந்தார்கள்
வாடிமலைக்குறத்தி எங்களுக்குக்கைபார்க்க
வீதிவீதியாகவே விரும்பித்திரிவானேன்
கானலிலும்வெய்யலிலும் கடுகித்திரிவானேன்
உள்ளங்கால்கொப்பளிக்க உச்சிவெடித்துவிட

வேண்டிவிடாய்த்து வெய்யலில் திரிவானேன்
வாடிமலேக்குறத்தி மாளிகைக்குக்கொண்டுபோரும்
என்றதுகேட்டு யேதுசொல்வாளக்குறத்தி

நகுலன் வீதியில் குறம்

தின-நகுலராசர்வீதியிலே வாழுகின்றமன்னோர்
நலமிகுந்தகுணமுடைய ராசர்களேகேளீர்
இலகுமதிசடையணிந்த ஈஸ்வரனாருளால்
இத்தெருவில்குறம்பாட நத்தியிங்கேவந்தேன்
வித்தகராய்வந்துஎன்னைச் சுற்றிக்கொண்டீர் நீங்கள்
மெத்தவேவருந்துகிறீர் உத்தமரே நீங்கள்
தேவியின்மேலாசைகொண்டீர் ஆவியெல்லாமுருகி
உங்களுக்குப்பெண்டுகளோ உமக்குங்கூத்தியாரோ
உகமையுள்ளமன்னவரே அகமகிழ்ந்துகேளீர்
என்னைவைத்து ஆதரிக்கும் இராசமன்னரானல்
இயல்புறவேமனங்களித்து அரண்மனையில்போவீர்
சிற்றிடையார்வாழுகிற தெருக்களெல்லாந்திரிந்து
சீருடனேகுறம்பாடி பேர்கேட்டுவருவேன்
இலகுபுகழ்வீதியிலே எனைமறுத்தீரானல்
நகுலனது சபைதனிலே நானுரைப்பேன்பாராய்
என்றவரைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவள நடந்தாள்

வேறு

அப்போது மன்னவர்கள் அனைவருந்தான்பார்த்து
குறத்தியிவள் தன்னலே குற்றங்கள்நேருமென்று
மையல்பெரிதாகி மங்கையவள்போகவிட்டாள்
நகுலரறிந்தாலே நந்தமக்குவருமோசமென்று
பெத்தப்பயந்தவர்கள் வீட்டுக்குள்போய்நுழைந்தார்
அவரவர்மாளிகையில் அப்படியேபோய்ச்சேர்ந்தார்

அருச்சுனன் வீதிவருகல்

அப்போகுறத்தியரும் அலங்காரக்கட்டுவச்சி
அந்தத்தெருகடந்து மற்றொருவீதிவாராள்
அர்ச்சுனனார்வீதியிலே அழகாய்நடக்கலுற்றாள்
அந்தத்தெருவிலே அனந்தமானபேர்களெல்லாம்

வண்ணக்குறத்தியரைக் கண்டார்கள்மன்னரெல்லாம்
முத்துநிகர்பல்லும் முறுக்கணிந்தசெவ்வாயும்
புருவச்சிலையழகும் பொருந்துவிழியழகும்
காமன்கிடைந்ததுபோற் கலசத்திளமுலையும்
ஈழத்துதச்சனவன் எழுதிவரவிட்டானோ
மேல்நாட்டுத்தச்சனவன் விளைந்துவரவிட்டானோ
தானேசமைந்தாளே தையலிளங்கொடியாள்
இவள்போல்வடிவழகி எங்கிலும்நாமறியோம்
என்று-வண்ணப்பசுங்கிளியை வந்துவளைந்தார்கள்
சுற்றிநின்றுபார்ப்பார் சுரூபங்குறத்தியென்பார்
வாடிமலைக்குறத்தி மாளிகைக்குக்கொண்டுபோரோம்
மெத்தையின்மேல்வைக்கிறேனடிவேணபணிபூட்டுவோண்
என்றுசிலபேர்கள் இளமாதைச்சூழ்ந்துகொண்டார் [டி
வாடிமலைக்குறத்தி என்றுவழிமறித்தார்
அப்போகுறத்தியரும் ஆரணங்குமேதுசொல்வாள்
மயில்போல்தலைவளைத்து வாய்திறந்தேதுசொல்வாள்

அருச்சுனன் வீதியில் குறம்

தினை-சிலைநுதலாள் மலர்விழியாள் தேர்விஜயன்தாமும்
சூழ்ந்துவந்தமன்னருக்குச் சொல்வாளொருவார்த்தை
பாதிமதிசடையணிந்த பரமசிவனருகில்
பாசுபதம்பேறுபெற்ற பார்த்தன்வடிவுடையோன்
இனியேசகாலர்களை யிராட்சதரைக்கொன்று
இந்திரலோகம்பட்டங்கட்டி யிருந்தரசையாண்டார்
அச்சுதனுர்தோழனவ னருச்சுனமகாராசன்
அவருடையவீதியிலே அழும்புசெய்வாருண்டோ
சத்தியந்தவருத கருமர்தம்பிவிஜயன்
தாக்குடையான்வீதியிலே வாக்குதப்பலாமோ
அய்யமென்றுபாடிவந்தேன் வையகங்கள்மீது
அர்ச்சுனனுர்வீதியிலே அழும்புசொல்வாருண்டோ
பொதுவாகநானுங்களுக்குப் பெண்டுகளாமென்னு
புண்ணியனருச்சுனர்க்குப் போயுரைப்பேன்கண்டீர்
புண்ணியனுர்குந்திமகன் போர்விசையனருளால்
பெண்டாளவந்தீர்களோ பூங்குறத்திதன்னை
மண்டலத்துவீதியெல்லாம் பாடிவந்தயென்னை
மலையாளக்குறத்தியென்று மனதில்நினையாமல்

கொச்சக்குறத்தியென்று சற்று நினையாமல்
கூடுகைக்கு ஆசைமனம் தோன்றுதடா உனக்கு
என்கணவன்பொல்லாதான் எழும்பும்புலிகொல்வான்
எதிர்த்தவரை தலையறுப்பான் மலைக்குறவன்பொல்லான்
காட்டானைசிங்கங்களும் கரடிபுலியானை
கண்டகண்ட மிருகங்களைத் துண்டிடவேகொல்வான்
அண்டையிலேனில்லாதே அகலப்போங்களென்று
அலங்காரக்குறத்தியவள் மிகநோக்கிநடந்தாள்
என்றவரைத்தான்பார்த்து யிணைவிழியாள்மிரட்டி
இளங்குறத்திகளைப்போல யிடை துவள நடந்தாள்

வேறு

வந்துநின்றமன்னரெல்லாம் மையல்பெரிதாகி
ஏக்கத்துப்பார்த்து யிருந்தார்களெல்லோரும்
கையறுந்தயானையைப்போல் கலங்கியே நின்றார்கள்
சிறகுபறிகொடுத்த செம்பருந்துபோலானார்
கொண்டைபறிகொடுத்த கோழிபோலானார்கள்
ஓடுகிறமானுக்கு ஒருகாலொடிந்தாற்போல்
மத்தங்காய்தின்றாற்போல் மயங்கியே நின்றார்கள்
காமக்கணையாலே களைதாங்கிநின்றார்கள்

வீமன்வீதியில் வருகுதல்

அப்போமலைக்குறத்தி அந்தத்தெருகடந்து
மற்றொருவீதியிலே வாராளேகட்டுவச்சி
மன்னன்மதகரியான் மகாராசன்வீதிவந்தாள்
மதகரிவீமனது மாடத்தெருவில்வந்தாள்
வெற்றிமதயானை வீமனதுவீதியிலே
அந்தத்தெருவிலே அனந்தம்பேர்கூடினார்கள்
வம்பராய்க்கூடினார்கள் வல்லார்சிறுவர்களும்
தும்பராய்க்கூடியே சூழ்ந்தார்குறத்தியரை
ஒருவயதாய்க்கூடினார் ஒருகோடிராசாக்கள்
இளவயதாய்க்கூடினா ரிராசாக்களுள்ளவர்கள்
வந்துவளைந்தார்கள் மாதுகுறத்தியரை
இந்தக்குறத்தியரை யெங்கிலுங்கண்டறியோம்
திக்கெட்டில்கண்டதில்லை தெய்வக்குறத்தியரை
இவள்-கட்டுவச்சியல்லவடா காமன்ரதியென்பாரும்
இளநிலவைப்போல யேந்திழையாள்வடிவழகும்

சந்திரவுதயமென்பார் தார்குழலாள்வடிவழகும்
மின்னற்கொடியாளோ மேகவர்னன்றங்கையரோ
கன்னிதிருப்பாற்கடலில் வந்தகருவிளமோ
கிழங்கள்பழங்களெல்லாம் கிட்டிவந்துபல்திறந்தார்
வாராய்குறத்தியரே மாளிகையில்கொண்டுபோரும்
கானலிலும்வெய்யலிலும் கடுகித்திரிவானேன்
வெய்யிலிலேதிரிந்து மெத்தவிடாயாவானேன்
சிங்காதனத்தில்வைத்து சேவித்துப்பார்க்கிறண்டி [டி
மெத்தையின்மேல்வைக்கிறண்டி வேணபணிபூட்டுறண்
பெண்களுள்ளபேரைபேணிதொழில்செய்யவைப்பேன்
ஆண்பிள்ளைகளுள்ளபேரையடப்பம்பிடிக்கவைப்போம
வாராய்குறத்தியென்று மாதரைச்சூழ்ந்துகொண்டார்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
கொம்பிலிருந்து கூவுங்கிளிபோல
கிளிபோலவாய்திறந்து கூறுவாள்கட்டுவச்சி

வீமனது வீதியில் குறம்

தின-சிறந்தகுலபஞ்சவர்கள் செங்கோலைச்செலுத்தி
ஸ்ரீராமர்கிருபையினுல் செகமேழுமாண்டார்
ஏழுபிராயத்திலே யிடும்பன்றனைக்கொன்று
எதிர்த்துவந்தயிராட்சதரைச் சங்கரித்தவீமன்
பத்துப்பிராயத்திலே பகாசூரன்தன்னை
பழுதறவேகிழித்தெறிந்த பாரமகரியான்
மதத்தயானைச்சங்கரிக்கும் மதவீமராஜன்
வாழும்பெரும்வீதியிலே வம்பர்களுமுண்டோ
கொச்சைக்குறத்திநான் பிச்சைக்குவந்தால்
கூடிமயலாகியென்மேலாசைப்படுவாரோ
இச்சையுடனிவ்வுலகில் பிச்சைக்குப்போகிறேன்
இஷ்டமுடனோடிவந்து யிலச்சைசெய்யலாமோ
ஐவரதுசீமையிலே அதர்மங்களுண்டாச்சோ
அதிதிபரதேசிகளை அகடுசெய்யலாமோ
கந்தருக்குக்கைபார்க்கும் கானகக்குறத்தி
வள்ளிக்குக்கைபார்க்கும் வானக்குறத்திநான்
தேவர்க்குகைபார்க்கும் தெய்வக்குறத்திநான்
கண்டவர்க்குப்பெண்டாக மிண்டுகளாசொன்னீர்
வண்டாடுங்கொண்டையின்மேல் கண்டாசைப்பட்டு

மயங்கிவிழுந்தாலே மனப்பழுதுவருமே
மிண்டுகளைப்பேசாமல் விரைந்தோடிப்போங்கள்
கொண்டவனறிந்தாலே குடிகேடுவருமே
வம்பர்களுந்தும்பர்களும் வந்துவழிமறுத்து
மனையாளாய்வாருமென்று யெனையழைக்கலாமோ
இங்கிதமாய்வீமருடன் யானுரைத்தேனுனல்
மயங்கிவிழஉங்களைத்தான் வதைத்திடுவார்போடா
இப்போதுபோயுரைப்பே னப்புறம்போறீரோ
என்றவரைத்தான்பார்த்து யிணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போல யிடைதுவளநடந்தாள்

வேறு

அத்தண்டமன்னரெல்லாம் அசைந்தாற்போல்நின்று
பையல்பெரிதாகி மயங்கியேநின்றுவிட்டார் [விட்டார்
மாணிக்கப்பொற்பதக்கம் மார்பிலசைந்தாட
ஏக்கற்ருற்போல யிருந்துவிட்டார்மன்னரெல்லாம்

தருமர்வீதி வருதல்

அந்தத்தெருகடந்து அப்பாலேபோகலுற்ருள்
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
சந்தனவடிவழகர் தருமராதுவீதிவந்தாள்
மின்னற்கொடிபோலே மெல்லியருந்தான்வருவாள்
காமரூபவடிவழகி கட்டுவச்சிதன்னழகை
அந்தத்தெருவிலே அனந்தம்பேர்கண்டார்கள்
கட்டுவச்சிதன்னழகைக் கண்டார்சிலபேர்கள்
சுற்றிவந்துபார்ப்பார் சொரூபங்குறத்தியென்பார்
கட்டுவச்சியல்லவடா காமன்ரதியென்பாரும்
சாய்த்தநடையழகும் தாழ்வடத்தின்முத்தழகும்
குறத்திவடிவழகைக் கொற்றவர்கள்தான்பார்த்து
பார்த்துமனமிரங்கிப் பல்லேதிறப்பாரும்
மல்கட்டுங்கொங்கையின்மேல் மனங்களித்துப்பார்ப்பா
பின்னழகைக்கண்டு பிர்மித்துநிற்பாரும் [ரும்
முன்னழகைக்கண்டு மூர்ச்சையாய்விழுவாரும்
வாடிகுறத்தியரே மதன்களையைத்தீராயோ
செண்டுஸ்தனமிரண்டும் சேர்ந்துவணைந்திடுவோம்

முத்துநிகர்பல்லும் முறுக்கணிந்தசெவ்வாயும் [போல்
இருண்டெழுந்தசோலையிலே சிவந்தெழுந்தசந்திரன்
அந்தக்குறத்தியரை அனந்தம்பேர்பார்த்திருந்தார்
கட்டுவச்சிநாயகியைக் கண்டுமயலானார்
கிழங்கள்பழங்களெல்லாம் கிட்டிவந்துபல்திறந்தார்
வாடிமலைக்குறத்தி மாளிகையைவிட்டுப்போறோம்
மெத்தையின்மேல்வைக்கிறோம் வேணபணிபூட்டுகிறோ
சிங்காதனத்தில்வைத்துச் சேவித்துப்பார்க்கிறோம் [ம்
பொன்னடிக்கீழ்தெண்டனிட்டு புட்பமலங்கரிப்போம்
மன்மதபாணமது மார்புருகிப்போகுதடி
காமக்கணையாலே கணைதாங்கிப்போகுதடி
சித்தசன்தொட்டகணை சிறுமார்பிலுருகுதடி
மோகனசிங்கமது முகத்தைப்பழிக்குதடி
ஐந்துருபாணமது நெஞ்சுருகிப்போகுதடி
ஆறுருகுபாணமது மார்புருகிப்போகுதடி
கூடியணைந்தாலே குறைதீருங்கட்டுவச்சி
மெத்தையுண்டுமேடையுண்டு வீற்றிருக்கச்சோலையுண்டு
பற்றியுலாவுகைக்குப் பர்ணகசாலையுண்டு
சுற்றியுலாவுகைக்குச்சிங்காரச்சோலையுண்டு
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
படுக்கவிடமுமுண்டு பள்ளிகொள்ளத்தாவுமுண்டு
தின்னநல்லபாக்குமுண்டு செலவழிக்கசெம்பொனுமுண்
அணியப்பரிமளமும் அள்ளிதரப்புனுகுமுண்டு [டு
வாராயோகட்டுவச்சி மாளிகைக்கழைத்துப்போறோம்
என்றதுதொடர்ந்தார்கள் மயலானகுறத்தியரை
மாதுகுறத்தி மலைக்குறத்தியேதுசொல்வாள்
குறமாதர்போலாகக் கொம்பனையாளேதுசொல்வாள்

தருமர்வீதியில் குறம்

தின-கொன்றைமல்லிமுல்லைசூடுங் குமரேசர்நாட்டில்
கொங்குவங்காளமதில் குடியிருக்குங்குறத்தி
கொச்சிமலைகுடகுமலை வாழுகின்றநாங்கள்
குமரேசர்வள்ளியற்கும் குறியுரைக்குங்குறத்தி
பச்சைமலைபவழமலை வாழுகின்றநாங்கள்
பசிகாலமானதே பழங்கூறிவருவோம்
சந்திரகுலம்விளங்கவந்த தருமர்பெருநாட்டில்

TAMIL NADU ARCHIVES LIBRARY
102162
O-,87GPU,M
N52

தாரணியில்குறம்பாட தனித்துவந்தேனிங்கே
பிச்சைக்குறத்தியர்மேல் யிச்சைவிட்டீர் நீங்கள்
புண்ணியனார்தருமருடன் போயுரைப்பேன்பாராய்
தருமர்பெரும்வீதியிலே அதர்மங்களுண்டாச்சே
சற்றெனவேபோயுரைத்துத் தலை[illegible]ப்பேன்பாராய்
பொன்முழுகுந்துறைதனிலே போய்முழுகுவார்தருமர்
பொய்வசனமுரையாத புகழ்வேந்தராசன்
உண்மையுடனவருணக்கு வுரைத்தமதிதானே
உன்னுண்மையாலேவந்து வின்னுண்மைசொன்னீர்
வம்பர்களோ தும்பர்களோ வழிமறிக்கவென்னை
மனையிடத்துசமுசாரி யென்றுமறியாதே
என்குறவன்பொல்லாதவ னிதுவறிந்தானால்
கைப்பிடியாய்ப்பிடித்து கடினமதாகவேதான்
உங்களிட நாவரிந்து வுயிர்வதைகள் செய்வான்
உத்தமர்க்குப்பிறந்ததொரு புத்திரருமானால்
நத்திவந்துயெனை மறிக்க நியாயமுண்டோசொல்வீர்
தேவதாசிமக்கள் நீங்க ளானபடியினாலே
தெருவில்போகுங்கன்னியுரைத் தீண்டியழைத்தீர்கள்
அச்சமற்றநாட்டுக்குள்ளே சற்றும்பயமில்லையோ
அப்புறம்போமென்றவளு மஞ்சிநடைநடந்தாள்

வேறு

மாதர்குறத்தியுட வார்த்தைதனைக்கேட்டவர்கள்
மெத்தப்பயந்தார்கள் விடவிடென்றுதானடுங்கி
ஓடுகிறமானுக்கு ஒருகாலொடிந்தாற்போல்
ஒருகாலொடிந்து ஓடிந்தமுடவனைப்போல்
மையல்பெரிதாகி மயங்கியேநின்றுவிட்டார்
ஏக்கற்றாற்போலே யிருந்துவிட்டாரெல்லோரும்
மத்தங்காய்தின்றாற்போல் மயங்கியேநின்றுவிட்டார்

பள்ளிக்கூடத்து வீதிவருதல்

அந்தத்தெருகடந்து அப்பாலேபோகலுற்றார்
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
ஓதிவைக்கும்வீதியிலே உத்தமியாள்வாராளே
பள்ளிக்கூடத்தெருவில் வாராளேபத்தினியாள்
வாத்தியார்வீதியிலே வருகின்றபாதையிலே
அப்போகடோற்கஜனும் அபிமன்னராசாவும்

போர்க்கஞ்சாமன்னன் புலந்திரராஜாவும்
இந்திரராசனவன் யிளவரையன் கோமானும்
அரவானுந்தொந்திசெட்டி ஐவரிளம்பாண்டவர்கள்
இளம்பஞ்சபாண்டவர்கள் யியலானசிறுவருடன்
அண்டையசல்பிள்ளைகள் ஆயிரஞ்சிறுவருடன்
சிறுவயதுபிள்ளைகள் தோழமார் தன்னுடனே
பள்ளிக்கூடத்திலே பகற்பாடமொப்பிவைத்து
கணக்குத்தொகைகளுடன் வாசகங்களொப்புவித்து
பார்த்தபுதல்வரெல்லாம் பகலமுதுவுண்ணவென்று
ஐயர்சிலமைந்தர்களும் அரண்மனைக்குவாரார்கள்
மக்கள்வருகிறதை வாழ்குறத்திகண்டுவிட்டாள்
செண்டுபந்துவிளையாடி தெருவீதிவாரார்கள்
புத்திரர்தன்வரவைக் கண்டாளே பூங்குறத்தி
பிள்ளைகள்தன்வரவைக் கண்டவளும்பூரித்தாள்
உள்ளங்குளிர்ந்தவளும் உடம்பெங்கும்பூரித்து
சரீரங்குளிர்ந்தாளே சர்வாங்கம்பூரித்தாள் [ன்
அபிமன்னன் தானறிந்தா லாய்ச்சியுடன்போயுரைப்பா
ஆயனுடன்பிறந்தாள் அரிவையாள்தானறிந்தால்
சித்தசன்றங்கையவள் சுபத்திரையாள்தானறிந்தால்
காரியங்களல்லவென்று கடுகநடக்கலுற்றாள்
தெரியாமற்போவோமென்று அஞ்சியவள் நடந்தாள்
விளையாடிவாரபிள்ளை மெல்லியரைக்கண்டுவிட்டார்
பாலர்சிறுவரெல்லாம் பார்த்துவிட்டார்குறத்தியரை
தூரவருகையிலே துரைமக்கள்கண்டார்கள்
காதம்வருகையிலே கண்டான்புலந்திரனும்
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுவான்
அண்ணாவேகண்டீரோ அதிசயமானதை
நம்மூரிற்சூரியன் எங்குதயமாவான்காண்
ஆதித்தன்சூரியன் அவருதயமானுக்கால்
கிழக்குதயமாகியல்லோ மேற்கேபடைந்திடுவான்
மேற்குதயமானாற்போல் விந்தையாய்த்தோன்றுகுது
வருகிறகுறத்திதன் வடிவழகைப்பார்த்திடுங்கள்
குன்றின்மேல்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
இருண்டெழுந்தசோலையிலே குதித்தெழுந்தசந்திரன்
இவளழகும்பாவனையும் எங்கிலுங்கண்டதில்லை [போல்
மின்னற்கொடியோதான் மேகவருணன்மச்சினியோ

கன்னிதிருப்பாற்கடலில் கருவிளமாய்வந்தவளோ
முத்துநிகர்பல்லும் முருக்கணிந்தசெவ்வாயும்
வண்டாடுங்கொண்டையது மயிரழகும்பாவனையும்
புருவச்சிலையழகும் பொருந்தும்விழியழகும்
கூரியமூக்கழகும் குளிர்ந்தமுகமழகும்
காலன்கடைந்தாற்போல் கலசத்திளமுலையும்
இடையழகும்நடையழகும்இடைக்கிசைந்தபட்டுடையும்
ஆபரணமின்னு மலங்காரச்சோதிகளும்
ஈழத்துத்தச்சன் எழுதிவரவிட்டானோ
மேல்நாட்டுத்தச்சனவன் விளைந்துவரவிட்டானோ
சித்திரதிபோலே தெருவீதிவாராளே
பட்டணத்துவீதியிலே பார்த்தீபர்காண்கிலையோ
அஞ்சனம்போல்வாரவளை அருச்சுனனூர்காண்கிலையோ
கண்டால்விடுவாரோ காண்டீபாருச்சுனரும்
ஐயாருகாக அழைத்துப்போய்விடுவோமா
என்றதுகேட்டுமவனே துசொல்வானல்லரவான்
தம்பிகெடுத்தாயே தாழ்வானவார்த்தைசொன்னாய்
அருச்சுனனூர்தம்மருகே அழைத்துப்போய்விட்டாலே
இந்தக்குறத்தியண்டை எந்நேரம்வாசமதாய்
விட்டுப்பிரியாமல் வீற்றிருப்பாருச்சுனரும்
நமது-ஆச்சிமார்பாடெல்லாம் மட்டல்லோ ஆணழகா
மூலைசிறைகாப்பார்கள் மொய்குழல்மார் தாயார்கள்
எந்நேரம்நம்மைவைத்து இடியும்படையுமாகும்
என்னமதிசொன்னீர்காண் என்னுடையதம்பியரே
இத்தையறியேன்காண் என்பிறப்பேயண்ணுவே
ஐயர்குணமறிவோம் அவர்நடக்கைநாமறிவோம்
நம்முடையஆச்சிமார் நாயகிமாரெல்லாரும்
அவரவர்கள்தாய்வீட்டில் அனைவரையும்போகவிட்டு
குறத்தியருகாக குடியிருப்பார்நம்தகப்பன்
என்றிவர்கள்பேசி இசைந்துவருகையிலே
மாதுகுறத்தியிட மார்பில்பதக்கமது
தோராவடிவழகி துரௌபதைநாயகியாள்
அல்லிப்பெருமாளரசாளும்நாயகியாள்
இவ்விருவர்பொற்பதக்க மிவள்கழுத்திற்கண்டார்கள்
கண்டுபுலந்திரனுங் கட்டழகனேதுசொல்வான்
அண்ணுவேகண்டீரோ ஆய்ச்சிமார்பொற்பதக்கம்

ஆய்ச்சிமார்பொற்பதக்கம் ஆரந்திருடிவந்தாள்
கன்னமிட்டுவந்தாள்காண் கட்டுவச்சிநாயகியாள்
விஷமக்குறத்தியரை வெட்டுங்களென்பாரும்
சில்லுபில்லென்று சிறுவரெல்லாங்கூடினார்கள்
வல்லக்குறத்தியரை வந்துவளைத்தார்கள்
கூடைசிலரிழுப்பார் கோபஞ்சிலர்கொள்வார்
ஆடைசிலரிழுப்பார் ஆபரணஞ்சிலர்கொள்வார்
கொண்டைபிடித்திழுப்பார் கூடைபறித்திழுப்பார்
பொற்பிரப்பங்கோல்பறிப்பார் பூவாடைவலித்திழுப்பார்
குள்ளக்குறத்தியரை குட்டுங்களென்பாரும்
கள்ளக்குறத்தியரை காதறுப்போமென்பாரும்
மூல்லைக்குறத்தியரை மூக்கறுப்போமென்பாரும்
சில்லுபில்லென்று சிறுவராய்க்கூடினார்கள்
மலங்கமலங்கவே மடியைப்பிடித்திழுத்தார்
மாலைக்குறத்தி மலைக்குறத்தியேது சொல்வாள்
வண்ணமலைக்குறத்தி வாய்திறந்தங்கேது சொல்வாள்

பிள்ளைகள் இழுக்கிற குறம்

தினை-வம்பியல்லது பியல்ல விலைமாதரல்ல
வழிமறித்துமுனைகுலைத்தல் பண்ணவோவந்தீர்
நம்பிவந்தேன் பாண்டவர்கள் நாடுதனிலிரக்க
நடுவழியிலெனைமறித்து புடவைதனையிழுத்தீர்
அம்புவிழியால்மிரட்டி மடியுப்பிடித்திழுத்தீர்
அறியாதபயல்களென்று நானும்மனம்பொறுத்தேன்
அல்லியிடதிருமகனே அசடியிடமகனே
அல்லாதுளஎந்தனது வல்லாண்மைபாராய்
பஞ்சவர்கள்பிள்ளையென்று பதறுமற்பொறுத்தேன்
பயல்களென்றுகைதாழ்ந்தேன் நெறிமுறைமையாக
அருச்சுனனார்தன்மகனே ஐவர்திருமகனே
அறியாமல்மடிபிடித்தாய் யபராதம்வருமே
வல்லிடும்பிதன்மகனார் வளநாடிமகனே
மதியாமல்மடிபிடித்தாய் குடிப்பழுதுவருமே
அக்கினிதானுங்களுக்கு அணுகாமற்போடா
அல்லிதிருமகனேஉன் ஆண்மைகளுமறிவேன்
சொல்வசனமறியாத தருமரிதையறிந்தால்
ஊறுவருமுங்களுக்கு வேறுபடப்போறீர்

இடபமதிலேறிவரும் ஈஸ்வரனார்மைந்தன்
ஈராறுகரமுடையான் யேழைபங்காளன்
திருத்தணிகைகந்தருக்கும் பாடியிடுங்குறத்தி
தெய்வலோகக்குறத்தியென்று தேசமெங்குமறியும்
மற்றொருத்திபோலவென்னை மடிபிடிக்கவந்தீர்
வரிசையெனக்குடன்பிறந்தார் நால்வருண்டுபொல்லார்
என்மடியைப்பிடித்திழுத்த வார்த்தைதனைக்கேட்டால்
இயலானவுன்மாது திரௌபதையாள்தன்னை
இந்நேரம்பிடித்திழுத்துப் பெண்டுவைத்துக்கொள்வார்
இடங்கெட்டபுத்திபெற்ற மகனே நீபோடா

பிள்ளைகள் கோபித்து சண்டைசெய்கிறது

வேறு

இந்திரராஜனவன் இளவரையனேதுசொல்வான்
அண்ணாவேகண்டீரோ ஆகடியவார்த்தைசொன்னாள்
வாயிடும்புபேசினாள் மன்னவரேகண்டீரோ
சொல்லாதவார்த்தையிவள் சொல்லினாள்கண்டீரோ [வது
கொம்பனையாள்திரௌபதையைக் குறவர்பெண்டாயிகழ்
பத்தினியாளென்றுசொல்லிசற்றுமதியாமற்சொன்னாள்
வாயைக்கிழிப்பேன் மணிமுடியைநான் துணிப்பேன்
மூக்குஷ்தனமறுப்பேன் மூத்துமுடியறுப்பேன்
நாக்கையறுத்திடுவேன் நாணங்குலைத்திடுவேன்
எட்டிப்பழம்போலே இருகண்ணுந்தான்சிவந்து
சவுரிப்பழம்போலே தன்னிருகண்சிவந்து
உருகியசெம்பொனது உதிரம்போல்கண்சிவந்து
இடதுபக்கஞ்சதைகளது ஈட்டிப்போலேதுடிக்க
வலதுபக்கஞ்சதைகளது வல்லயம்போலேதுடிக்க
வாங்கினான்தன்சிலையை மண்ணும்விண்ணுந்தானதிர
வில்வளைத்துநாரிபூட்டி விசையுடனேபாணந்தொட்டா
எடுத்தானேஅம்பு எற்றினானணியிலே [ன்
நாணிபிகுவெடுக்க நாணோசைசப்தமிட
அண்டஞ்செவிடுபட ஆகாயந்தானதிர
தேவர்நடுங்கவே திக்குகளுந்தானடுங்க
சந்திராள்கெதிகலங்க சமுத்திரம்நீர்கள்வற்ற
பிரயோகம்பண்ணுகிறான் பெரிதானஅஸ்திரத்தை
ஒன்றுபத்துநூறு ஓராயிரங்கோடி

ஏற்றினனணிதன்னை இராசாக்கள்தானடுங்க
நகாத்தாசர்கள் திடுக்கிட்டுநாவுலா
சொர்னகிளாஞ்சியது செவிகள்செவிடுபட
கெற்பங்கலங்கவேதான் கிளிகள்சரமாரிகொள்ள
கொற்றவனுமங்கே குணத்தொனிபண்ணினனே
அம்பைத்தொடுத்தானே ஆரணங்கைகொல்லவென்று
விட்டான்சரபாணம் மேனியெல்லாம்நீருக
சரமேற்சரம்தொடுத்தான் சமர்த்தான அல்லிமகன்
அம்புமேலம்பு ஆயுதமாய்பொழிந்தானே
அஸ்திரம்வரும்விதங்கள் ஆர்க்கமுடிபோகாது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடிபோகாது
ஐப்பசிமாதத்திலே அடர்ந்தமழைவந்ததுபோல்
கார்த்திகைமாதத்திலே கனத்தமழைவந்ததுபோல்
சாங்கோபசாங்கமாய்ச் சரமாரிதான்பொழிந்தான்
அஸ்திரம்வருகிற அதிவேகத்திறமையிலே [ரைப்பார்
திக்கிலுள்ளசனங்களெல்லாந் திகிலெடுத்துப்பார்த்து
மாண்டாள்குறத்தியென்று வையகத்தார்சொல்லலுற்றார்
இந்திரபாணமது எப்படியுங்கொன்றுவிடும்
ஐயையோவென்றுசொல்லி அலைவார்சிறிதுபேர்கள்
அல்லிமகன்தொடுத்த அனந்தமானபாணமெல்லாம்
இந்திரன்விட்டதொரு பாணங்கள்தானெழும்பி
கொல்லவேவந்தது கோடானகோடிபாணம்
அருச்சுனனென்றுசொல்லி அஞ்சிப்பயந்தது
வாள்விசயனென்றுசொல்லி மனதில்நினைந்தது
ஆரென்றுசொல்லிவிட்டான் அல்லிமகனிந்திரனும்
தகப்பனைக்கொல்லவோ தான்தொடுத்தார்பாணமது
யாராலேயாகுமிந்த அர்ச்சுனரைக்கொல்லுகைக்கு
பரமசிவன்கையிலே பாசுபதம்பெற்றவரை
நம்மாலேயாகுமோ ராசாவைக்கொல்லுகைக்கு
என்றுபயந்ததுவும் இறங்கியடிபணியும்
தாளியிலையறுக்கும் தாமரைப்பூவோரிதழும்
அட்சதையும்புஷ்பமும் அருகுகெந்தந்தன்னுடனே
மாலைகளாய்வந்து வணங்குதவள்பாதம்
கண்டான்புலந்திரனும் கண்கொள்ளாக்கோபமுடன்
அண்ணவேகண்டீரோ அம்பைவணங்கவைத்தாள்
பாணத்தைதான்மயக்க மருந்தறிவாள்பாவியிவள்

சொக்குப்பொடிமருந்து தூவும்வித்தைகற்றவள் தான்
வானஞ்சுழலவே மருந்தறிவாள்பாவியிவள்
பூமிசுழலவே பொடியறிவாள்தோஷியிவள்
கண்கட்டுவித்தைகளும் காரணமுந்தானறிவாள்
மாயப்பொடிமருந்து மாபாவிதானறிவாள்
மலையாளந்திரிந்தவள் தான் மந்திரமுங்கற்றவள் தான்
ஆனதால் ஆச்சியுட ஆரந்திருடிவந்தாள்
இந்தக்குறத்தியரை என்னசெய்வேன் அண்ணாவே
தெண்டாயுதத்தாலே சீவன்வதைபண்ணுகிறேன்
தெண்டாயுதமெடுத்து சுழட்டியறைகிறேன்
கைபதறித்தண்டெடுத்தான் கனகமணிகச்சசைய
வெற்றிமதயானை வீமன்பயின்றெடுத்த
காளைகடோற்கஜனும் கனகோபங்கொண்டானே
போர்க்கஞ்சாமன்னன் புலந்திரவீரியனே
நீ-அம்புக்குவல்லவன்தான் அருச்சுனனார்புத்திரனே
அம்பைத்தொடுத்தீரோ அனைவோரும்பார்த்திருக்க [க்க
தெண்டுடையான்வீமன் பெற்றதிறமையுள்ளான நானிரு
மிஞ்சாதேதம்பியரே மெல்லியரைக்கொன்றிடுவேன்
எனறேயெழுந்தானே இயல்வீமன்பெற்றமகன்
காளைகடோற்கஜனும் கடுகியேதெண்டெடுத்தான்
எட்டுத்திசைநடுங்க இராசாக்கள்பயந்ததிர
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துவிழுந்திடவே
மந்திரதூபமிட்டு வாங்கிச்சுழட்டிவிட்டான்
கண்டந்தமன்னரெல்லாம் கனகப்பயந்தார்கள்
செத்தாள் குறத்தி சொல்வார்சிறிதுபேர்கள்
மாண்டாள்குறத்தியென்று மண்டலத்தார் தான்புலம்ப
வருகிறகெதாதண்டம் வாள்விசயனைக்கண்டு
ஆரென்றுகொல்லுதற்கு அனுப்பினான்வாள்வீரன்
பார்த்தன்வடிவுடையான் பாசுபதம்பெற்றவனை
நம்மாலேயாகுமோ ராசாவைக்கொல்லுவதற்கு
என்றுபயந்துமே யிறங்கியடியில்விழும்
தாளியிலைபறிக்குந் தாமரைப்பூஓரிதழாம்
மாலையாய்வந்தலவோ வணங்கிற்றவள்பாதம்
கண்டான்கடோற்கஜனுங் கண்சிவந்துகோபமுடன்
சத்திராதிபகையாளியைச் சங்கரிக்குங்கோபதெண்டு
எதிராளிபகையாளியை யிடருறுங்கோபதெண்டு

வச்சிரகோபமெதண்டு வணங்கவைத்தாளிக்குறத்தி
மாயமறிவாள் மருந்தறிவாள்கட்டுவச்சி
இந்தக்குறத்தியரை யென்செய்யவேணுமென்றால்
இந்த-மந்திரவாளாலே யிம்மாதரைவெட்டவேண்டும்
என்றுபகைத்தவனும் யெடுத்தானேவாள்தன்னை
கண்டானே நல்வீமன் கடுகிவந்துதான்மறித்தான்
அபிமன்னன்வாளுக்கு ஆருமெதிரியல்ல
கனமோசம்வருகுதென்று கடுகியவனோடிவந்து
இந்திரசாலவித்தையாலே யெழும்பிவந்துவாள்பிடித்தா
வாடா அபிமன்னு மதியில்லாத்தம்பியே [ன்
தூதரைக்கொன்றாலும் சூல்பசுவைக்கொன்றாலும்
வேதியரைக்கொன்றாலும் விண்ணவரைக்கொன்றாலும்
ஆண்டிபரதேசி அதிதிகளைக்கொன்றாலும்
நம்பினேனென்றவரை நாமவரைக்கொன்றாலும்
ஆதரித்துவந்தவரை அவரைநாம்கொன்றாலும்
மாதரைக்கொல்வதற்கு வாள்தானெடுப்பாரோ
எதிரிபகையாளியல்ல நமையெதிர்த்தசத்துருவல்ல
ஆரென்று ஆயுதத்தை அபிமன்னு நீயெடுத்தாய்
ஆரந்திருடிவந்த அதிசயத்தைநாம்கேட்போம்
தருமராருகாகத் தள்ளிப்போய்விட்டிடுவோம்
கோபத்தையாற்றிவிடு குறத்தியைநாம்கேட்போம்
என்று-வாளைவிலக்கியே மன்னவனல்லரவான்
மாதாகுறத்தியுடன் வாய்திறந்தங்கேதுசொல்வான்
வாடிமலைக்குறத்தி வாழ்பெரியதருமரண்டை
தருமராருகாகத் தள்ளுமடாவென்பாரும்
கூடைபிடித்திழுப்பார் முன்னாலேதள்ளிடுவார்
புடைவைபிடித்திழுப்பார் பின்னாலேதள்ளிடுவார்
கண்ணால்கருகுவார் கையால்சிலரிழுப்பார்
கட்டுமடாவென்பாரும் காதறுப்போமென்பாரும்
நாக்கரிவோம்மூக்கரிவோம் நல்லஸ்தனமரிவோம்
என்று-மலங்கமலங்க மடியைப்பிடித்திழுத்தார்
மாதுகுறத்தியவள் மலைக்குறத்திகூறுவாள்

குறத்தி புலம்புகிற குறம்

தின-கூடையைப்பிடித்திழுத்தீர்கூகு
கொல்லப்போறானென் கணவன்கூகு

தாடையிலேசாம்பவாரீர்கூகு
தலைமயிரைப்பிடித்திழுத்தீர்கூகு
பின்முன்னேயெண்ணமலேகூகு
கையைப்பிடித்திழுக்கவாரீர்கூகு
நன்றி நடுவில்லையோகூகு
நீங்கள் நாடாளும்ராசாக்கள்கூகு
அண்ணர்பொல்லார் நால்வருண்டுகூகு
அறிந்தால்குறைவருமேகூகு
மண்ணளந்தான் தன்மதியோகூகு
மடியைப்பிடித்திழுக்கவாரீர்கூகு
குன்றெடுத்ததிண்மதியோகூகு
கூடைதனைப்பறிக்கவாரீர்கூகு
தருமரிட தன்மதியோகூகு
தாடையிலேசாம்பவாரீர்கூகு
வீமரிட தன்மதியோகூகு
விழியால் மிரட்டுகிறீர்கூகு
அருச்சுனனார் தன்மதியோகூகு
அடிக்கவாரீர்பிடிக்கவாரீர்கூகு
இரட்டையர்கள் தன்மதியோகூகு
நெட்டித்தள்ளுகிறீர்கூகு
மிஞ்சிமிஞ்சியோடிவாரீர்கூகு
மேல்விழுந்துதள்ளுகிறீர்கூகு
ஆளன்கொலைக்காரன் கண்டீர்கூகு
அறிந்தால்குறைவருமேகூகு
அதோவாரானென் கணவன்கூகு
அசல்நாட்டையோடிப்போங்கள்கூகு
இதோவாரானென் கணவன்கூகு
எங்கேயானாலோடிப்போங்கள்கூகு
அங்கிருந்தால் நீங்கள்சாட்சிகூகு
அம்பலத்தார் நீங்கள்சாட்சிகூகு
நான்பண்ணின பாவமிதோகூகு
பசங்களெனை மறிக்கிறீர்கள்கூகு
பறியாதேகூடைதனைகூகு

வேறு

பஞ்சவர்மேலாணையென்ன பயந்துநடுங்கினார்கள்
காளையறவானுங் கட்டழகனேதுசொல்வான்

தள்ளாதேகுறத்தியரைத் தம்பியரே நில்லுமென்ருன்
வாடிமலைக்குறத்தி வார்த்தையொன்று நீர்கேளும்
அன்னையவள்கழுத்தி லாலித்தஆபரணம்
எப்படிக்குவாங்கிவந்தா யிளங்குறத்திசொல்லுமென்ரு
திருடியேவந்தாயோ செம்பொன்மணிப்பதக்கம் [ன்
கன்னமிட்டுக்கொண்டாயோ களவுசெய்துவந்தாயோ
மருந்துமயக்கத்தாலே வாங்கியேவந்தாயோ
எப்படிவந்தாய்நீ யிளங்குறத்திசொல்லுமென்ருர்
வண்ணநடைகட்டுவச்சி வாய்திறந்தேதுசொல்வாள்
அனலிற்பிறந்தாட்கும் அல்லியிற்பிறந்தாட்கும்
இருவருக்கும்கைபார்த்து பெற்றேனேயிப்பதக்கம்
கைபார்த்துகுறிசொல்லிப் பெற்றேன்காண்கட்டழகா
உண்மைகுறிசொல்லிப் பெற்றேன்காணுத்தமனே
அப்படிப்பட்டசமர்த்தியோ நீகுறத்தி
ஆச்சியிடபொற்பதக்கம் ஆருக்குங்கொடுப்பதில்லை
ஆலவாய்ச்சொக்கரவ ரையரேவந்தாலும்
பிட்டுக்குமண்சுமந்த பித்தரேவந்தாலும்
நரியேபரியாக்கும் நாதரேவந்தாலும்
உரியில்வெண்ணெய்திருடியுண்ட உலகளந்தார்வந்தாலு
வெண்ணெய்திருடியவர் மிகவேதயிர்திருடி [ம்
உரலோடுகட்டுண்ட உலகளந்தார்வந்தாலும்
காலனைக்காலாலுதைத்த கர்த்தரேவந்தாலும்
மன்மதனைத்தானெரித்த மகாதேவர்வந்தாலும்
தக்கன்தலையறுத்த வீரபத்திரர்வந்தாலும்
சூரனைச்சங்கரித்த எங்கள்சுப்பிரமணியர்வந்தாலும்
ஆயிரங்கண்படைத்த தேவேந்திரர்வந்தாலும்
எழுதும்பிரமனும் யேமனும்வந்தாலும்
முப்பத்துமுக்கோடி முனிவரேவந்தாலும்
மண்ணிலுள்ளபேர்களெல்லாம் வருந்தியேவந்தாலும்
எவரெவர்வந்தாலும் எக்காலமானாலும்
வாங்காளொருநாளும் மாணிக்கப்பொற்பதக்கம்
உனக்குக்கொடுத்தாளோ வுத்தமியாளென்தாயார்
அவள்பிறந்தவன்றே யழுத்தியசீராபரணம்
கூடப்பிறந்தது கொம்பனையாள்பொற்பதக்கம்
எப்படிவாங்கிவந்தா யெங்களுக்குச்சொல்லுமென்ருர்
எங்கள் ஆச்சிக்குச்சொன்னகுறியெங்களுக்குச்சொல்லடி

இவ்வார்த்தைகேட்டு ஏதுசொல்வாள் கட்டுவச்சி
உங்கள் குணத்திற்குக் குறிசொல்லவேணுமடா
கூடையைப்பற்றி யிழுத்தீரேகொற்றவரே
கூடையின்சேதம் கொடுப்பாரோகொற்றவரே
கூடையின்சேதமது கொடாமல்விடுவேனோ

பிள்ளைகளுக்குக் குறஞ்சொன்னது

தின - கூடையெனுங்கூடைகண்டாய் கொத்தளப்பொன்
குமரேசர்வள்ளியர்க்குக் குறிசொல்லுங்கூடை [கூடை
சந்திரருஞ்சூரியருஞ் சந்தித்தகூடை
தவமுனிகள்ரிஷிகளெல்லாம் நிறைந்திருக்குங்கூடை
குறித்தாற்போல்குறியுரைக்குங் கூடையிதுகூடை
கோபாலலட்சுமிக்குங் குறிகள்சொல்லுங்கூடை
ஆணியில்லா நல்வச்சிர மழுத்தியிருக்குங்கூடை
அபாஞ்சித்தங்கமது இழைத்திருக்குங்கூடை
கொத்தளப்பொன்னிட்டமன்னு கூடைதலையிழுத்தீர்
சந்தனங்களிட்டமன்னு தாறுமாறுஞ்சொன்னீர்
தயவுகந்தவுன மேலே குறியுரைப்பேனோடா
என்குறவன் பொல்லாதவ னெனைத்தேடிவருவான்
உங்களிடமாளிகைக்கு வொதுங்கிநடப்பீரே
அந்திபடும்வேளையாச்சு சந்தடிகள்வேண்டாம் [தி
அரண்மனைக்குப்போங்களென்று மிகவுரைத்தாள்குறத்

வேறு

இவ்வார்த்தைதான்கேட்டு யேதுசொல்வான் நல்லறவா
வாடிமலைக்குறத்தி வார்த்தையொன்று நீர்கேளும் [ன்
ஆச்சிக்குச்சொன்ன குறியிலொன்றுயெங்களுக்கு
சொன்னாலேயல்லாது சுந்தரியேபோகவிடோம்
குறிசொன்னாலல்லாது கொம்பனையேபோகவிடோம்
தருமாண்டையிப்போது தள்ளிக்கொண்டுபோவோமென்றார்
எட்டுநாள்சென்றாலு மிளங்கொடியேயுன்னைவிடோம்
இவ்வார்த்தைகேட்டுமவ ளேதுசொல்வாள்கட்டுவச்சி
உங்களுக்குக்குறிசொன்னா லேதுதரப்போறீர்கள்
தெய்வக்குறத்தியென்று சிந்தையிலேயெண்ணாதே
வீண்குறிகள்சொல்லியே வெறுமையாய்ப்போவேனோ
தருமத்துக்குகுறிசொல்லத் திரிகிறனுமக்களா
இவ்வார்த்தைகேட்டுமவ னேதுசொல்வானல்லறவான்

வீண்குறிகள்வேண்டாங்காண் வெகுமானந்தாரோமடி
உற்றகுறியுரைத்தால் வுச்சிதங்கள்தாரோமடி
அல்லாதேயாமானுல் அடங்கலும்பறிப்போமடி
பாலகர்வார்த்தைக்குப் பார்த்தர்மிகமகிழ்ந்து
சந்தோஷமாகியே தையலருமேதுசொல்வாள்

குறம்

தின-குறத்திதனைவழிமறித்திர் கூத்தாட்டங்கொண்டீர்
கொஞ்சமல்லவுங்களுக்குக் குரோகிதரேகேளீர்
பிறத்தியல்லநானுனக்குப் பேர்மிகுந்தவிசயன்
பேர்கொண்டபூங்குறத்தி பேசாதேபோடா
கைபார்க்கவேணுமென்ருல் காத்தைநீகாட்டாய்
காரியங்களுள்ளபடி வீரியமாயுரைப்பேன் [வாள்
கைத்தலத்தைத்தான்பிடித்துக் கண்ணிலொற்றிக்கொள்
கண்மலரோபொன்மலரோ கைத்தலங்களென்பாள்
குமாரனிடகைத்தலத்தைக் கூடையின்மேலடித்து
கொச்சியம்மையை நினைத்துக் குலமார்பில்வைத்தாள்
மலையாளத்தஞ்சியே வந்துகுறிசொல்லும்
வள்ளிமலைநாயகியே யுள்ளகுறிசொல்லும்
வடவாசல்காக்கும்நல்ல மண்ணுப்பிடாரி
மனையிடத்துதேவதையே வந்துகுறிசொல்லும்
மஞ்சளழுகுகளா மடிச்சீலைக்காரி
மகாபூசைவாங்கியுண்ணும் வனத்துநயினரே
பொங்கல்நயினரே பொற்கொடியேதெய்வம்
பிரியமுடன்குறிகளிந்த புத்திரர்க்கருளும்
அலைகடலிலேயுறங்கும் மாயர்பெருமானே
அலர்மேலுமங்கையம்மாள் அன்புகுறிசொல்லும்
இச்சையுள்ளதேவதைகளனைவோருமாக
கொச்சைக்குறத்தியிட கூடைதனிலமர்ந்து
குறிக்கோலைமுன்னடத்தி குறிகள்மிகவுரைக்க
குமாரரிடநெஞ்சமது மிகமகிழவேதான்
தெய்வங்களை நினைத்தாலே சிலிர்த்துக்கொள்ளுதுடம்பு
தேகமெல்லாமயிர்க்கூச் சிடுகுதடாதம்பி
வாடைமணம்வீசுதடா மயிலவர்வந்தாற்போல்
மயக்குதடாஎன்னுடம்பு சன்னதங்கொண்டாற்போல்
கூடைகொண்டுகவியுதடா கொற்றவரேயெனக்கு
கோலவிழிதுடிக்குதடா குறிகளுரைப்பேன்கேளும்

அருச்சுனனுடைவருக்கும் புத்திரரும் நீரே
அல்லியரசாணியிட பிள்ளைகளும் நீரே
தனஞ்செயர்க்கும்இரட்டையர்க்கும் புத்திரரும் நீரே
தணவில்வந்தபெண்கொடிக்கு மைந்தர்களும் நீரே
முன்னடந்தகாரியங்க ளொன்றுரைப்பேன கேளும்
மாயனருகில் துரியோதிரனும்வந்து
அபிமருக்கெண்ணியிருந்த ஆயன்மகளாரை
அன்பானலக்குணர்க்குச் சுந்தரியைக்கேட்டு
எம்பெருமான் மகளாரைப் பரியமதுபொருந்த
எழுநூறுவொட்டகம்பொன் யீந்தானே துரியன்
அந்தப்பொன்னையவர்கள் பதரெனவே தூற்றி
அளவில்லாத்திரவியத்தை அவரெடுத்துக்கொண்டார்
உபாயமாமுகூர்த்தமிட்டு உலகளந்தமாயன்
இன்றெட்டாநாளையிலே இசைந்துவரச்சொல்லி
இயல்வீமராசனண்டை தூதுநடந்தாரே
பார்ப்பானைப்போல்வந்து அபிமனுடன்சொல்லி
படைபொருந்திமணங்கள்செய்ய வகைகள் நினைத்தாரே
அரவானுந்தொந்திசெட்டி கடோற்கஜனபிமன்னன்
அரசன் திரியோதிரனூர் அவர்தளத்தில்புகுந்தார்
ஒருநொடியில்திரியோதிரன் சபையில்மன்னர்மடிய
புரவிகாந்திரர்மடிய ரதமொடியப்பொடியாய்
சிலைமுறியவரை நடுங்க திரியோதிரனோடே
லக்குணனை வதைகள்செய்து சக்கிரகிரியுருள
துரிதமுடன்வீற்றிருக்குஞ் சுந்தரியையருள
தோலாதேசேவகனே வீராதிவீரா
குறிகளதுபொய்யலடா கொற்றவனேயென்று
கொச்சியம்மையாணையென்று கூடையின்மேலடித்தாள்
பொய்யோடாயென்குறிகள் மெய்யோயிதுபுகல்வீர்
புண்ணியனே அல்லியிட புத்திரனேயென்றாள்
என்றவனைத்தான்பார்த்து இணைவிழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போல இடைதுவளநடந்தாள்

பிள்ளைகள் குறத்திசொன்ன குறிக்குச் சந்தோஷித்து
தாங்க ளணிந்திருந்த ஆபரணத்தைக் கொடுத்தது

வேறு

வாடிமலைக்குறத்தி வண்ண நடைகட்டுவச்சி
ஆச்சியர்தன்னுடைய ஆபரணமானதெல்லாம்

திருடிவந்தாயென்றுசொல்லி திட்டினோம்வைதோமே
தெய்வகுறத்தியம்மா தெளிவானகட்டுவச்சி[யென்றோம்
கன்னமிட்டாயென்றுசொல்லி கட்டுமென்றோம்வெட்டு
கண்டதுகண்டாற்போல் கட்டுவச்சிசொல்லிவிட்டாய்
பார்த்ததுபார்த்தாப்போல் பாங்காய்க்குறியுரைத்தாய்
அறியாமற்செய்தகுற்றம் ஆச்சிமனம்பொறுக்க
தெரியாமற்செய்தகுற்றம் சிந்தையிலேவையாதே
என்று-பாதம்பணிந்தார்கள் பாலர்சிறுவரெல்லாம்
அவரவர்கள்போட்டிருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
ஆரஞ்சரப்பளியும் அழகுமுத்துத்தாழ்வடமும்
முத்தின்கடுக்கனும் மூருகுடனேமோதிரமும்
கழற்றியேமுன்னேவைத்துக் காலில்விழுந்தார்கள்
எடுத்துப்போமாச்சியென்று எல்லோருந்தெண்டனிட்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள் [டார்
வாருங்கவென்மகனே வார்த்தையொன்று நீர்கேளும்
நீங்கள்-திட்டின தும்வைத துவும் தூத்திவில்லாலெய்த
அத்தனையுமெந்தனுக்கு அதிபிரியங்காணுமடா [துவும்
பார்த்தன்முறையாலே படைமன்னு நீங்களெல்லாம்
வாய்த்தான்மகன்காணும் என்றாள்மலைக்குறத்தி
ஆபரணந்தானெடுத் தனைவோர்க்குந்தான்கொடுத்து
பதியோடிருங்களென்று பாலகரேபோங்களென்று
அந்தத்தெருகடந்து அப்பாலேபோகலுற்றாள்

குறத்தி வரும்போது பிராமணாள் இச்சித்தது

மற்றொருவீதியிலே வாராள்மலைக்குறத்தி
பிராமணர்வீதியிலே போகலுற்றாள்கட்டுவச்சி
மாடப்புறாப்போலே மயில்போலேதானடந்தாள்
அந்தப்பிராமணர்கள் அவளழகைக்கண்டார்கள்
வேதப்பிராமணர்கள் மெல்லியரைக்கண்டார்கள்
மையல்பெரிதாகி மயங்கியவரோடிவந்தார்
சிவத்தைமறந்தார்கள் சிவத்தொழிலைத்தான்மறந்தார்
பூசைத்தொழில்மறந்தார் புட்பமெடுக்கமறந்தார்
தவத்தைமறந்தார்கள் தவத்தொழிலைத்தான்மறந்தார்
வாசிக்குமைந்தெழுத்தை மன்னர்மறந்துவிட்டார்
ஞானம்மறந்தார்கள் நற்பூசையும்மறந்தார்
கிழங்கள்பழங்களெல்லாம் கிட்டிவந்துபல்திறந்தார்

குடுமிவிடுத்தவர்கள் கொப்பெனவேவோடிவந்தார்
கண்ணுக்குத்தெண்டமென்பார்காலுக்கடிமையென்பார்
வாடிமலைக்குறத்தி மாளிகைக்குக்கொண்டுபோரேும்
சிம்மாதனத்தில்வைத்துச் சேவித்திருப்போம்
மெத்தையின்மேல்வைக்கிரேும் வேணபணிபூட்டுகிரே
ஆபாணந்தரித்து அலங்கரித்துப்பார்த்திருப்போம் [ம்
பெண்டுகளுள்ளவரைப் பேணிதகொழில்செய்யவைவப்
போம், ஆணுப்பிறந்தவர்கள் அடிமைத்தொழில்செய்
ஊழியங்கள் செயதிடுவோம் உத்தமியேவாரீ ோ [வோம்
கண்ணுக்குத்தெண்டமென்பார்காலுக்கடிமையென்பார்
வாடிகுறத்தியென்பார் மையல்பெரிதாகுமென்பார்
காமக்கணையாலே கலைதாங்கிப்போகுதென்பார்
மாரனவனெய்தகணை மார்பைப்பிளக்குதென்பார்
மோகனசிங்கமது முகத்தையழிக்குதென்பார்
அஞ்சுருகுபாணமது நெஞ்சுருகிப்போகுதென்பார்
அரைநாழியெங்களுடன் அணைந்திருந்துபோடியென்
சுற்றினர்மாதரைச் சூழ்ந்தார்குறத்தியரை [பார்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தங்கேதுசொல்வார்

குறத்தி பிராமணனுக்குச் சொல்லுங் குறம்

தினை-கொச்சிமலைகுடகுமலை குடியிருக்குங்குறத்தி
கொக்குவக்காவுகளும் குட்டிக்கறிசமைப்போம்
பச்சைமலைபவழமலை குடியிருக்குங்குறத்தி
பன்றிகளுமான்களும் கறியாக்கித்தின்போம் [வோம்
காக்காய்தின்போங்கழுகுதின்போம் காட்டோணுஞ்சுடு
கள்ளுவைத்தால்குடங்குடிப்போம் கானகத்துசாதி
காட்டானைசிங்கங்களும் கரடிபுலிதின்போம்
காட்டிலேகுடியிருப்போம் கள்ளக்குறச்சாதி
ஏனந்தின்போம்மிருகந்தின்போம் எங்கள்குறச்சாதி
எச்சானசாதியல்ல எங்கள்குலச்சாதி [ம்
ஆமைதின்போம்கீரிதின்போம் அணிலடித்துச்சுடுவோ
அகடழியும்சாதிகண்டா யெங்கள்குலச்சாதி
பூனைகுத்திவிருந்திடுவோம் புனக்குறவர்நாங்கள்
புகழானகானகத்தில் வாழுகின்றசாதி
நுழைநரியும்மரநாயும் வெள்ளையெலிதின்போம்
நேர்த்திக்கறியானதெல்லாம்பார்த்துச்சமைத்திடுவோம்

குறச்சாதியானதெல்லாம் அரைசாதி நீகண்டாய்
கொச்சைக்குறநாற்றமது குமட்டலையோவுனக்கு
என்னை-கூடியணையமனந் தோணுதோவேதியரே
என்றவரைத்தான்பார்த்து விழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநடந்தாள்

வேறு

வாருங்கள்பிராமணரே வார்த்தையொன்று நீர்கேளும்
என்னைவைத்து ஆதரிக்கும் வேதியருமானாலே
சிற்றிடைமார்வீதியிது தெருக்களெல்லாந்திரிந்து
கொம்பனைமார்வீதியெல்லாங் குறிகள்சொல்லிவாரேனை
பாடிவருகிறேன் பத்தினிமார்வீதியெல்லாம் [யா
நாளைவருகிறேன் நம்பியிருங்களென்றாள்
அத்தெருவுவீதிவிட்டு அப்பாலேபோகலுற்றாள்
ஏக்கத்தாற்போலே யிருந்தார்பிராமணர்கள்
மையல்பெரிதாகி மதிமயங்கிநின்றுவிட்டார்
அப்போகுறத்தியவள் அலங்காரக்கட்டுவச்சி
வீதியும்வீதி தெருவும்பலகடந்து

குறத்தி மின்னொளிவீதி வருகிறது

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையாள்வீதியிலே
பாடிவருகிறாள் பத்தினியாள்வீதியிலே
கூறிவருகிறாள் குறமாதரைப்போல
உறிகொள்வீர்தாம்புகொள்வீர் ஊஞ்சல்கயிறுகொள்வீர்
கொக்குப்பிச்சுகொள்வீர் கோரோசனைஉண்டைகொள்வீ
குழந்தைகள்விளையாடக் கிலுகிலுப்பைகொள்வீர் [ர்
பச்சைமணிகொள்வீரோ பருஞ்சிலங்கைகொள்வீரோ
நரைபோயிளமைவர நல்லமருந்துண்டைகொள்வீர்
வாழாதபெண்களுக்கு வாழ்மருந்துண்டைகொள்வீர்
சேராதபெண்களுக்குச் சேரமருந்துண்டைகொள்வீர்
கூத்திகளுக்காக மருந்துகொள்வீர்கொற்றவரே
வேசிக்கிடுமருந்து கொள்வீரோவேந்தர்களே
கைபார்ப்பேன்குறியுரைப்பேன் காரியங்களுள்ளபடி
கூடைமுறங்கட்டுவேன் குறிகள்மிகவுரைப்பேன்
பச்சைபொட்டுகுத்தலையோ பைங்கொடிமாதர்களே
என்று-பாடிவருகிறாள் பத்தினிமார்வீதியெல்லாம்

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையாள்வாசலிலே
காத்திருக்குந்தோழிமார் கன்னியர்கள்கேட்டுவிட்டார்
ஆய்ச்சி-வாழாதிருக்கிருள் மாதுநெடுநாளாக
கூடாதிருக்கிருளே கோதுநெடுநாளாக [தி
அவள்-மன்னன்வருங்குறியைச் சொல்வாள்மலைக்குறத்
பிச்சைகுறிபொய்யாது மெய்யாகுமாச்சியரே [வந்தார்
நம் பிட-ஆச்சிக்குச்சொல்வோமென் ருணங்குமோடி
விளங்கியசீர்மாதவத்து மின்னிடைக்குதெண்டனிட்டார்
ஆச்சியரேகேளீர் அடியேன்காண் விண்ணப்பம்
காணுதவதிசயங்கள் கண்டேனுன்வீதியிலே
தெய்வக்குறத்தியவள் தெளிவானகட்டுவச்சி
மின்னிற்பிறந்தவளோ மேகவர்னன்மச்சினியோ
கன்னிதிருப்பாற்கடலில் வந்துதித்தகருவிளமோ
எழுதவொண்ணுவடிவழகி யிவ்வீதிபாடிவந்தாள்
கைபார்த்துக்குறிசொல்வாள் கட்டுவச்சிநாயகியாள்
மன்னன்வருங்குறியைச் சொல்வாள்மலைக்குறத்தி
பிச்சைகுறத்திகுறி பொய்யாதுமெய்யாகும்
அகத்தினிலுள்ளாக அழைக்கத்திருவுளமோ [யாள்
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்மின்னிடை
புதுமைபுதுமையிது பொற்கொடியேயுன்பேச்சு
இதுபுதுமைகாணும் யிளங்கொடியேயுன்பேச்சு
நானும்மனுஷியோ நாட்டிலேயுங்கூட்டுறவோ
என்மனதில் குறைகளென்ன வாடிமயங்கிறதேன்
துக்கந்துயரமென்ன சிறையிருக்குந்தன்மையென்ன
நான்நாலுபேரைப்போல் நலமாகவாழ்கிறேனே [லே
இத்தனையும்போட்டுவைத்துக் கைபார்த்துக்கொண்டா
நகையாரோநம்மையிந்த நாட்டிலுள்ளபெண்களெல்லா
வாழ்கின்றபெண்களெல்லாம் மாதேநகையாரோ [ம்
மனங்களித்தபெண்களெல்லாம் தாழ்வுகளைசொல்வா
எழுத்துப்படியெனக்கு யிட்டுமிருந்தாலே [ரோ
கட்டுவச்சியென்செய்வாள் காரிகையேபோடி என்ருள்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியவள் கூறுவாள்
இப்புவியில்வந்ததொரு இளங்குறத்திதானுமல்ல
தெய்வக்குறத்தியவள் செம்பொன்மலைக்குறத்தி
மந்திரமுந்தந்திரமும் வண்ணமருந்துண்டைகளும்
இந்திரஜாலவித்தை யெல்லாம்மறிந்தவள்காண்

அவள்வந்துகைபார்த்தால் மனதில்குறைதீரும்
பார்த்தால்வரும்படி பகரவல்லாள்பைங்கொடியாள்
வாள்விசயனிங்கேதான் வருங்குறியைச்சொல்லவல்லா
ஆச்சிகுறத்தியரை அழைக்கசெலவருளும் [ள்

மின்னொளியாள் வீட்டுக்குக் குறத்தி வருகிறது

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
வாழாதார்வாசலுக்கு வருவாளோகட்டுவச்சி
ஆனாலழையுமென்று அன்னநடைமாது [ந்து
சிறைச்சாலைமண்டபத்தே தேன்மொழியாள்விட்டெழு
அலங்காரமண்டபத்தி லாரணங்குவந்தமர்ந்தாள்
அப்போதுதாதிமா ராரணங்குமோடிவந்து
வாடிகுறத்திபெங்கள் மாதுவழைக்கிறாள்
எங்களாச்சியற்குகைபார்க்கஆரணங்கேவாருமென்றாள்
தாதியழைக்கையிலே சந்தோஷமாயவளும்
வந்தேன்வந்தேனென்றுசொல்லி மலைக்குறத்தியுள்நு
இந்திரக்கட்டுவச்சி யேற்றமுள்ளபூங்குறத்தி [ழைந்தாள்
மந்திரக்கட்டுவச்சி மலையாளப்பூங்குறத்தி
வண்ணக்குறத்தியவள் மலைக்குறத்தியுள்நுழைந்தாள்
ஓடமலர்க்கண்ணாளும் வுள்வாசல்போய்நுழைந்தாள்
அல்லியிற்பிறந்தாளும் அனலிற்பிறந்தாளும்
இருவரனுப்பிவைத்த இளங்கொடிதாதியர்கள்
மின்னிடையாள்வாசலுக்கு விசயனார்போனபின்பு
அன்னநடை[illegible]தார் அவர்திரும்பியோடிவந்தார்
அல்லியர்க்குந்துரோபதைக்கும் ஆரணங்குதெண்டனிட்
பார்த்தன்பிறகாகப் போனாரேபைங்கொடியே [டாள்
கண்டமுடிமன்னர் கன்த்தமயலானார்
தெண்டனிட்டுப்பார்ப்பாரும் சேவித்துநிற்பாரும்
சுபத்திரையாள்வாசலிலே தாதியழைத்ததுவும்
பள்ளிக்கூடத்துப் பசங்களிழுத்ததுவும்
பண்ணாதும்பண்ணியவர் பங்கமழித்ததுவும்
கொனைக்குறத்தியைப்போல் குறிகளுரைத்ததுவும்
மின்னிடையாள்வாசலுக்கு விசயனார்போனதுவும்
ஒன்றுமொளியாம லுரைத்தார்கள் தாதியர்கள்
இருவருங்கேட்டார்க ளின்பக்கரைபுரண்டு
சந்தோஷமானார்கள் சரீரமதுபூரித்தார்



அன்ன நடைமின்னிடைக்கு அனந்தஞ்சிறைதீர
எத்தனை நாட்சென்றது யிளங்கொடிமின்னிடைக்கு
இத்தனை நாளு மிருந்தகுறைதீர
மன்னவனை நன்ருய் மனமுகந்தணையவல்லாள்
கூடியணைந்திடுவாள் குறைகளைத்தீர்த்திடுவாள்
அன்று-குங்குமத்திண்டோளன்குலுங்கநகைநகைத்து
சிவிகையின்மீதேறித் தேன்மொழிமார்போகலுற்ருர்
மையெழுதாக்கண்ணும் மலர்ச்சொருகாகேசமும்
பாக்குதின்னுவாயும் பத்தினியாள்தன்முகமும்
வெற்றிலைதின்னுள் விரும்பாய்விடாமுகமும்
மஞ்சளணுகாத வடிவுடையாள்மார்பழகும்
என்தேவியாயிருந்து யிவள்சிறையாவானேன்
இவள்-பொன்னனமேனியது புழுதிபடக்காரணமேன்
தங்கத்திருமேனி தழும்புபடக்காரணமேன் [கன்னி
இவள்-வாய்மதத்தினுலேயல்லோவாழ்விழந்தாள்மாது
என்று-பொங்காரமெல்லாம் அடக்கியொருபுறமாய்
சிங்காரக்கட்டுவச்சி போலேசிரித்துவந்தாள்
மங்கையரைப்பார்த்து உரைப்பாள்பலைக்குறத்தி

மின்னொளியைப் பார்த்துச் சொல்லுங் குறம்

தின-திருத்தமதிமுகத்தாளே மின்னொளியேகேளும்
உன்-செம்பொன்மணிமாளிகைக்கு செயலாகவாச்சே
வலப்புறத்தில்கெவுளி நின்று சொல்லுதடிபெண்ணே
மனைக்குறியான்வாழ்விசயன் வருவாணடிபெண்ணே
மனைக்குறியான்வாழ்விசயன் வருவாரேயானுல்
எனக்குநல்லகறிசோறு யிடுவாயடிபெண்ணே
ஆக்கினசோறுகறி தாம்பூலமெனக்கருள்வாய்
அருகுகட்குச்சேலைமுழம் பழந்துணியுந்தருவாய்
அருளுஞ்செல்வமுண்டுவுந்தனுளன்வரப்போருன்
அறுமுகவன்றிருவருளா லாளனவருவாண்டி
பேருமுண்டுபெருமையுண்டு பெண்மயிலேகேளாய்
பெருவயிறன் திருவருளால் புருஷன்வருவாண்டி
இந்திரன்குமாரனவன் சந்திரமுகத்தாண்டி
இன்னேரம்வரப்போருன் யிளமயிலேகேளும்
நல்மருந்துகுளிசமிது நாடன்முடிபெண்ணே
கைமருந்துவடுமொத்த கரையுமோடிபெண்ணே

விற்பொருதும்விழியாளே மின்னொளியேகேளாய்
அக்காமணிகொக்காமணி கொள்வாயடிபெண்ணே
ஆறுமுகர்க்குக்குறியுரைக்கும் குறத்திநான்பெண்ணே
காக்காய்தின்னுங்குறத்தியல்ல கண்டகுறிப்பாட
கந்தருக்கும்வள்ளியர்க்கு முகந்தகுறிசொல்ல
ஏற்றஜனசோழவள நாட்டுக்குறத்தியைப்போல்
இச்சைசொல்லவகையறியேன் ஈஸ்வரனறிய
வக்காவும்கொக்காவும் தின்கிறவளல்ல
வம்புபேசிமனைதோறும் போறவளுமல்ல
கைபார்ப்பேன்கண்டுரைப்பேன் கடுகியனைபோறேன்
கறிசோறுதுகிலாடை கடுகியேதந்தருள்வாய்
மெய்க்குறிகள்நானுரைப்பேன் மின்னிடையேகேளாய்
கைக்குழந்தைவுச்சிக்கெண்ணை குத்துதுளிவார்ப்பாய்
இந்நாட்டில்வாழுகிற குறத்தியல்லபெண்ணே
எப்போதுமிந்திரற்கும் கைபார்க்குங்குறத்தி
இந்நாடுயெங்களுக்குப் பொன்னாடுகண்டாய்
என்னணைஉன்னணை யென்றவளுமுரைத்தாள்
அல்லியர்க்குதுரோபதைக்கு மன்புகுறிசொன்னேன்
அவர்கள்மெச்சியெந்தனுக்கு ஆபரணங்கொடுத்தார்
உச்சிதமாய்க்குறியுரைத்தேன் மெச்சியவரெனக்கு
அவர்பிறந்தநாளையிலே அழுத்தியதோர்பதக்கம்
ஆபரணந்தான்கொடுத்து அனுப்பினார்பெண்ணே
மின்னிடையாளெந்தனுக்கு மிகவுங்குறியுரைத்து
மிகவுமவர்குறத்தியென்று மிகவெனக்குமுரைத்தார்
நன்றாகயுன்மனைக்கு நான்வரும்போது
நல்லமுகூர்த்தஞ்சொல்லுகிறது எண்ணத்தொலையாது
வாசல்பலபலவென்று நேசத்துடன்சொல்ல
வருவாண்டியுன்கணவன் வள்ளியம்மையருளால்
குவிமுலையாளேயென் குறிகளும்பொய்யாது
கொச்சியம்மையாணையென்று கூடையின்மேலடித்தாள்

வேறு

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
உன்பதியொத்தவாழ்முகமேன் வார்டார்கருங்குழலேன்
ஏதடிகட்டுவச்சி யெந்தநாடுந்தனது
எந்தவூருங்களது யெனக்கறியச்சொல்லுமென்றாள்
மாலைக்குறத்தியவள் மலைக்குறத்திகூறுவாள்

மலைக்குறத்தி தன்வரலாறு சொன்ன குறம்

தின—எந்தனிட திருநாடு கேட்கிறையோபெண்ணே
ஏற்றமுள்ளயிந்திரனு ராளுமெந்தநாடு
கொங்குவங்காளமது எங்களிட நாடு
குலவிஜயன்பெயர்போன குறத்திநான்பெண்ணே
வங்காளம்சிங்காளம் மராட்டியமெங்கள் நாடு
வாள்விசயன்பெயர்கொண்ட குறத்திநான்பெண்ணே
எங்களிட திருநாடு கேட்கிறையோபெண்ணே
மேனகைக்கும்ஊர்வசிக்குப் அதிகமுள்ளபெண்ணே
சந்திரர்கள சூரியர்களுதிக்குமெந்தநாடு
தான தருமம்புரியுந் தர்மமுள்ள நாடு
இந்திரனூர் ஆளுவது எந்தனிட நாடு
இடக்கதலிபழுப்பதுவும் எந்தனிட நாடு
அன்னக்கொடி நின்றசையும் எந்தனிட நாடு
அதிசயமாய்வாழ்கிறதும் எந்தனிட நாடு
அதில்—துரும்பசையத்தேன்சொரியுமெந்தனிட நாடு
கரும்புவளர்சோலைசூழ மெந்தனிட நாடு
விரும்புமுல்லைமணஞ்சூழ மெந்தனிட நாடு
வேலருடன்வள்ளியம்மை வாழுமெந்தனிட நாடு
பச்சைமலை பவழமலை யெந்தனிட நாடு
பசிகாலமானதே பழங்கூறிவருவோம்
கொச்சிமலைகுடகுமலை யெந்தனிட நாடு
குளிர்காலமானதே குறம்பாடிவருவோம்
பஞ்சவர்களாளுவது மெந்தனிட நாடு
பார்த்தனென்றும்பேர்கொண்ட குறத்திநான்பெண்ணே
கச்சணியுமுலையாளே கனகரதியாளே
கைத்தலத்தை நீகாட்டாய் கனத்தகுறிசொல்ல
என்றவளைத்தான்பார்த்து யிணைவிழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போல யிடைதுவள நகைத்தாள்

வேறு

விளங்கியசீர்மாதவத்துமின்னிடையாளேதுசொல்வாள்
திருமாலவர்பொருட்டால் திருமாதோ பூமாதோ
நகர்சோதனைக்காக வந்ததுமுதலோ
கட்டுவச்சிவீற்றிருக்க வட்டமணையிடுங்கள்
பொற்கொடியாள்வீற்றிருக்கப் பூம்பலகைபோடுங்கள்

வட்டமணைபோட்டார் மணித்தடுக்குதான்போட்டார்
வாடிமலைக்குறத்தி வட்டமணைமேலே
வளநாடிகைகாட்ட மலைகுறத்திஉளமகிழ்ந்தாள்
இட்டமுகூர்த்தமது லட்சணமென்றுசொல்லி
இட்டமணைமேலே வந்திருந்தாள்பூங்குறத்தி
ஒருகால்மடித்தாலே ஒருகால்புறக்கணிந்தாள் [தாள்
கூடையொருபக்கம்வைத்து கொம்பனையாள்தானிருந்
கூறுவாள்கொம்பினது மரத்தின்கிளிபோலே

குறத்தி மின்னொளிக்குக் கைபார்க்கும் குறம்

தின-கனத்ததொரு ஸ்தனத்தாளே கைத்தலத்தைக்காட்
டாய்,உன் கணவனிப்போவருங்குறியைக்கண்டுநான்சொ
ல்ல, பங்கயஞ்சீர்கைத்தலத்தைப் பார்த்தனுமேபிடித்து
பாவையிடமுகம்நோக்கிப் பலகாலுஞ்சிரித்தாள்
இடக்கரத்தைத்தான்பிடித்து யிளங்கொடியேயென்பாள்
இளங்கொடியாள்கைத்தலத்தை கண்ணிலொத்திகொள்
கண்மலரோபெண்மலரோகைத்தலங்களென்பாள்[வாள்
மங்கிலியம்வரம்பெறுவாய் மைந்தர்களைப்பெறுவாய்
மனமகிழகணவனிபபோ வருவாண்டிபெண்ணே
உண்மையெந்தன் குறிகளது வுண்மையிதுபெண்ணே
வண்மையுள்ளசோழனிட மனுநீதியாலே
மதியாமலரசாளும் மன்னவன்மகளாரே
வாள்விசயன்மேலாசை தோணுதடிவுனக்கு
கூருனவிழியாளே கொம்பனையேகேளாய்
கூடுவது ஆசைமனந் தோணுதடியுனக்கு
பார்த்தேனடிஉன்கையின் லட்சணங்களிப்போ
பவனிமுழுதாளுகிற சோழன்மகளாரே
தகதகெனகைவளையல் கைபிடிக்கநானும்
தயவுள்ளபுருஷனிப்போ வருவாண்டிபெண்ணே
மயலாகிமனமுருகி வடிவுள்ளபெண்ணே
நீர்-செயராகிசெய்தகுறை சொல்லுகிறேன்கேளாய்
சங்கமரைப்பூசைசெய்யும் வேளைவந்தானென்று
தனஞ்செயனுர்வருகிறதைத் தள்ளிவிட்டாய்பெண்ணே
ஈஸ்வரனைப்பூசைசெய்யும் வேளைவந்தானென்று
எண்ணுமல்விஜயனைத்தான் தள்ளிவிட்டாய்பெண்ணே
அன்றுமுதல்நெடுநாளாய் வாராதவிசயன்

அறுமுகவன் திருவருளால் வருவானேடி பெண்ணே
என்றவளைத்தான் பார்த்து இணைவிழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போல இடைதுவள நகைத்தாள்

வேறு

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
முத்தணிந்தபல்லோ முருக்கணிந்தசெய்வாயோன்
உந்திசுழியழகன் உரோமத்தின் பேரழகன்
கூரியமூக்கழகன் குளிர்ந்தமுகத்தழகன்
தொந்தமிடும் ஆலிலைபோல் துய்யவயிறழகன்
நடையும்நடையழகன் நடைக்கிசைந்தஇடையழகன்
காய்க்கும்பிராயமடி கன்னிகட்டுங்காலமடி
பூர்க்கும்பிராயமடி பிஞ்சுவிடுங்காலமடி
கொஞ்சம்வயதல்லவோ கொழுந்தெல்லாம்பிஞ்சலவோ
பாதிவயதல்லவோ பக்கமெல்லாம்பிஞ்சலவோ
சுவரிலெழுதலாம் சித்திரம்போல்பார்க்கலாம்
படத்திலெழுதலாம் பதுமைபோல்பார்க்கலாம்
இத்தனையழகான இளங்குறத்திகட்டுவச்சி
சித்திராதிபோலே தெருவீதிவந்தாயே
கொண்டகுறவனுன்னைக் குறிசொல்லவிட்டானே
மதிகெட்டுவிட்டானே மங்கையரேயுன் கணவன்
அறிவழிந்துவிட்டானே ஆணழகியுன்குறவன்
விட்டுபிரிந்தானே வெறியனேவுன் கணவன்
கண்டால்விடுவாரோ காண்டீபங்கொண்டவரும்
அடங்காதழகையெல்லாம் கண்டாலழையாரோ
மானேயுனைக்கண்டால் மற்றொருதேவியரை
மற்றுமொருதேவியரை நத்தியேபோவாரோ
தேன்மொழிமாதர்களைத் திருஷ்டித்துப்பார்ப்பாரோ
என்-வாணுளைவாங்குகைக்கு வந்தாய்மலைக்குறத்தி
என்றதுசொல்லி வுரைத்தாளிளங்கொடியாள்
மாலைகுயிலாள் மலைக்குறத்திகூறுவாள்

குறம்

தினை-எந்தனிட குறவன்மதி கெட்டவனேயென்றாய்
எப்படிஉனக்குக்குறி சொல்வேண்டி நன்றாய்
எங்களிடசாதிகளி லேர்வையிதுதாண்டி
ஏச்சானசாதியல்லோ எங்கள் குறச்சாதி

சந்திரனோடொத்ததொரு திருமுகத்திலழகன்
தாளப்போலொத்ததொரு தவளப்பூவழகன்
திருக்கண்களொளியழகன் செங்கனிவாய்சிவப்பழகன்
செந்தூரவழகன் பந்துஸ்தனமழகன்பெண்ணே
இத்தனைக்குமழகான இளங்கொடியேயுன்னை
இது நெடுநாளுன்கணவன் ஏன்பிரிந்தான்சொல்வாய்
ஏச்சானசாதியல்லோ எங்கள்குலச்சாதி
இளங்கொடியேயுன்கணவன் ஏன்பிரிந்தான்சொல்வாய்
உங்களிடகுலந்தனிலே இயற்கையிதுதானோ
உன்னைப்போல்வாழாதா ருலகத்திலுண்டோ
இக்காலஞ்சிறையிருக்க மிக்கவரைதன்னில்
இளங்கொடியேவாழாம லிருந்ததென்னசொல்வாய்
எங்களிடகுறக்குறத்தி லேர்வையல்லகண்டாய்
இதனாலேபழுதில்லை கைபார்க்கநீவா
பங்கயஞ்சீர்முகத்தாளே கைதாராயென்று [வாள்
பைங்கிளியாள்கைத்தலத்தைக் கண்ணிலொத்திக்கொள்
பங்கயஞ்சீர்கைத்தலத்தைக் கண்ணிலொத்திக்கொள்வா
அவனிமுழுதாளுகிற சோழன்மகளாரே [ள்
மங்கிலியம்வரம்பெறுவாய் மைந்தர்களைப்பெறுவாய்
வள்ளியம்மைதன்னுணை மயிலவனாரணை
என்றவளைத்தான்பார்த்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இயம்பியவள்சிரித்தாள்

வேறு

விளங்கியசீர்மாதவத்துமின்னிடையாளேது சொல்வாள்
சிறையிருந்தோமானாலும் தினம்வாழ்ந்தோமானாலும்
வாசற்படியகலோ மற்றோர்மனைபுகுதோம்
வீதிதனிலேதிரியோம் வேல்புருவங்கண்ணாளே
நீ-அடங்காதழகுமாய் ஆசைப்பசுங்கிளியே
வேசையர்கள்போலாக வீதிபுறப்பட்டாய்
கண்டால்விடுவாரோ காண்டீபங்கொண்டாரும்
பார்த்தால்விடுவாரோ பார்த்தன்வடிவுடையோன்
மாலைக்குறத்தி மலைக்குறத்தியேது சொல்வாள்

குறம்

தின-விசயனார்கண்டாலே விட்டுவிடானென்றாய்
மின்னிடைநீயானாலே நாவெழுந்துசொன்னாய்

சிலைவிசயன் நீதிமிகு நெறிமுறைமைதவறான்
திக்குஜெயங்கொண்டவனார் சேவகனார் தமக்கு
மலைபோலுந்தெய்வகன்னி யூர்வசியாள் ரம்பை
மலர்மாதுபோல வடிவுடையகுணமாது
மையல்கொண்டூர்வசியாள் மயங்கியேதான்விழுந்தாள்
மகிழ்பார்த்தன்மாதாவே போமென்றுவிட்டான்
அவள்வடிவுக்கொப்பான அரிவையர்களுண்டோ
ஆனாலுமருச்சுனனார் அவர்நீதிதவறார்
தலையழிவுவந்தாலும் அருச்சுனனார்தாமும்
தன்தாரமல்லாமல் பிறர்தாரம்விரும்பார்
குலவரையன்மகளேயுன் மதத்தாலேநீயும்
கூசாமல்வம்பனென்று கூறிலைவத்தாயவரை
நிலைமையொடுநீயவரை வம்பனென்றுகுறிக்க
நிஷ்டூரப்பாவிகண்டாய் நீலிகண்டாய்நீயும்
கணவனையும்வம்பனென்பாருண்டோடிவையகத்தில்
கரியமால்மைத்துனனு மொன்றுமறியாதே
சின்னமலர்க்குழலாளே மின்னொளியேகேளும்
செம்பொனதுமாளிகைக்குச் செயலாகவரச்சே
வலப்புறத்தில்கெவுளிநின்று சொல்லிற்றடிபெண்ணே
மனைக்குரியான்வாள்விசயன் வரப்போறான்பெண்ணே
கொங்கைரெண்டும்தான்தழுவக் கோர்வையிதழ்கோத
தங்கத்திருமார்புதனில் ஆபரணமழுந்தி
சரசமுடனுனையணைய வருவானடிபெண்ணே
குன்றுநிகர்ஸ்தனத்தாளென் குறிகளும்பொய்யாது
கொச்சியம்மையாணையென்று கூடையின்மேலடித்தாள்
ஏற்றமுள்ளவிசயனு ரிக்கோவில்வந்தால்
எனக்குநல்லகறிசோறு இடுவாயோடிபெண்ணே
என்றவளைத்தான்பார்த்து இணைவிழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநகைத்தாள்

மின்னொளியாளருச்சுனன் செய்தகுற்றத்தைக்
குறத்திசொல்லல் வேறு

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
கொன்றைக்குறத்தியரே கொம்பனையே நீகேளும்
நான்-வம்பனென்றுசொல்லுகளும்மிகவும்பெரிதாச்சோ

அவர்வீம்புகளுஞ்சேஷ்டைகளு மிங்கொருவர்கண்டிலே
நான்-நித்தஞ்சிவனை யெண்ணி நீதியுடன்பூசைசெய்வே
ஒற்றையொருநாளி லுன்பதஞ்சீர்மண்டபத்தில் [ன்
சிவனை நினைந்து நான் சிவபூசைசெய்கையிலே
அரனை நினைந்து நான் அரன்பூசையியற்றுகையிலே
கண்ணிரண்டுமூடியே கையிரண்டுமேந்திக்கொண்டு
சிந்தையில் நானினைந்து சிவனை நிலை நிறுத்தி [ன்
பூசைசெய்யும்வேளையிலே போர்விசயன்வந்துவிட்டா
அவ்வளவில்பார்த்தார் அவர்மூடுகியோடிவந்து
ஆகடியம்பண்ணுவதும் அரிவையரைக்கூடுவதும்
மிண்டானபேச்சு மிடும்பானவார்த்தைகளும்
என்-செண்டுஸ்தனத்தையவர் தீண்டிப்பிடிக்கிறதும்
வேளையிதுகூடுகைக்கு மின்னிடையேயென்பதுவும்
நாளைவருமோயிளமை நாயகியேயென்பதுவும்
கண்ணேவிழியாயோ கட்டழகியென்பதுவும்
ஒன்றாகப்புல்கி யுறவணைவோமென்பதுவும்
சக்கட்டம்பண்ணுறதும் சற்றேநகைக்கிறதும்
கைகொட்டியாடி நகைத்தாண்டிகாவலனும்
கோபித்துக்கண்சிவந்து கொற்றவனைப்பார்த்துவிட்டே
சீறியகோபமதாய் விஜயனைப்பார்த்துவிட்டேன் [ன்
அவர்-பல்லழகும்பாவனையும் பார்த்துமயங்கிவிட்டேன்
மீசைமுறுக்கழகும் விழியில்கறுப்பழகும்
கச்சுகட்டுவுள்மருங்கும் கத்திச்சுருக்கழகும்
வில்லழகுங்கண்டுநான் விழித்துக்கொடுத்தேண்டி
மெய்மயங்கிமாதேநான் விழித்துக்கொடுத்தேண்டி
சிவனைமறந்தேன் சிவபூசைநான்மறந்தேன்
அரனைமறந்தேன் அரன்பூஜைநான்மறந்தேன்
வாசிக்குமைந்தெழுத்தை மாதேமறந்துவிட்டேன்
செபிக்குஞ்செபமறந்தேன் சிந்தையிலேமெய்மறந்தேன்
பூசைத்தொழில்மறந்தேன் புட்பமெடுக்கயர்ந்தேன்
தேன்மொழிமாதேநான் சிவனைமறந்துவிட்டேன்
ஆனதால்வம்பனென்று அறைந்தேன்மிகவோசை
மின்னிடைக்குவேண்டாத வம்பனென்றுறுதிவைத்தே
அன்னமேகட்டுவச்சி ஆர்மேலேநோவமடி [ன்
என்னைப்போல்பெண்பிறந்தார் யிவ்வார்த்தைசொல்லடி
உனக்கும்புருஷனுண்டோ உத்தமியேசொல்லடிநீ [நீ

மின்னொளிக்குப் புத்திசொன்ன குறம்

தின - அன்னமெனுமின்னிடையே ஆரணங்கேநீகே
அறிந்தபடிசொல்கிறண்டி நெறிமுறைமையாக [ளாய்
வைத்தமலரெடுத்தாலும் அரனைத்தொழுதாலும்
மகிழவொருநோன்புதனை நோற்றாலுமாதே
நிட்டையோடிருந்தாலும் நீதிவானாலும்
நெறியானசிவபூசை நீர்பண்ணினாலும்
கணவனார்தானாக வலியவந்தழைத்தால்
கையமர்த்திநாளையென்ன கணக்குண்டோடிபெண்ணே
இன்னமிந்தவுலகிலுள்ளாரெல்லோர்க்குஞ்சொல்வேன்
ஏழையானாலுங்கணவ ரிருந்தானேயானால்
பின்னையொருதெய்வமென்ன உயர்த்திதானென்ன
பிதிர்கணங்கள்கோவில்கள் புகுவதுதானென்ன
எல்லாமுநீரேயென் றிரங்கியேதொழுதால்
ஏவல்பணிசெய்தவரே தேவரறியாரே
நல்லநாளுமேயென்பார் ஸ்ரீதேவியுமையும்
நன்மைமிகுத்தவளுமொரு பத்தினியுமாவாள்
சல்லாபசம்பத்து மைந்தர்களுமுண்டாம்
தையலரே நீருமிட்ட சாபங்களும்பலிக்கும்
பொல்லாங்குப்போக்கடிக்கும் இனிமேலுஞ்சொர்க்கம்
பூமியிலேயுண்டுகண்டாய் பொய்யல்லடிமாதே
விஸ்தாரம்பேசிடுவார் கணவனை நிந்திப்பார்
வெறியனுக்குமனையாட்டி யாகினேனென்பார்
சற்றேயசட்டனாய் வீட்டுக்குள்ளேயிருந்தால்
தங்களிட அதிர்ஷ்டமென் று தாமறியாரே
பத்தாவைநொந்தவர்கள் புற்றாகச்சமைவார்
பரமனிட தன்னருளால் மயிலவனாருளால்
சத்தியங்காணிவ்வார்த்தை யுனக்குமட்டுமல்ல [ல்வேன்
இத்தரணியில்வாழ்பெண்களுக்கு மனைவோர்க்குஞ்சொ
அன்னமெனுமின்னிடையே ஆரணங்கேகேளாய்
அறிந்தபடிசொல்லுகிறே னெறிமுறைமையாக
வர்னஸ்தனந்தான் குழையு மருவியுனையணைய
மன்னன்வரும்போதாச்சு மின்னிடையேகேளாய்
மகுடமுடிமன்னரிப்போ வருங்குறையைச்சொல்வேன்
விகடமொன்றும்வாராமல் விநாயகரைத்தொழுவேன்
பகடியொன்றுஞ்செய்யாதே பாவையர்களரசே

கபடில்லைமுறத்தில்முத்து கடுகவிரைத்திடுவாய்
முத்தாலேமிகப்பரப்பி குறியுரைப்பேன் பெண்ணே
வித்தான கணவனிப்போ விரைந்தோடிவருவான்
என்றவளைத்தான்பார்த்து இணைவிழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவள நகைத்தாள்

மின்னொளியாள் புருஷன்வரவுகேட்டது வேறு

விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுமேதுசொல்வாள்
எண்ணறவோதி யெழுத்தறப்படித்தாலும்
பெண்மதியாலேயல்லோ பிழைமோசமாகிறது
மன்னவருங்குறியைச் சொல்வாய்மலைக்குறத்தி
விசயன்வருங்குறியைச் சொல்வாய்நீமெல்லியரே[தாள்
கூடையிலேமுத்தளந்து கொண்டுவந்துமுன்னேவைத்

குறத்தி அருச்சுனன் வருகிறதாய்ச் சொன்ன குறம்

தின-கனகக்கும்பமுலையாளே கன்னியரேகேளாய்
கணவனிப்போவருங்குறியைக் கண்டுநான்சொல்ல
கருணைவள்ளித்தாயேநீ உண்மைசொல்லவேணும்
கந்தரேயெந்தனுக்கு முன்னடக்கவேணும்
முத்துகளைமிகப்பரப்பி இணைவிழியாலேமிரட்டி
மோகமுள்ளமின்னிடைக்குக் காமவிடாய்தீர
அர்ச்சுனனரிவளைவந்து அணைவதுமெய்யானல்
நச்சுமலைகொச்சியம்மை நடக்குங்குறிசொல்லு
குற்றமற்றயெந்தனுக்குச் சற்றேகுறிசொல்லு
குமரேசரருளாலே குறிநடத்தவேணும்
என்றவளைத்தான்பார்த்து இணைவிழியாலேமிரட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைதுவளநகைத்து

வேறு

வாராய்நீமின்னிடையே வார்த்தையொன்றுநீகேளும்
கூடையிலேமுத்தளந்து கொண்டுவாமின்னிடையே
நினைத்தகுறிவோடவில்லை நேரிழையேயெந்தனுக்கு
கண்டுகுறிசொல்விடுவேன் கடுகமுத்தெடுத்துவாராய்
என்றதுதான்கேட்டுயேதுசொல்வாள்மின்னிடையும்
முத்துமுத்தென்கிருய் நத்திவேகேட்கிருய்
மெத்தாசைப்படுகிருய் வீணியடிநீகுறத்தி
நச்சுநச்சென்கிருய் நாயகமேகட்டுவச்சி

என்று-முறத்தாலேமுத்தளந்துமுன்னுலே வைத்தார்கள்
சதிராய்மிகமெழுகி சாணிபிள்ளையாரும்வைத்து
அறுகு ஷ்பஞ்சூட்டி அட்சதைகாப்புமிட்டு
தூபதீபந்தான்கொடுத்துத் தொழுதாள்குறத்தியவள்

குறம்

தின-குறத்திமுத்தைமிகப்பரப்பி குறியினுவேயென்பாள்
கோலவிழியால்மயக்கி மிகநோக்கிநகைப்பாள்
ஐங்கரனேமுக்கணனே ஆனைமுகத்தோனே
அருச்சுனனுரிக்கோயில் வருவாரோசொல்லும்
சங்கரனுர்புத்திரனே சரவணபவனே
தார்விசயனிக்கோயில் வருவாரோசொல்லும்
மனையிடத்துதேவதைகள் மகிழமஞ்சளழகி
மடிச்சீலைக்காரிமுதல் வந்துநிற்கவேணும்
பொங்கள்மிகநயினுரும் பொற்கொடியேதெய்வம்
பூவாடைக்காரிமுதல் வந்துநிற்கவேணும்
மண்ணுப்பிடாரிநீ மழுவேந்துங்குறத்தி
வடவாசல்செல்லியம்மை வந்தருளவேணும்
ஆகாயதேவதைகளையன்பிடாரி
அலைகடல்கன்னிமுதல் வந்தருளவேணும்
ஏழுகடற்கன்னிமுதல் இளையதஞ்சிமாரும்
இன்பமுள்ளகுறியெனக்குத் தந்தருளவேணும்
மலையாளக்கொச்சியம்மை யுந்தனருள்வேண்டும்
வாள்விசயனிக்கோயில் வருவாரோசொல்லும்
தெய்வங்களை நினைத்தாலே சிலிர்த்துக்கொள்ளுதுடம்பு
தேகமெல்லாமயிர்கூச்ச விடுகிறதேபெண்ணே
வாடைமணம்வீசுதடி மயிலவர்வந்தாற்போல்
மயக்குதடியென்னுடம்பை சன்னதங்கொண்டாற்போல்
கூடைகொண்டுகவியுதடி கோமளமேபெண்ணே
கோலவிழிதுடிக்குதடி குறிகளிப்போகேளாய்
மங்கையரேபல்லியிப்போ சொன்னதினுலே
வரவேணும்பார்த்தனிப்போ வள்ளியம்மையருளால்
இன்னமரைநாழிகையில் அர்ச்சுனமகாராசன்
வண்ணமுடனிக்கோயில் வரப்போருன்பெண்ணே
கொச்சைக்குறத்தியிட குறிகளும்பொய்யாது
கொச்சியம்மையாணையென்று கூடையின்மேலடித்தாள்

வேறு

விளங்கியசீர்மாதவத்துமின்னிடையாளே துசொல்வாள்
விஜயரிதோவீதிவந்தா ரென்றீரேமெல்லியரே
விஜயர்வந்த'ிற்பாடு மெல்லியரேபோய்விடுவேன்
வாருமென்று சொல்லி வருணவனைக்கைப்பிடித்து
அந்தப்புரத்திலே ஆரணங்குபோய் நுழைந்தாள்
உள்வாசல்வந்தமர்ந்தார் பேடை மலர்க்கண்ணாளும்
வண்ணக்குறத்தியவள் வாய்திறந்தங்கேது சொல்வாள்
இக்கோலமாயிருந்தால் இங்கேவாரான்பார்த்தனவன்
மைக்கோலமாகிநீர் மஞ்சனமாடுமென்றாள்
மஞ்சனமாடாதே மங்கையரே நீயிருந்தால்
சென்மத்திலும்வாராண்டி தேர்விஜயனிக்கோயில்

மின்னொளிக்கு குறத்தி ஸ்நானஞ்செய்து வைத்தது

எண்ணைகொண்டுவாருமென்றா ளேந்திழையாள்கட்டுவ
அருகிருந்ததாதியவள் திடுக்கெனவேதானெழுந்து[ச்சி
பூவெழுதிசித்திரித்துப் பொன்மடலைத்தானெடுத்து
பூவரசமெண்ணைதனைப்பொற்கொடிமார்கொண்டுவந்தார்
வண்ணக்குறத்தியவள் மலைக்குறத்திதானெழுந்து
மின்னிடைக்குப்பின்னாலே மெல்லியரும்வந்துநின்றாள்
பன்னிரண்டாண்டுமுன்னே பின்னிவிட்டகேசத்தை
மாணிக்கச்சரடவிழ்த்து மயிரைவிரித்துவிட்டாள்
நீக்கிவகிர்ந்தாளே நெறிமுறையின்படியே
பூவரசயெண்ணையைப் பூங்கிளியாள் தான்வார்த்து
ஏற்றம்பெரிதுடைய எலுமிச்சஞ்சார்வார்த்து
ஆறாய்வகிர்ந்தாளே ஆர்க்கத்தலைசீவி
குங்குமவார்குழலைக் கீரிக்கொண்டைபோட்டாளாம்
சீரிமயிர்முடித்துக் கீல்கொண்டைபோட்டாளாம்
எண்ணையிடும்போதையிலே இளவிசயனருச்சுனனார்
தாதிகளறியவென்று தன்னொளிவைக்காட்டினார்
பல்லொளிவைக்காட்டினார் பார்த்தார்கள் தாதியர்கள்
மின்னொளியைப்போலவே பல்லொளியைக்கண்டார்கள்
பாசவீணைபார்த்தலவோ பயந்தார்கள் தோழியர்கள்
காணக்குறத்தியல்ல காண்டீபாருச்சுனர்காண்
குறத்தியென்றுநாமிருந்தோம் கோதண்டபாணியவர்
வண்ணக்குறத்தியைப்போல் வடிவுகொண்டுவந்தாரே

வெறுமையாய்த்தானிருந்தால் தண்டனைகள்நேருமென்
அத்தண்டதாதியர்க ளனைவோரும்யோசனையாய் [று
அவரவர்தம்பணிக்கு அனைவோரும்போய்நடந்தார்
சிறிதுபேர்தாதியர்கள் சீக்கிரமாய்த்தான்நடந்து

தாதிகள் அவாளவாள் வேலையை ஜாக்கிரதையாய்ச் செய்தது

கோலமடப்பள்ளியைக் குச்சிட்டுத்தாள்திறந்து
எங்குமலங்கரித்துச் சந்தனநீர்தெளித்து
சாந்தால்தரைமெழுகிச் சந்தனத்தால்கோலமிட்டு
குங்குமத்தாலே குளிரச்சுவர்பூசி
அடுப்புமெழுகுவார் அட்சதைகாப்பிடுவார்
பானைகழுவிப் பனிநீருலைசாய்ப்பார்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
போதச்சமைத்தார்கள் பொற்கொடிமார்தாதியர்கள்
மற்றுஞ்சிலதாதி மங்கையர்களோடிவந்து
வெள்ளிக்கிடாரத்தில் வேண்டியநீர்வார்த்து
மஞ்சனச்சாலையமைத்து வைத்தார்கள்தாதியர்கள்
மற்றுஞ்சிலதாதி மடவாரெழுந்திருந்து [ள்
செம்பொன்னின்தட்டிலே அரைப்பரைத்துவைத்தார்க
சீக்காயும்நெல்லி சிறுபருப்புகஸ்தூரி
பச்சிலைமஞ்சள் பசுமஞ்சளரைத்துவைத்தார்
மற்றுஞ்சிலதாதி மடவாரெழுந்திருந்து
பள்ளியறையின் படுக்கைவீடுதான்திறந்து [யை
பன்னிராண்டாண்டுமுன்னே போட்டதொருபஞ்சணை
தட்டிவுதரியே தாளிணையில்தும்படித்து
எங்குமலங்கரித்துச் சந்தனநீர்தெளித்து
கண்மூன்றுடைய கனவயிரக்கட்டிலிட்டு
மெத்தைபிரித்திட்டு மேலேயணைகோலி
காப்பரிந்தஜங்கலப்பூ கட்டிலின்மேல்சொரிந்து
கால்கோட்டைகைகோட்டை யிட்டந்தகன்னியரும்
தங்கத்தலைகாணி சகலாத்துத்தழுவணையும்
சாரத்தலைகாணித் தழுவணையும்போட்டார்கள்
கண்ணடிசல்லிகட்டி கவரிமான்குச்சுவிட்டு
மல்லிகைமுல்லைகளை வகைவகையாய்த்தூக்கேற்றி
பஞ்சவர்ணக்கிளியைப் பலதிசையும்கட்டினார்கள்

அத்தர்புனுகுகளும் அள்ளித்தெளித்தார்கள்
கதம்பகஸ்தூரியும் கரைத்துத்தெளித்தார்கள்
சாம்பிராணிபுகைபோட்டார் சந்தனப்புகைகொடுத்தார்
கற்பூரங்குங்கிலியம் கலந்துபுகைபோட்டார்கள்
பஞ்சணையைச்சோடித்தார் பாங்கியர்களானவர்கள்
மற்றுஞ்சிலதாதியர் மங்கையர்களோடிவந்தார்
மஞ்சனச்சாலை சமைந்ததென்றுதெண்டனிட்டார்
அப்பொழுதுகுறத்தியவள் அலங்காரமாயெழுந்து
மஞ்சனச்சாலைக்கு வாருமென்றாள் மின்னிழையை
ஸ்நானங்களாட்டிவைக்க சற்றேயெழுந்திரென்றாள்
விளங்கியசீர்மாதவத்து மின்னிடையுங்கூறுவாள்
குறத்தியுடைகையாலே குளித்துமுழுகுவேனோ
பாண்டநதொடலாமோ பங்கயஞ்சீர்கண்ணனே
கண்டார்நகையாரோ கலியுகத்தாரேசாரோ
சற்றேயிருகுறத்தி ஸ்நானஞ்செய்துவாரேனென்றாள்
வண்ணக்குறத்தி மலைக்குறத்தியேதுசொல்வாள்
அல்லியிற்பிறந்தாட்கும் அனலிற்பிறந்தாட்கும்
இருவருக்குங்கைபார்த்துஸ்நானங்களாட்டிவைத்தேன்
தாதிமார்தோழியார் தையல்யாரில்லாமல்
தனியாகநானிருந்து ஸ்நானஞ்செய்துவைத்தேனே
அவர்களைப்பார்க்கிலும் ஆரணங்குநீபெரிதோ
விசயன்வருகிறதை மெல்லியரேபார்க்கிறேன்
ஆளன்வருகிறதை அறிகிறேண்டி மின்னிடையே
டையெடுத்தவளும் யெழுந்தாளேகொப்பனையாள்
வாடிகுறத்திநீ மாதுசலியாதே
னதுக்கிசைந்தபடி செய்வாய்நீவாடியென்று
ஞ்சனச்சாலையிலே வந்தாரிருவருமாய்
அத்தண்டதாதியரும் அப்புறத்திற்போனார்கள்
அடியார்கள்போனபின்பு அக்குறத்திமாதருமே
ஞ்சனச்சாலை மணிக்கதவைத்தாள்போட்டாள்
ட்டாடைவாங்கியே பலபணியுந்தான்கழட்டி
சிற்றாடைவாங்கியே சிறுமறையுந்தான்கழட்டி
நாறகாலின்மேலாக நாயகியைத்தானிருத்தி
சீக்காயும்நெல்லி சிறுபயறுந்தானெடுத்து
ஆனந்தமாரிக்கு அரப்பிட்டுநீராட்டி
பச்சிலைமஞ்சள் பசுமஞ்சள்தானெடுத்து

வஞ்சிமுகத்திலேயும் மாதுஸ்தனத்திலேயும்
கொம்பனையாள்முகத்திலேயுங் குங்குமமாரிலேயும்
மேல்விழுந்துமேல்விழுந்து மெல்லியர்க்குப்பூசினள்
மார்பேலேதான்விழுந்து மயிலணைக்குப்பூசுவாள்
அப்போதுமின்னிடையு மாரணங்குமேதுசொல்வாள்
ஏதடிகுறத்தி நீ யென்மேல்விழுகிருய்
மயங்குதலையாவானேன் மாதேவிழுவானேன்
அல்லகாண பெண்ணே யாரணங்கே நீ கேளாய் [தேன்
அல்லியவள்கொலுவில் ஆண்டொளிவைப்பார்த்திருந்
நேற்றிரவு நித்திரை இல்லாததன்மையினல்
கண்ணையுறக்குதுகாண் கட்டழகியெந்தனுக்கு
நித்திரைவருகுதடி நிலைவைக்குலைக்குதென்ருள்
ஸ்நானங்களாட்டிவைத்தாள் தாமக்கருங்குழலை
நீர்காட்டியூதியே திலங்கிள்ளிக்காப்புமிட்டு
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
ஈரமுலர்த்தி இழைசேர்ந்தபட்டுடுத்தி
அரண்மனைக்குள்ளாக அழைத்துவந்தாளாரணங்கு
வட்டமணைமேலே மாதரைத்தானிருத்தி

குறத்தி மின்னொளியாளுக்கு ஆபரணமணிந்தது
சம்பங்கியெண்ணெய்கொண்டு தடவிச்சிணுக்கறுத்து
வாரிமுடித்து மாணிக்கக்கொண்டையிட்டாள்
சீவிமுடித்துச் சிமிள்போலேகொண்டையிட்டாள்
ஒவ்வொருமயிருக்கு ஒவ்வொருபூவிதழும்
பொன்னிதழும்பூவிதழும் பூட்டியலங்கரித்து
கொண்டைக்குத்தண்டைகளும் கொண்டைதாங்கிமாலை
ஆருயிரம்பொன்பெற்ற வான்சவுரியுட்சொருகி [களும்
ஆண்மயிலும்பெண்மயிலும் அட்டத்தேகோர்த்தாளாம்
பலலியுமாழ்வாரும் பக்கத்தேகோர்த்தாளாம்
சந்திரபிறைசூரியபிறை தரித்தாளேநெற்றியிலே
நெற்றியிற்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
கரிக்குருமான்வாலதுபோல் கண்களுக்குமையெழுதி
நடுநெற்றியில்நாமமிட்டு நற்சாந்துபொட்டுமிட்டு
ஒட்டுக்கடுக்கனும் இணைசேர்ந்தநாகவடம்
பல்லீரும்மெல்லீரும் பச்சைபுகடிகளும்
அன்னகொப்புபின்னைவாளி அழகுமிகுஞ்சவுளி
பச்சைக்கல்முருகும் பதித்திருந்தவாளிகளும்

ஒற்றைச்சரடுகளும் ஒருபுறமும்பொற்சரிகை
இரட்டைச்சரடுகளும் இருபுறமும்பொற்சரிகை
முத்துச்சரப்பளியும் மோகனமாலைகளும்
வட்டச்சரப்பளியாம் மார்நிறைந்தகாழ்வடமாம்
சந்திரகாசசரப்பளியாம் தாயித்தைபூஷணமாம்
உத்திரசஞ்சமது உத்தமிக்குப்போடலுற்றாள்
தோள்வங்கிகைவங்கித் தேன்மொழிக்குச்சாற்றலுற்றாள்
கடகஞ்சரிபவழம் கைநிறைந்தமோதிரங்கள்
மூக்குத்திசிந்தாக்கு முன்கைமுகதாரி
ஐந்துவிரலுக்கும் அழகானமோதிரமும்
பத்துவிரலுக்கும் பந்தகணையாழி
அரைக்கிசைந்தஒட்டியாணம் அழகுபெறச்சாற்றினாள்
தண்டைகொலுசுஞ் சதங்கையும்பாடகமும்
காலாழிகல்லணையும் பீலாழிபில்லணையும்
தேர்ப்பீலிமீன்பீலி தரித்தாளாந்தேன்மொழிக்கு
அஷ்டாபரணம் அலங்காரஞ்செய்தாளே
சரிகைப்புடவையைத் தரித்தாளேமங்கையற்கு
முத்தாவிக்கை முருகுழல்மார் தரித்தார்கள்
கண்ணாடிகொண்டுவாடி கட்டழகிதாதியென்றாள்
கண்ணாடிகொண்டுவந்து கட்டழகிக்கொடுத்தாள்
கண்ணாடிதானெடுத்து கட்டழகிகாட்டவந்தாள்
மின்னொளியாள்தானெழுந்து வெம்பிமிகத்ததும்பி
அன்றுமுதலிவ்வரையி லாரணங்குபார்த்ததில்லை
காண்டீபனும்நானுமாய் கண்ணாடிபார்த்ததில்லை
அவ்வசனங்கேட்டு அருங்குறத்தியேதுசொல்வாள்
மன்னவனுருன்புருடன் வருகிறார்காண்மாளிகைக்குள்
சுபத்திரையாள்வீடுவிட்டு வாராண்டிமின்னொளியே
நாககன்னிவீடுவிட்டு வாராண்டிமின்னொளியே
போகவதிவீடுவிட்டு வாராண்டிமின்னொளியே
துரோபதையாள்வீடுவிட்டு வாராண்டிமின்னொளியே
அல்லியிடவீடுவிட்டு வாராண்டிமின்னொளியே
பவளக்கொடிமாது பத்தினியாள்வீதிவிட்டு
வாராண்டிமின்னொளியே மன்னனரைநாழிகையில்
அரனாரைப்பூசைபண்ணி அமுதுபுசித்தீரானால்
கால்நாழிகைக்குள்ளே காளையருந்தான்வருவான்
உன்மேலாணையாக வருவான்காண்மின்னொளியே

என்றுசொல்லிமின்னிடையும் எழுந்தங்கேயேதுசொல்
அத்தனைபோற்றியென் றணைந்துமேதானிருந்து[வாள்
அந்தமுறைசெய்யவல்ல அந்தணர்களோடிவந்து

மின்னொளி பூசை செய்கிறது

செம்பொன்குடத்தில் திருமஞ்சனங்கொண்டுவந்தார்
சேமமதுதிறந்து சிவனுரைப்பூசைபண்ணி
எண்ணெய்யபிஷேகம் ஏந்திழையாள்தான்செய்து
பாலாலபிஷேகம் பத்தினியாள்தான்செய்து
பொன்னுல்மலரெடுத்துப் பித்தரைப்பூசைபண்ணி
சந்தனவாசனையைச் சாத்தினுள் தையலரும்
தட்டிலேபோசனமுந் தாளியிலேபால்பழமும்
அரனுர்சிவபூசை யாரணங்குதான்முடித்தாள்
அறிவுடையநாயகற்கு ஆகாரந்தான்கொடுத்து
சிவனுரைப்பூசைபண்ணி செபத்தினையுள்ளடக்கி
அரனுரமர்ந்தபெட்டி ஆரணங்குதான்பூட்டி
சுத்தமுடன்மின்னொளியுஞ் செவியிலேபூச்சொருகி
மின்னொளியுங் குறத்தியும் போசனமுண்ணுதல்
அமுதுண்ணுமண்டபத்தில் ஆரணங்குதான்சேர்ந்தாள்
போசனங்கொண்டுவா பொற்கொடியேயுண்ணவென்று
தாதிமாரோடியே தளிகையதுகொண்டுவந்தார் [ள்
தையல்குறத்தியர்க்குத் தலைவாழையிலைபோட்டார்
மின்னொளியாள்முன்னுலே மூக்காலியிட்டார்கள்
பொற்கலத்தைமுன்னேவைத்து போசனம்பாலித்தார்
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
நல்லபொறிக்கறிகள் இராசாக்கள்போசனமும்
பொரித்தபொறிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
பச்சென்றகீரையும் பவழம்போல்நற்கறியும்
அவியல்தொவையல்களும் அழகானபச்சடியும்
துவல்குழம்புகளும் சீராய்ப்படைத்தார்கள்
புத்துருக்குநெய்வார்த்துப் போசனமுண்ணுமென்றார்
மாதுகுறத்தியவள் மலைக்குறத்தியேதுசொல்வாள்
கூடவுமுண்ணுகைக்குப் பொருந்தாதேகொம்பனையே
ஒக்கவேயுண்பதற்குப் பொருந்தாதோவுத்தமியே
விளங்கியசீர்மாதவத்துமின்னிடையாளேதுசொல்வாள்
குறமாதுடனுகக் கூடவேவுண்பாரோ [லாம்
ஏசாரோயென்னையிந்த இனத்திலுள்ளபெண்களெல்

சோரவள நங்கையவ சுபத்திரையாள்கேட்டாக்கால்
தூற்றியேகாற்றில்வைத்துச் சொல்வார்பலருடனே
என்னொத்தகுலமெல்லாம் இழிகுலத்தில் தள்ளிடுவார்
சற்றுமதியார்கள் தரணியிலுள்ளவர்கள்
என்னுணைகட்டுவச்சி யென்பேரில்தயவுவைத்து
உனக்குவைத்தபோசனத்தை உண்ணடிமாதேயென்றாள்
பார்த்தனெனுங்கட்டுவச்சி பைங்கொடியாளேதுசொல்
வாள், அல்லியற்கும் துரோபதைக்கு மன்பாய்குறியுரைத்
இன்பக்குறியுரைத்து இருவருடனுண்ணலையோ [து
அவர்களைப்பார்க்கிலும் அதிகமோயுன்ஜாதி
விசயன்வருகிறதை மெல்லியரேபார்ப்போமடி
அர்ச்சுனன்வருகிறதை அறிவோமடிமின்னொளியே
நீவாழ்கிறதைப்பார்ப்போமடிமாதுகன்னிமின்னிடையே
கூடவுண்டாலல்லாது கொம்பனையேநான்போறேன்
என்றுகூடையெடுத்துமவள் கொம்பனையாள்தானெழுந்
தாள், விளங்கியசீர்மாதவத்து மின்னிடையாளேதுசொ
உன்னை வெறுக்கக் கணக்கில்லைவுத்தமியே [ல்வாள்
பார்த்தனருச்சுனனார் பண்ணிவைத்ததோஷமிது
கொண்டவற்கெளிதானல் கண்டவற்கெளிதாகும்
எவரைநான்நோவேனடி என்றலைவிதிப்படிகாண
பார்த்தனெனைத்தள்ளிவைத்த படியல்லோகுறத்தியரே
உனக்குமெளிதாச்சோ வுகமுடியுங்காலமாமோ

மின்னொளியும் குறத்தியும் ஒருகலத்திலுண்டது

கூடவேயுண்பதற்குக் கொம்பனையேவாருமென்றாள்
தலையிலெழுத்தையடி தள்ளிவைக்கக்கூடாது
ஒக்கவேவுண்டிடுவோம் உத்தமியேவாருமென்றாள்
அப்போதுகுறத்தியவ ளதிகப்பிரியமுடன்
சந்தோஷமாகவந்தாள் தாமக்குழலாளும் [தார்
அமுதுண்ணுமண்டபத்தில் இருவருமாய்ப்போய்பு நந்
ஒருகலத்திலபோசனங்க ளுணடாரிருவருமாய்
கூட்டிப்பிசைந்து குறத்தியருமூட்டினள்
பாதியடிசில் பகிர்ந்துண்டாள்கட்டுவச்சி
போசனமுண்டு பொடியிட்டுக்கைதிமிறி
காலோடுகையும் கனிவாயுஞ்சுத்திசெய்து
வைத்தமெருவடியைத் தொட்டுநடந்தசைந்து

வட்டமணைமேலே வந்தமர்ந்தாரிருவருமாய்
அடைக்காயும்வெற்றிலையும் அருந்தாதிமுன்னே வைத்
வாசமிலையெடுத்து மலைக்குறத்தியற்களித்தாள் [தாள்
கட்டுவச்சிவாங்கி கண்ணொடே தானணைந்தாள்
கம்மாறுவெற்றிலையும் களிப்புள்ள துவர்பாக்கும்
இந்தாருமென்று இளங்குறத்திதான்கொடுத்தாள்
மன்னனருச்சுனனார் வாள்விசயனென்கணவர்
வந்தாலொழிய மலைக்குறத்திநாயகமே
அருகேயிருந்து அடைக்காய்கள் தின்னுவது
கட்டுவச்சிநாயகமே அடைக்காய்கள் நான்வேண்டேன்
பார்த்திபரில்லாமல் பரிமளங்கள் நான்தீண்டேன்
என்னுணைகட்டுவச்சி யெந்தனுக்குவேண்டாமென்ருள்
என்றுமவள்சொல்ல யிவளுரைப்பாள்கட்டுவச்சி
மன்னரிதோவாரார் வாழ்வுனக்குண்டாச்சு
அறுமுகவர்தன்னுணை அம்மைவள்ளிதன்னுணை
அர்ச்சுனனாருன்கணவன் அரைநொடியில்வாரான்காண்
அனந்தல்படுக்கைக்கு ஆரணங்குநீர்போவீர்
பள்ளியறைக்குப் பைங்கிளியேபோமென்ருர்
மின்னொளியுங்கட்டுவச்சி மிகவெழுந்துகைபிடித்து
பள்ளிவறைவாசற் படிக்கதவைத்தாள்திறந்து
ஒத்தமஞ்சபஞ்சணை ஒளிவழகைத்தான்பார்த்து
சுற்றியெங்குந்தான்பார்த்து துன்னிலம்பூங்கண்ணுலே
பார்த்தாள்குறத்தியரும் பங்கயஞ்சீர்கண்ணுலே
மின்னொளியேபெண்மயிலே விசயனார்வருவாரோ
பார்த்தர்வருவாரோ பஞ்சணைசோடிப்பில
பின்னையுமுண்டோடி பக்குவங்கள்மின்னொளியே
பள்ளியறையுந்தனுக்குப் பார்க்கச்சமைந்ததோடி !
தச்சன்சமைத்தானே தானேசமைத்ததோ
எப்போதுமுண்டோடி யின்றுபுதிதோதான்
சிறையிலிருந்தேனென்று தேன்மொழியேசொன்னீரே
அடைக்காயருந்தேனென்ருய் ஆபரணம்பூணேனென்
மைபொட்டிடுவதில்லை மஞ்சள்குளிப்பதில்லை [ருய்
அன்னமருந்தவில்லை ஆனபட்டுச்சாத்தவில்லை
பாரச்சிறையில்வைத்தார் பார்த்தனென்றுசொன்னீரே
சூதுகளுமுண்டோடி சோழன்மகளாரே
மெய்யென்றிருந்தேனே மின்னொளிநாயகமே

ஆரணங்கேமின்னொளியே அறியவுரையுமென்றார்
இவ்வார்த்தைதான்கேட்டே துரைப்பாள்மின்னொளியும்
கானக்குறத்தியரே கட்டுவச்சிநாயகமே
ஆருமொருவரில்லை ஆள்வரவுந்தானுமில்லை
சுந்தரப்பூந்தாதிமார் சொற்பேச்சுங்கேளார்கள்
என்பேச்சுங்கேளார்க ளீடழிக்குந்தாதியர்கள்
தங்களிடபேச்சினால் தான்செய்வார்தாதியர்கள்
இருந்தசிறைகாணுமல் இவர்கள்செய்தகாரியங்கள்
பொன்னைதாதியிட்ட புதுமைகாண் இத்தனையும்
என்செய்வேனென்று எரிபரந்துகண்சிவந்து
கட்டுவடத்தின் கயிறுருவிவிட்டாற்போல்
திரேகமொடுங்கி யிருவிழியிலமுத்துதிர்த்தாள்
முத்துப்போற்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டாள்
சோழன்மகளாருஞ் சோர்ந்துமனந்தளர்ந்து
ஆருதகோபம் அனலாகநிற்கையிலே
தாமக்கருங்குழலாள் தாதியவள்கூறுவாள்
வந்தார்விசயனென்று மலைக்குறத்திசொன்னாளே
மணவாளனிப்போ வருவாரென்றுசொன்னாளே
மெய்யென்றுநம்பியே மின்னொளியேஆச்சியரே
சோடித்தலங்கரித்தோம் சுந்தரியேபஞ்சணைகள்
எங்கள்மேற்கோபமுண்டு இந்தப்பிழைகாருமென்று
தாதியர்களெல்லோருந் தான்றொழுதுதெண்டனிட்டார்
இவ்வார்த்தைதான்கேட்டு யேதுரைப்பாள்கட்டுவச்சி

அர்ச்சுனன் அரைநாழியில் வருவானென்று
சொன்ன குறம்

தின-வாடியடிமின்னொளியே வாழ்விசயன்றேவி
உன்-மணவாளனரைநொடியில் வருவாண்டிபெண்ணே
கணவனிதோவுன்மனைக்குக் கால்நடையாய்வருவான்
கைபார்த்தேனுந்தனுக்குக் கண்டுகுறிசொன்னேன்
அஞ்சாதேமின்னொளியே அணைந்துவிளையாடி
அழகானகதிரவன்போல் பெண்பெறுவாய்பெண்ணே
சிந்தனைகள்தேவையில்லை சிறையுமீண்டுபோச்சு
சோழன்திருமகளேயென்று செங்கரத்தைப்பிடித்தாள்

வேறு

கானக்குறத்தியவள் கட்டுவச்சிகூறுவாள்
சொற்பொறுக்கப்போகாதோ சோழன்திருமகளே

வாழ்விசயன்றேவியென்று வாழாதிருந்தாலும்
ஆண்காற்றுமயங்கிவா அஞ்சுமடிமின்னொளியே
கலியாணமுண்டல்லோ கன்னியரேயுந்தனுக்கு
கண்ணீர்பெருகிறதைக் கணவனுர்கண்டாக்கால்
வாரான்மணவாளன் மதிமுகமுந்தான்பாரான்
வாடிமயிலேயென்று மலைக்குறத்திகைப்பிடித்து
கொங்கைகளின்மேலே குறத்தியவள்முத்தமிட்டாள்
கானக்குறத்தியரே கட்டுவச்சிநாயகமே
அறியாதபாலகரை யணைக்குமடிமேலே
என்னைமையலாக்கி யென்னுடம்பைபுண்ணாக்கி
மாயமலைக்குறத்தி வந்துகுறியுரைத்தாய் [தாய்
உன்னெச்சிற்கலந்தலவோ யெனக்கமுதவூட்டிவைத்
கூடவுமுண்டாயோ கோடைறையில்வந்தாயே
மன்னவனுரென்கணவர் வருவாருமென்றாயே
பொய்யாச்சேயுன் குறிகள் பூங்குறத்திநாயகமே
கானக்குறத்தியவள் கட்டுவச்சிதானெழுந்து
மின்னொளியைப்பார்த்து மெல்லியருங்கூறுவாள்

குறம்

வட்டமதிமுகத்தாளே மின்னொளியேகேளும்
வடிவுடையவுன்புருஷன் வந்தாண்டிவாசல்
கூர்நகங்கள்வைத்துருக கொங்கைதனைப்பிடித்து
கோவையிதழ்மின்னொளியே கோதியணைவாண்டி
குறத்திநானருகிருந்தால் கோபம்வரும்பெண்ணே
குறநாற்றமருச்சுனற்கு குமட்டியடியாதோ
இங்கேயிருநானவனை அழைத்தோடிவருவேன்
என்றுசொல்லிகுறத்தியவ ளேகிநடந்தாளே
பெண்வடிவுதனைமறைத்துப் பணிதிகளைவாங்க
பொற்கூடைதனில்வைத்துப் போர்விசயன்தானும்
அனலுதித்தாளண்டையிலே போயமருமென்று
ஆகாயப்போகவென்றே அந்தரத்தேதட்ட
ஆகாயமாய்ப்பறந்தது அந்தக்குறக்கூடை
அனலுதித்தாளண்டையிலே அமர்ந்ததுபொற்கூடை
மெள்ளமெள்ள அடிவைத்துமின்னொளிக்குப்பின்னேவந்
சுற்றிருக்குந்தாதியரை அர்ச்சுனனுர்கையமர்த்தி [து

குறவேடம்நீங்கி அருச்சுனன் தன்சுயரூபத்துடன்
வந்து மின்னொளியாள் கண்ணை மூடினது

அருகிருக்குந்தாதியரை சொல்லாமற்கையமர்த்தி
மின்னொளியாள் கண்மலரை விசயனவர்மூடினார்
கண்மலரைமூடவே கன்னியவளே துசொல்வாள்
காணக்குறமகளோ கட்டுவச்சிநாயகமே
என்-பத்தாவருச்சுனரோ பாங்கியரேசொல்லுமென்று
ஆரெனைக்கண்மறைத்தார் அச்சங்களில்லாமல் [ள்
தாதியவள்தான்பார்த்து தையலவளேதுசொல்வாள்
விசயனார்தேவியரே மின்னொளிநாயகமே
ஆரென்று நீரும் அடையாளஞ்சொல்லுமென்றார்
என்று-தாதியவளுரைக்கத் தானுரைப்பாள்மின்னொளி
கண்ணைமறைத்துக் கரத்தையவன்பிடித்து [யாள்
முந்நூற்றுக்காதவழி முழக்கமுள்ளபந்தலிலே
நானூற்றுக்காதவழி நலமுள்ளபந்தலிலே
முத்திழைத்தபந்தலிலே முடுகிவந்துமாலையிட்டு
சுண்டுவிரல்பிடித்த சுந்தரனென்றுரைத்தான்
காண்டாவனமெரித்த கட்டழகாகைவிடுங்காண்
மன்னர்மயங்கி மலர்விழியில்கைவாங்கி
கானக்குறத்தியராய்க் கைபார்த்தகட்டுவச்சி
அந்தக்குறத்தி யழகைநான்பார்க்கவேணும்
வேடக்குறத்தியரை மின்னொளியேநீயழையும்
விசயனவரச்சொல்ல மின்னொளியுந்தான்பார்த்து
பார்த்தாளேமின்னொளியும் பார்த்தன்வடிவழகை
கண்ணிலிட்டமையும் காமனொளிபொட்டழகும் [பாள்
பார்த்தவள்மின்னொளியாள் பைங்கொடியாளேதுரைப்
விசயரேஉம்முடைய வேஷங்களைநதீரோ
பூட்டியவாபரணம் புதைத்துவைத்துவந்தீரோ
கொண்டையின்மேல்தொங்கலும் கோலகிரிபட்டுடையும்
முத்தைப்போற்பல்லொளியும் முருக்கிதழ்போல்செவ்வா
ஒட்டியசந்தனமும் உருவியகண்மலரும் [யும்
சந்தனப்பொட்டழகும் சதிரானநெற்றியும்
உரியுங்கனிப்பழமும் ஊர்வசிநாடகமும்
கொச்சைக்குறக்கூடை குறப்பகளின்தன்னழகும்
உம்மிட-மாயஸ்தனபாரம் மறைத்துவைத்துவந்தீரோ
மைபோட்டுதான்கலக்க மதிகெட்டுப்போனீரோ

நீரேயெழுந்திருந்து நீங்கியிவ்வடிவாகி
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
கோலமறைத்தீர் குறமுரைத்தீர்கொற்றவரே
இக்கோலங்கொண்டென்னை யீடழிக்கவந்தீரே
இத்தனைகால மிருந்தேன்சிறையாக
மைத்துனன்மார்முன்னே தான் வாழாமல்வைத்தீரே
என்-சக்களத்திமுன்னே சதிபிழைசெய்தீரோ
இப்போ-வந்திங்கேபோக மனதாச்சோமன்னவரே
உம்முடையதேவிமார் உரைக்கவும்வந்தீரோ
நீரேதான்வந்தீரோ நிலவரத்தைச்சொல்லுமென்றாள்
மின்னொளியாள்தான்கேட்க விசயனவனேதுசொல்வா
மெய்யாகச்சொல்லுகிறேன் மெல்லியரேநீர்கேளும் [ன்
மாயனிடதங்கையரை மனதில்நினையாதே
நாகமடந்தை நறுநுதலைச்சொல்லாதே
ஆணழக னருச்சுனனார்தானுரைத்து
வாருமென்றுசொல்லி மணிக்கடகங்கைபிடித்தான்
செம்பொன்கதவடைத்துச் சிக்கெனவேதாள்போட்டு
தேவியருந்தானுமாய்ச் சேர்ந்துதிருவணையில்
வெற்றிலை தின்று விரும்பிவிளையாடி
ஒருவர்க்கொருவ ருகந்துவிளையாடி
பலகாலு மிவருடனே பழகியிருந்தாற்போல்
தழுவாதுபோலே தழுவிவிளையாடி
மாலைமுடியாள் மடிமேலேகொண்டிருந்தான்
சந்தோஷமாகவே தனஞ்செயனுமின்னொளியும்
செங்கோற்செலுத்திச் சீரரசையாண்டிருந்தார்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்தன்கதையை
எழுதிப்படித்தவர்க ளிந்திரனைப்போல்வாழ்வார்
காளைகுறங்கற்றோர்கள் காசினியில்வாழ்ந்திடுவார்
கன்னியர்கள்கேட்டால் கடுகமணம்பெறுவார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்ற முசியாமல்வாழ்ந்திருப்பார்
இக்கதையைக்கேட்டவர்கள் ஈன்றிடுவார்புத்திரனை
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

மின்னொளியாள் குறம் முற்றிற்று.

மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை:—1952.

சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு, கொழும்பு.

மலர்மகள் வெளியீடு

மாட்டுவாகடம்

உலகத்தில் மனிதர்கள் சுகஜீவிகளாய் வாழ்வதற்காக மாடுகளை யும் பசுக்களையும் கடவுள் சிருஷ்டித்துள்ளார். மாடுகள் பசுக்கள் இவைகளின் குணாகுணம், பாதுகாக்கத்தக்க முறை, வியாதிவந்தால் அவற்றிற்கு செய்யவேண்டிய சிகிச்சை முதலிய பலவற்றையும் உணருமாறு 'காலி பரிபாலன சிகிச்சாதீபம்' என்கிற மாட்டுவாக டம் என்னும் இந்நூல் யந்திரங்களுடன் அச்சிட்டு தயாராயிருக் கிறது. மாடுகளைப்பற்றிய சாஸ்திரம் இந்துக்களுக்கிருந்தும் அப்பி யசிக்கப்படாம லிருப்பதால், இக்குறையை நிவர்த்திக்குமாறு சர்வ ஜனங்களும் எளிதில் வாசித்து உய்யும்பொருட்டு திருநெல்வேலி தா. நெல்லையப்பபிள்ளை யவர்களால் இயற்றியதுடன், மதுரை த. குப்புசாமிநாயுடு அவர்களால் பற்பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்பொருட்டு பிழையறச் சீர் திருத்தி சுத்தமாக அச்சிட்டு இருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு வரும் 'மலர்மகள் பதிப்பா' என்று பார்த்து வாங்கக் கோருகிறேன்.

மாட்டுவாகடம் விலை ரூபா	2	8	0
அசுவசாஸ்திரம் விலை ரூபா	2	8	0
ஷை இரண்டும் சேர்ந்து கலிகோ பயிண்டு	5	0	0

பாராயணத் திருப்புகழ்

'திருப்புகழ்' முத்தமிழ்ப் புலமையும் வித்தகக் கவியும் வல்ல வரும், மெய்ஞ்ஞானநுபூதிச் செல்வருமாகிய அருணகிரி நாதரால் அருளிச்செய்யப்பட்ட மிகச் சிறந்த நூலென்பது யாவரு மறிந்த தொன்று. அது செந்தமிழ் இலக்கணச் செறிவும் இலக்கண அமை தியும் சாத்திரப்பொருள் அடக்கமும் பெற்றிருத்தலோடு வட மொழிக் கலப்பும் பெரிதும் உடையதாய் உளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நூலின்று மிக அத்தியாவசியமானதும் குகனடி யார்களால் பாராயணம் செய்யப்பெற்றும் வருவதாய் இனிய பாடல் களை ஒன்று இரட்டி 'பாராயணத் திருப்புகழ்' என பெயரிட்டு சுத்தப் பிரதியாக அச்சிட்டு வெளியிடலானேன். ஆதலால் ஒவ் வொருவரும் மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில் வெளியிட்ட புஸ்தகமா என்று கவனித்து வாங்குமாறு கோருகிறேன்.

விலை ரூபா 1 0 0

அனுபோகசாதக ரகசியம்

மனிதர்களுக்கு எல்லா விஷயத்திலும் உதவியாக இருப்பது சாதகமே தவிர வேறொன்றும் கிடையாது. வேதத்தின் ஆறு அங்கங்களின் ஒன்றான ஜோதிஷ சாஸ்திரத்தின் உதவியில்லாவிடில் நம்முடைய நித்திய கர்மானுஷ்டானங்களை சரிவர நடத்த இயலாது. இந்த சாஸ்திரத்தை 18-மஹரிஷிகள் செய்திருக்கின்றனர். ஸப்த ரிஷிகள் திருவாய்மலர்ந்தருளிய "அனுபோக சாதக ரகசியம்" என்னும் இந்நூலை செஞ்சி. ஏகாம்பரமுதலியார் அவர்கள் ஏற்கனவே எழுதியதை காவேரிப்பாக்கம். தெய்வசிகாமணி சோதிடரால் பரிசோதித்து சில அவசியமான அம்சங்களைச் சேர்த்தும் நூதன முறையில் எல்லோருக்கும் பயன்படுமாறு அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை ரூபாய் 2 8 0

திருப்புகழ் விருத்தியுரை

'திருப்புகழ்' முத்தமிழ்ப் புலமையும் வித்தகக்கவியும் வல்லவரும், மெய்ஞ்ஞானானுபூதிச் செல்வருமாகிய அருணகிரிநாதரால் அருளிச் செய்யப்பட்ட மிகச் சிறந்த நூலென்பது யாவருமறிந்ததொன்று. அது செந்தமிழ் இலக்கியச் செறிவும் இலக்கணவமைதியும் சாத்திரப்பொருள் அடக்கமும் பெற்றிருத்தலோடு வடமொழிக் கலப்பும் பெரிதும் உடையதாய் உளது. அன்றியும் சந்தப் பாட்டாதலின் அதன் இன்பம் நோக்கிச் சொற்கள் திரித்தும் பெய்துரைக்கப்பட்டுள்ளன. அல்லதூஉம் பாட்டுக்கள் பலபாட பேதங்களோடும் ஆங்காங்குச் சிதைந்து பொருள் புலப்படாநிலையிற் காணப்படுகின்றன. அதனால் திருப்புகழுக்கு உரை வகுப்பது ஒரு கடின வேலையென்பது எல்லாருக்கும் இனிது விளங்கும். அத்தகைய நூலை ஒருவாறு உரையெழுதி அச்சிடவேண்டுமென்று எண்ணி முதல் 100-பாடல்களுக்கு சென்னை பச்சையப்பன் காலேஜ் தமிழாசிரியரும் 'செந்தமிழ்ச் செல்வி' பத்திராசிரியரும், 'பாவலராற்றுப்படை - புலவர்கதை - இராஜராஜன்' முதலியவற்றின் நூலாசிரியருமாகிய திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் பலவிடங்களில் தக்க மேற்கோள்களை எடுத்துக் காட்டியும், சொல்நயம், பொருணயங்களை விளக்கியும், பொருளை ஒழுங்குபடுத்தித் தூய்மைசெய்து எழுதப்பெற்று சுத்தப்பிரதியாய் வெளியிடப்பட்டிருக்கிறது.

விலை ரூபாய் 3 8 0

திருப்புகழ் 200-பாடல்

திருவண்ணாமலையில் ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் வரப்பிரசாதியாய் எழுந்தருளியிருந்த அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் 200-பாடல்களை சுத்தமாகப் பிழையின்றி அச்சிடப்பட்டிருக்கிறது இதில் சில ஐதீகப்படங்களுடன் அச்சிட்டிருக்கிறது. விலை ரூபா 1.

சரஸ்வதி புத்தகசாலை, 175-செட்டியார்தெரு, கொழும்பு

சோதிட ஹரிச்சுவடி 4-பாகம் அடங்கியது

இந்நூல் ஒவ்வொரு சோதிடர்களும் உபயோகப்படுத்தும்படியான முறையில் 1-வது பாகம், 2-வது பாகமும், கே. எஸ். மூர்த்தி அவர்களால் எழுதப்பட்டு டி. எஸ் பார்த்தசாரதி முதலியார் பி. ஏ. அவர்களால் பரிசோதித்ததும், 3-ம் பாகமும், 4-ம் பாகமும், காவேரிப்பாக்கம் கே. எம். தெய்வசிகாமணி சோதிடரால் எழுதப்பட்டு ஒன்றாக சேர்த்து பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூபா 2 8 0

102162

தேவி தோத்திரக் கொத்து

சமஸ்தலோக காரணபூதையாய் ஐம்பெருந்தேவர்க்கு உற்பத்தி லய ஸ்தானமாய் பிரமேந்திராதிகட்கு எய்துமிடுக் கணைகளைந்தும் அவரவர் இஷ்டசித்திபருளும் கருணாநிதியாய் விளங்கும் சர்வலோக மாதாவாகிய பராசக்தியினுடைய பிரபாவங்களை அறிவதற்கு ஸ்தோத்திர ரூபமாக இருக்கும். புஸ்தகங்களை ஒன்றாக சேர்த்து தேவி ஸ்தோத்திர கொத்து என்று பெயரிட்டு அழகிய சிறந்த முறையில் டைடல் பேஜ் இரண்டு கலரில் அச்சிட்டிருக்கிறது இதில் அபிராமியந்தாதி, அகிலாண்டேஸ்வரி பதிகம், சத்திகவசம், மீனாட்சியம்மன் விருத்தம், காமாட்சியம்மன் விருத்தம், வடிவுடையம்மன் விருத்தம், மாரியம்மன்பேரில் விருத்தம், உண்ணாமுலையம்மன் பதிகம், இலக்குமி தோத்திரம், சரசுவதியந்தாதி, சரஸ்வதி தோத்திரம் அடங்கியுள்ளன. விலை அணா 0 8 0

மஸ்தான் சாகிபு பாடல்

இந்நூல் குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களால் இயற்றியதை கோட்டாறு வித்வான் கா. ப. ஷெய்குத்தம்பி பாவலர் அவர்கள் முன்னிலையில் பரிசோதித்த பிரதிக் கிணங்கியது. இதில் மஸ்தான் சாகிபு அவர்கள் திருவுருவம் சேர்க்கப்பட்டுள்ளது. அழகிய காலிகோ பயிண்டு செய்தது. விலை ரூபா 3 0 0

புலிப்பாணி வைத்தியம்-500

போகர் மாணாக்கராகிய புலிப்பாணி முனிவர் பாடிய வைத்தியம்-500 என்னும் புத்தகத்தை தக்க வைத்தியர்களைக்கொண்டு சுத்தமாகப் பிழையின்றி அச்சிடப்பட்டிருக்கிறது. ஆகையால், ஒவ்வொருவரும் "மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்" பதிப்பித்ததா என்று பார்த்து வாங்கக் கோருகிறேன். விலை ரூபா 1.

கவனிப்பு:—இன்னும், இதாமான அம்மானை, நாடகம், நாவல், வைத்தியம், சோதிடம், மாந்திரீகம், ஸ்கூல் புத்தகங்களும் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன.

சரஸ்வதி புத்தகசாலை,
நெ. 175, செட்டியார் தெரு, கொழும்பு.

மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை:—1952.

மலர்மகள் வெளியீடு

பட்டினத்தடிகள் திருப்பாடற்றிரட்டு
பத்திரகிரியார் திருப்புலம்பல்

(விருத்தியுரையுடன்)

எல்லா நிலைகளிலும் உயர்ந்தநிலை துறவறநிலையென்று நம்முன்னோர் அறிவுறுத்தியிருப்பது எவரும் அறிந்த தொன்றே. அத்தகைய நிலைக்குச் சிறந்த இலக்கியமாக விளங்குபவர் பட்டினத்தடிகள் என்பதை விரித்துரைக்க வேண்டுவதில்லை. பட்டினத்தடிகள் துறவு நிலையைத் தாயுமானாருள்ளிட்ட பல சான்றோர் போற்றியிருக்கின்றனர். துறந்தவருள் தலைசிறந்து விளங்கும் பட்டினத்தடிகள் திருவாய்மலர்ந்தருளிய பாடல்களின் மாண்பை அறியாதாரில்லை. அப்பாடல்களை ஓதுவோர் உலகப்பற்றில் வெறுப்பும், கடவுள் பற்றில் விருப்பும்கொள்வர் என்பது உறுதி. அத்தகைய சிறப்பு வாய்ந்த அவர் திருப்பாடல்களை ஓதி உய்யவேண்டுவது ஒவ்வோர் அறிஞர் கடனும்.

பட்டினத்தார் திருப்பாடல்களைப் பொருளுணராது ஓதுவதனால் பெரும்பயன் விளைதல் அரிது. அக்காரணம்பற்றிக் கற்றவர்க்கும் மற்றவர்க்கும் பயன்படவேண்டிப் பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டுக்கும், பத்திரகிரியார் திருப்புலம்பலுக்கும், ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களைக்கொண்டு எளியநடையில் பல மேற்கோள்களுடன் சிறந்த விருத்தியுரை எழுதுவித்து அவை பல்கிய நூலாம் வெளியிட்டுள்ளோம்.

அந்நூல் உயர்ந்த காகிதத்தில் பிழையறச் சுத்தமாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் முதலியார் தமிழ்நாட்டுக்கு நன்குதெரிந்தவராதலால் அவர் எழுதிய உரையைப் பற்றி ஒன்றும் இங்கே விரித்துக் கூறவேண்டுவதில்லை. புத்தகத்தை வாங்கி வாசித்தால் அதன் சிறப்பும் தன்மையும் செவ்வனே விளங்கும். பட்டினத்தடிகள் திருவுருவப் படத்துடன் ஆங்காங்கு ஐதீகப்படி அரும்படங்கள் சேர்த்து உயர்ந்த காலிகோ பயிண்டு செய்தது. விலை ரூபாய் 4 0 0

கிடைக்குமிடம்:—

சரஸ்வதி புத்தகசாலை,
நெ. 175, செட்டியார் தெரு, கொழும்பு.